புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com
ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2042 | ஜூன் 02, 2011 | புரட்சி 10 | முழக்கம் 20 | விலை: ரூ.2.50

## ஊப்ளி தமிழர் பேரணியில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி வற்புறுத்தல்

# ஈழத் தமிழர் சுயநிர்ணய உரிமைக்கு அய்.நா. தலையீட்டில் வாக்கெடுப்பு






*கருநாடக மாநிலம் ஊப்ளி நகரில் ராஜபக்சேயை போர்க் குற்றவாளி என்று அறிவித்து நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி கருநாடக தமிழர்கள் மாபெரும் பேரணி ஒன்றை மே 22 ஆம் தேதி நடத்தினர். பேரணியை கழகத் தலைவர் கொளத்தூர் மணி கருப்புக் கொடியசைத்து தொடங்கி வைத்தார். பேரணியைத் தொடர்ந்து விழிப்புணர்வு மாநாடு கருநாடக வர்த்தக சபை வளாகத்தில் நடைபெற்றது. மாநாட்டில் சிறப்புரையாற்றிய கழகத் தலைவர் கொளத்தூர் மணி ஈழத் தமிழர்களிடம் அய்.நா. அவர்களுக்கான சுய நிர்ணய உரிமைக்கு வாக்கெடுப்பு நடக்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.*

இலங்கையில் இலட்சக்கணக்கான அப்பாவி தமிழர்கள் கொல்லப்படுவதற்கு காரணமான இலங்கை அதிபர் ராஜபக்சே, அவருடைய சகோதரர்கள் மற்றும் ராணுவத் தளபதிகள் அனைவரையும் கைது செய்து அனைத்துலக நீதிமன்றத்தில் நிறுத்த வேண்டும் என வலியுறுத்தி, ஊப்ளியில் கர்நாடகத் தமிழர் பேரவை சார்பில் பேரணி நடந்தது. இந்த பேரணியை கழக தலைவர் கொளத்தூர் மணி கருப்புக் கொடி அசைத்து தொடங்கினார்.

### உருவ பொம்மை எரிப்பு

பேரணியை தொடங்கி வைப்பதற்கு முன்பு, ஊப்ளி தலைமை தபால் நிலையம் எதிரேயுள்ள டாக்டர் அம்பேத்கர் சிலைக்கு கழகத் தலைவர் கொளத்தூர் மணி மாலை அணிவித்தார். டாக்டர் அம்பேத்கர் சிலை முன்பிருந்து புறப்பட்ட பேரணிக்கு கர்நாடகத் தமிழர் பேரவை, தார்வார் மாவட்டக் கிளையின் தலைவர் அ. தனஞ்செயன் தலைமை தாங்கினார். பேரணியில் திருப்பூர் தமிழ் இலக்கிய சங்கத்தின் தலைவரும் எழுத்தாளருமான அனிதா கிருஷ்ணமூர்த்தி, கர்நாடகத் தமிழ்ச் சங்கக் கூட்டமைப்பின் துணைத் தலைவர் தண்டபாணி, ஒருங்கிணைப்பாளர்கள் எம்.பி.சம்பத் மற்றும் அழகிரிசாமி, பெண்கள் சுய உதவிக் குழுத் தலைவர் தேவகி, சிவமுகா, தமிழ்த் தாய் சங்க தலைவர் ராஜசேகரப்பா மற்றும் நிர்வாகிகள், தாவண்கெரே மாவட்ட தமிழ்ச் சங்கத்தின் தலைவர் வெங்கடாசலம் மற்றும் நிர்வாகிகள், ஹாசன் தமிழ்ச் சங்கத்தின் தலைவர் தேவசேனாதிபதி மற்றும் நிர்வாகிகள், சிக்கமகளூர் ஸ்ரீ சுப்ரமணி பாரதி மகாசபாவின் செயலாளர் ரமேஷ் மற்றும் நிர்வாகிகள், சிக்கமகளூர் தமிழ் இளைஞர் நற்பணி மன்றத்தின் தலைவர் சீனிவாசன் மற்றும் நிர்வாகிகள், அகில இந்திய ஐயப்ப சேவா சங்கத்தின் தலைவர் மோகன், கர்நாடகத் தமிழா பேரவையின் பொதுச் செயலாளர் பெங்களூர் ராவணன், பெரியார் திராவிடர் கழகத்தின் பெங்களூர் கிளையின் நிர்வாகி ராஜேந்திரன், ஊப்ளி வைர மலை வைரவேல் முருகன் ஆலயக் குழுத் தலைவர் மணி மற்றும் நிர்வாகிகள், பௌத்த சங்கத் தலைவர் சித்தோதனன் உட்பட கர்நாடகம் முழுவதுமிருந்து பல்வேறு தமிழ்ச் சங்க நிர்வாகிகளும், ஊப்ளி வாழ் தமிழர்களில் ஆண்கள், பெண்கள், குழந்தைகள் என நூற்றுக்கணக்கானோர் பேரணியில் கலந்து கொண்டு ‘போர்க் குற்வாளி ராஜபக்சேவை கைது செய்’, ‘இந்திய அரசே, இந்திய அரசே, தமிழர்களைக் கொன்ற போர்க் குற்றவாளிககு உதவி செய்யாதே’, ‘உலக நாடுகளே இனப் படு கொலை நாடு இலங்கை மீது பொருளாதார தடையை விதி’ போன்ற முழக்கங்களுடன் கருப்புக் கொடிகளை ஏந்தி சென்றனர்.

ஊர்வலம் முக்கிய வீதிகள் வழியாக சென்று ஊப்ளியின் இதயப் பகுதியான ராணி சென்னம்மா சர்க்கிளை அடைந் தது. அங்கு இலங்கையில் நடந்த கொடுமைகள் குறித்து கொளத்தூர் மணி உரையாற்றினார். பிறகு ராஜபக்சேவின் உருவ பொம்மையை எரித்தனர். பிறகு ஊர்வலம் மாநாடு நடக்கும் இடமான கர்நாடக வர்த்தக சபை வளாகத்தை சென்றடைந்தது.

### விழிப்புணர்வு மாநாடு

விழிப்புணர்வு மாநாட்டை குறள் வணக்கம் பாடி சிவமுகா தண்டபாணி தொடங்கி வைத்தார். கர்நாடகத் தமிழர் பேரவையின் தார்வார் மாவட்டக் கிளையின் தலைவர் அ.தனஞ்செயன் அனைவரையும் வரவேற்றுப் பேசினார். கழகத் தலைவர் கொளத்தூர் மணியை பேரவை செயலாளர் தன்ராஜ் பொன்னாடை அணிவித்து கவுரவித்தார். அனிதா கிருஷ்ணமூர்த்தியை சி.ஆர்.ஆன்ரூஸ் பொன்னாடை அணிவித்து கவுரவித்தார். வெளி மாவட்டங்களிலிருந்து வந்திருந்த நிர்வாகிகள் அனைவருக்கும் எம்.மாரி பொன்னாடை அணிவித்து கவுரவித்தார்.

### புத்தகம் வெளியீடு

திருப்பூர் தமிழ் இலக்கிய சங்கத்தின் தலைவர் அனிதாகிருஷ்ண மூர்த்தி எழுதிய ‘என் கோபமெல்லாம் சீதையோடுதான்’ என்ற நூலை கொளத்தூர் மணி வெளியிட்டார். கர்நாடகத் தமிழ்ச் சங்க கூட்டமைப்பு ஒருங்கிணைப்பாளர் எம்.பி. சம்பத் பெற்றுக் கொண்டார். கனவுகள் பூப்பறிக்கும் மற்றும் வசந்தகால தேரோட்டம் என்ற புத்தகங்களையும் கொளத்தூர் மணி வெளியிட, சிக்கமக்ளூர் இளைஞர் மன்றத் தலைவர் சீனிவாசன் மற்றும் தாவண் கெரே மாவட்ட தலைவர் வெங்கடாசலம் ஆகியோர் பெற்றுக் கொண்டனர்.

*2 ஆம் பக்கம்*

### போர்க் குற்றவாளி 16 ஆண்டுக்குப் பிறகு கைது

*யுகோஸ்லேவியாவிலிருந்து போஸ்னியா பிரிந்து தனி நாடாகிவிட்டது. 1995 இல் அதே போஸ்னியாவில் முஸ்லீம்களுக்கு எதிரான இனப் படுகொலையை நடத்தியது செர்பியா. செர்பியா யூகோஸ்லேவியாவில் இடம் பெற்றுள்ள நாடு. இந்த படுகொலையை திட்டமிட்டு நடத்தியவன் செர்பிய இராணுவத் தளபதி மிலோடிச். மிலோடிச் இனப் படுகொலை குற்றச்சாட்டுக்கு உள்ளானான். போஸ்னியா இனப் படுகொலை தீப்பாயத்தின் முன் கொண்டு வர திட்டமிட்டது போஸ்னியா ஆட்சி. 16 ஆண்டுகளாக இராணுவ தளபதி மிலோடிச் தலைமறைவாகி விட்டான். கடந்த புதன் கிழமை அவன் கைது செய்யப்பட்டான். இனப்படுகொலையை விசாரிக்கும் பன்னாட்டுத் தீர்ப்பாயத்தின் முன் அந்த இராணுவ தளபதியை போஸ்னியா நிறுத்தவுள்ளது. இதே கதி ராஜபக்சேவுக்கும் அவரது ராணுவ தளபதிகளுக்கும் வந்தே தீரும்.*

**தலையங்கம்**

## தள்ளாடும் சமச்சீர் கல்வி

மாநிலக் கல்வித்திட்டம், மெட்ரிக் கல்வி முறை, ஆங்கிலோ இந்தியக் கல்வி முறை மற்றும் கீழ்த்திசைக் கல்வி முறை எனும் நான்கு வழிக் கல்வி முறைகளுக்கு விடை கொடுத்துவிட்டு, அனைவருக்கும் பொதுவான சமச்சீர் கல்வித் திட்டத்தை தி.மு.க. ஆட்சி அறிமுகப்படுத்தியதை புதிதாக வந்துள்ள அ.தி.மு.க. ஆட்சி நிறுத்தி வைத்துள்ளது. இது, சமூகநீதியில் நம்பிக்கையுள்ள அனைவரையும் அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. மெட்ரிகுலேஷன், ஆங்கிலோ இந்தியன் கல்வித் திட்டம் போன்ற கல்வி முறையில் படிக்கும் மாணவர்களோடு, ஏழை எளிய ஒடுக்கப்பட்ட மக்கள் போட்டியிட முடியாத 'பேத நிலை'க்கு சமச்சீர் கல்வித் திட்டம் ஒரு மாற்றுத் திட்டமாக முன் வைக்கப்பட்டது. பாடத் திட்டங்களில் மட்டும் சமச்சீர் நிலையைக் கொண்டு வந்து விட்டு, பள்ளிக் கட்டமைப்புகள் சமச்சீரற்ற நிலையில் இருக்கலாமா என்ற நியாயமான கேள்விகளும் எழுந்தன. இதுபோன்ற குறைபாடுகள் எல்லாம் எதிர் காலத்தில் கவனம் செலுத்தி சரி செய்யப்பட வேண்டியவையேயாகும். சமச்சீர் கல்வித் திட்டத்தில் தயாரிக்கப்பட்ட பாடத் திட்டத்தில் கலைஞர் கருணாநிதியின் எழுத்துகள் இடம் பிடித்திருந்ததால் முதலில் அப்பாடங்களை மட்டும் நீக்குவது என்று அமைச்சரவை முடிவெடுத்தது. தமிழக முன்னாள் முதல்வர் கலைஞர் கருணாநிதி ஆட்சியில் அரசுத் திட்டங்களில் எல்லாம் அவரது பெயர்கள் வலிந்து நுழைக்கப் பட்டன. காலம் உள்ளவரை இனி தி.மு.க. ஆட்சி தான் என்ற மனப் போக்கிலேயே செயல்பட்டனர். அதே கண்ணோட்டத்தில் தான் பாடத் திட்டத்திலும் அவரது எழுத்துகள் திணிக்கப்பட்டன.

இப்போது எழுந்துள்ள கேள்வி, சமச்சீர் கல்வித் திட்டம் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதா? அல்லது நிரந்தரமாகக் கைவிடப்பட்டுள்ளதா என்பதுதான். இது தொடர்பாக தொடரப்பட்ட பொது நலன் வழக்கில் வாதாடிய அரசு வழக்கறிஞரின் வாதங்கள் இத்திட்டத்துக்கே எதிராக அமைந்துள்ளதை சுட்டிக்காட்ட விரும்புகிறோம். அதே நேரத்தில் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் சி.வி. சண்முகம் தம்மை சந்தித்த மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி குழுவினரிடமும், தமிழ் வார ஏடு ஒன்றுக்கு அளித்துள்ள பேட்டியிலும் இத்திட்டம் கைவிடப்படாது என்று உறுதியளித்துள்ளார். வல்லுனர் குழு ஒன்று அமைத்து கல்வித் தரத்தை உயர்த்தி இத்திட்டம் அமுல்படுத்தப்படும் என்கிறார் அமைச்சர்.

மெட்ரிக்குலேஷன் பள்ளி நிர்வாகங்கள் மீண்டும் தங்கள் வணிகம் தொடருவதற்கு வாய்ப்புக் கிடைத்து விட்டதால் மகிழ்ச்சிக் கூத்தாடி தமிழக அரசை பாராட்டி, பக்கம் பக்கமாக விளம்பரங்களை வெளியிட்டு வருகின்றன. அரசின் ஆணையால் ரூ.200 கோடிக்கும் அதிகமாக செலவிட்டு அச்சிடப்பட்ட பாட நூல்கள், வீணாவதை உயர்நீதிமன்றமும் கவலையோடு சுட்டிக் காட்டியுள்ள தோடு, அ.இ.அ.தி.மு.க. கூட்டணியில் இடம் பெற்றிருந்த மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி போன்ற அமைப்புகளும், தங்கள் எதிர்ப்பை வெளிப் படுத்தியுள்ளன.

பாடத் திட்டத்தின் தரம் உயர்த்தப்பட வேண்டும் என்பது தமிழக அரசின் கருத்தாக இருக்குமானால், மேலும் மேலும் பாடங்களை சுமையாக்குவது தரத்தை உயர்த்தி விடாது என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறோம். பள்ளிக் கல்வி மாணவர்களுக்கு எளிமையாகவும், அவர்கள் விரும்பி கற்கும் வகையிலும் அவர்களின் பொது அறிவுத்திறனை மேலும் வளர்த்தெடுப்பதாகவும் இருக்க வேண்டும். தற்போதுள்ள பள்ளிப் பாடங்களின் சுமைகளால் வகுப்பறைகள் – மாணவர்கள் விரும்பாத சிறைக்கூடங்களாகவே இருக்கின்றன. அதேபோல் பள்ளிகள் வசூலிக்கும் கட்டணக் கொள்ளைகளிலும் இந்த ஆட்சி என்ன செய்யப் போகிறது என்ற எதிர்பார்ப்பு மக்களிடம் இருக்கிறது. இது தொடர்பாக அரசு அமைத்துள்ள நீதிபதி ரவிராஜன் குழுவுக்கும், பள்ளி நிர்வாகங்களுக்கும் இடையே உள்ள பிரச்சினையாக மட்டும் இந்த அரசு இதைப் பார்க்கக்கூடாது. இதில் அரசு தலையிடாது என்று தமிழக முதல்வர் கூறியிருக்கும் கருத்தை மாற்றிக் கொண்டு, மக்கள் கண்ணோட்டத்தில் இப் பிரச் சினையை அணுகவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம்.

நியாயமாக தமிழ்நாட்டின் சமூகநீதிப் போராட்ட வரலாறு பாடமாக இடம் பெற்றிருக்க வேண்டும். அதைச் செய்ய முன்வராத முன்னாள் முதல்வர் கலைஞர் கருணாநிதி தமது எழுத்துகளைக் கொண்டு வருவதிலே ஆர்வம் காட்டினார். புதிய ஆட்சி அதே அரசியல் பார்வையில் சமச்சீர் கல்வியையே நிறுத்தி வைக்கிறது.

கல்வியும் – கல்வித் திட்டமும் சமூக நீதியோடு பிரிக்க முடியாமல் இணைந்து நிற்கின்றன. இதில் கட்சி அரசியல் கண்ணோட்டத்தை திணிப்பது ஒடுக்கப்பட்ட மக்களுக்கு எதிரான அநீதியாகிவிடும்.

# தஞ்சையில் 'ஆரிய சுரண்டல்' நூல் அறிமுகக் கூட்டம்




சிற்பி இராசன் எழுதிய ஆரிய சுரண்டல் நூல் அறிமுக விழாவும், பெரியார் திராவிடர் கழக கொள்கை விளக்கப் பொதுக் கூட்டமும் தஞ்சாவூர் கொண்டிபாளையம் ரவுண்டானா அருகில் 9.5.2011 திங்கள் கிழமை மாலை 6 மணியளவில் நடைபெற்றது. கூட்டத்திற்கு ப. ஆனந்தகுமார் தலைமை வகித்தார். சோலை மாரியப்பன் வே.பதி, ந.மனோ, அ.உதயகுமார், ப. ஞானவேல் ஆகியோர் முன்னிலை வகிக்க த. விக்னேசு வரவேற்புரையாற்றினார். கூட்டத் தின் தொடக்கத்தில் சிற்பி ராசனின் 'மந்திரமல்ல தந்திரமே' அறிவியல் விளக்க நிகழ்ச்சி நடைபெற்றது.

திருச்சி புதியவன், கழகப் பொதுச் செய லாளர் விடுதலை இராசேந்திரன், கழகத் தலைவர் கொளத்தூர் மணி ஆகியோர் கருத்துரையாற் றினர். 'ஆரிய சுரண்டல்' நூலை கழகத் தலைவர் வெளியிட, பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன் பெற்றுக் கொண்டார். பேராவூரணி ஆனந்த், பெரியசாமி, மன்னார்குடி காளிதாசு, மயிலாடுதுறை மகேசு, கோகுல கண்ணன், தஞ்சை பசு. கவுதமன், தஞ்சை காமராசு, திருப்பூர் இராவணன், விழுப்புரம் பெரியார் வெங்கட், செ.பிரபு, க.இராமர், குப்பு வீரமணி உள்பட ஏராளமான தோழர்கள் நிகழ்ச்சியில் பங்கேற்றனர். வே. அறிவுமதி நன்றி கூறினார். விழுப்புரம் ந. அய்யனார் நிகழ்ச்சியை ஒருங்கிணைப்பு செய்தார்.

# காங்கிரஸ் துரோகத்தை நிறுத்த வேண்டும்

முதல் பக்கத் தொடர்ச்சி

புத்தகம் குறித்தான அறிமுக உரையை அனிதா கிருஷ்ணமூர்த்தி ஆற்றினார்.

கர்நாடகத் தமிழர்கள் அரசியல் விழிப்புணர்வு இல்லாத காரணத்தால் தங்களுக்கென்று வாதாட ஒரு எம்.பி. அல்லது எம்.எல்.ஏ. இவர்களை தேர்ந்தெடுக்க முடியாமல் அரசியல் அனாதைகளாக இருக்கிறோம். கர்நாடகம் முழுவதும் சிதறியுள்ள தமிழர்கள் ஒன்றுபட்டால் அனைத்து அரசியல் கட்சிகளும் நம்மை திரும்பிப் பார்க்கும் நிலை உண்டாகும். கர்நாடகம் முழுவதும் உள்ள தமிழ் அமைப்புக்கள் கர்நாடகத் தமிழ்ச் சங்க கூட்டமைப்பின் கீழ் ஒன்றுபட வேண்டும். இந்த ஒற்றுமையை ஏற்படுத்த ஊப்ளியில் நடந்த விழிப்புணர்வு மாநாட்டை போல் மாவட்டந்தோறும் விழிப்புணர்வு மாநாடுகள் நடத்தப்படவேண்டும் என்று சிவமுகா எம்.பி. சம்பத் கூறினார்.

இலங்கையில் லட்சக்கணக்கான தமிழர்கள் உண்ண உணவின்றி பட்டினியால் வாடுகிறார்கள் என்று கழகத் தலைவர் கொளத்தூர் மணி கூறினார். அவர் மேலும் கூறியதாவது:

"ஒரு குடும்பத்திலுள்ள அனைத்து உறுப்பினர்களுக்கும் ஒரு நாளைக்கு 5 லிட்டர் தண்ணீர் மட்டுமே கொடுக்கிறார்கள். குடிக்க, குளிக்க, சமைக்க இந்த தண்ணீர் எப்படி போதுமானதாக இருக்கும்? பெண்கள் இலங்கை வீரர்களால் பாலியல் பலாத்காரத்திற்கு கட்டாப்படுத்தப்படு கிறார்கள். இலங்கை ராணுவ வீரர்கள் முகாமிலுள்ள இளைஞர்களை விசாரணைக்கு என அழைத்துச் செல்கிறார்கள். இளைஞர்கள் திரும்பி வருவதே இல்லை. அவர்கள் கதி என்ன என்பது யாருக்கும் தெரியாது. கேட்க நாதி இல்லை. இந்த சூழலில் தமிழர்கள் சிங்களவர்களோடு எப்படி சேர்ந்து வாழ முடியும்? தமிழர்களுக்கு தங்கள் எதிர்காலத்தை நிர்ணயித்துக் கொள்ளும் வாய்ப்பை வழங்க 'சுய உரிமை வாக்கெடுப்பு' நடத்த ஐ.நா. சபை நடவடிக்கை எடுக்க வேண்டும். மனித உரிமைகளை மீறிய ராஜபக்சே, அவருடைய சகோதரர்கள் மற்றும் ராணுவ அதிகாரிகள் அனைவரையும் அனைத்துலக நீதிமன்றத்தின் முன் நிறுத்தி விசாரணை நடத்தி அவர்களுக்கு தண்டனை வழங்க வேண்டும். இலங்கை நாட்டை இனப்படுகொலை நாடு என அறிவிக்க வேண்டும். ராஜபக்சே தண்டனையிலிருந்து தப்பித்துக் கொள்ள இந்தியாவின் உதவியை நாடுகிறார். இந்திய அரசு ராஜபக்சேவிற்கு உதவி செய்யக் கூடாது. தமிழ்நாடு தேர்தல் முடிவுகள் மூலம் காங்கிரஸ் கட்சி பாடம் கற்றுக் கொள்ள வேண்டும். தமிழர்களின் உணர்வுகளை இந்திய அரசு குறைத்து மதிப்பிட்டால் விளைவுகள் விபரீதமாக இருக்கும் என எச்சரிக்கிறேன்" - இவ்வாறு கொளத்தூர் மணி பேசினார். கர்நாடகத் தமிழர் பேரவையின் மாநிலத் துணைத் தலைவர் அழகிரிசாமி மாநாட்டிற்கு தலைமை தாங்கி உரையாற்றினார். கடைசியில் பேரவையின் தார்வார் மாவட்டக் கிளையின் துணைத் தலைவர் சீனிவாசன் அனைவருக்கும் நன்றி கூறினார்.

மாநாட்டில் கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இலங்கையை இனப்படுகொலை நாடு என ஐ.நா. சபை அறிவிக்க வேண்டும்.

இந்திய அரசு சிங்கள பேரினவாத இலங்கை அரசு போர்க்குற்றங்களிலிருந்து தப்பிக்க உதவக் கூடாது.

புதியதாக தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழ்நாடுஅரசை பாராட்டுகிறோம். இலங்கை பிரச்சினைக்கு தீர்வு காண மத்திய அரசை செல்வி ஜெயலலிதா அரசு வலியுறுத்த வேண்டும்.

கர்நாடகத் தமிழர்கள் அரசியல் அங்கீகாரம் பெற தமிழ்ச் சங்க கூட்டமைப்பின் கீழ் ஒன்றுபட வேண்டும் என்ற தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கர்நாடகம் முழுவதுமிருந்து வந்திருந்த தமிழ்ச் சங்க நிர்வாகிகளின் ஆலோசனைக் கூட்டம் உணவு இடைவேளைக்குப் பின் நடந்தது. இந்தக் கூட்டத்திற்கு கர்நாடக தமிழ்ச் சங்க கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளர் சிவமுகா சம்பத் தலைமை தாங்கினார். கூட்டமைப்பின் துணைத் தலைவர் தண்ட பாணி முன்னிலை வகித்தார். கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன:

கர்நாடகத் தமிழர்களை ஒற்றுமைப்படுத்த மாவட்டங்கள் தோறும் ஊப்ளியில் நடந்ததைப்போல் விழிப்புணர்வு பேரணி மற்றும் மாநாட்டை நடத்த வேண்டும்.

அடுத்த கலந்தாய்வு கூட்டத்தை சிமோகாவில் 19.6.2011 ஞாயிற்றுக் கிழமை நடத்த வேண்டும். கூட்டத்தில் எடுக்கப்படும் முடிவிற்கேற்ப கூட்டமைப்பை பதிவு செய்ய வேண்டும். +

# ஊழலை வளர்ப்பது — அரசின் தாராளமயக் கொள்கையே

*1991–க்குப் பிறகு அறிமுகமான 'தாராளமயம்' என்ற கொள்கையால் பார்ப்பன - பன்னாட்டுச் சுரண்டலோடு ஊழலின் பாய்ச்சலும் பன்மடங்காகி விட்டது.*

சர்வதேச நிதியத்தில் (ஐ.எம்.எப்.) பொருளாதார வல்லுநராகப் பணியாற்றிய தேவ்கர் என்பவர் தலைமையிலான குழு ஒன்று சர்வதேச அளவில் நிகழும் நிதித்துறை முறைகேடுகளை ஆய்வு செய்து அண்மையில் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. இந்த அறிக்கையின்படி விடுதலை பெற்ற இந்தியாவில் 1948 முதல் 2008 வரையிலான காலத்தில் 21300 கோடி டாலர் அளவுக்கு பணம் (ரூபாய்க் கணக்கில் 9,58,500 கோடி ரூபாய்) இந்தியாவிலிருந்து வரி செலுத்தப்படாமல் கடத்தப்பட்டு வெளிநாட்டு வங்கிகளில் பதுக்கப்பட்டுள்ளது. இத்தொகையில் 68 சதவீதம் அதாவது சுமார் 6,20,000 கோடி 1991 ஆம் ஆண்டுக்குப் பின் வெளியேறியுள்ளது. அதாவது 1991 ஆம் ஆண்டில் நரசிம்மராவ் அமைச்சரவையில் நிதி அமைச்சராக இருந்த மன்மோகன் சிங் உலகமயக் கொள்கைகளை அதிரடியாக இந்தியாவில் புகுத்திய பிறகே இது நிகழ்ந்துள்ளது. ஆக 60 ஆண்டுகளில் கடத்தப் பட்ட பணத்தில் 3 இல் 2 பங்கு 20 ஆண்டுகளில் உலக மயக் கொள்கைகள் அமலாக்கப்பட்ட போது வெளியேற்றப்பட்டுள்ளது.

மற்றொரு புள்ளி விவரமும் அந்த அறிக்கையில் இடம் பெற்றுள்ளது. அதாவது 1991க்கு முன்பு வெளிநாடுகளுக்கு சராசரியாக கடத்தப்பட்ட பணம் சதவீத அடிப்படையில் 9.1 என்றால் உலகமயக் கொள்கைகள் அமல்படுத்தப்படத் தொடங்கிய பிறகு அது 16.4 சதவீதமாக அதிகரித்துள்ளது. 2002 முதல் 2006 வரையிலான நான்கு ஆண்டுகளில் அதாவது பா.ஜ.க. மற்றும் ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் ஆட்சி நடைபெற்ற ஆண்டுகளில் ஆண்டொன்றுக்கு சராசரியாக 72000 கோடி ரூபாய் வெளியேறியுள்ளது. ஸ்பெக்ட்ரம் ஊழலில் சுருட்டப்பட்ட பணம் 14 வெளிநாடுகளில் பதுக்கப்பட்டுள்ளதாக அண்மையில் வெளியாகியுள்ள செய்தியும் இதை உறுதி செய்கிறது.

முன்னாள் திட்டக்குழு உறுப்பினரும் ஓய்வு பெற்ற அரசு அதிகாரியுமான எஸ்.பி. சுக்லா கூறுகிறார்: நான் நேரடியாக கண்ணுற்ற நிகழ்வுகளின் அடிப்படையில் பார்த்தால் இதில் வியப்படைய எதுவுமில்லை. தாராளமயக் கொள்கைகள் அமல் படுத்துதல் துவங்கப்பட்ட பிறகு ஊழல் பாய்ச்சல் வேகத்தில் அதிகரித்ததற்குக் காரணம் - சந்தையே அரசாங்கத்துக்குள் நுழைந்ததனால்தான். அரசாங்கக் கொள்கைகளையும், அரசு நிர்ணயிக்க வேண்டிய விலைகளையும் தொழில் நிறுவனங்களே தீர்மானிக்கும் நிலைக்கு உயர்ந்துவிட்டன. அதிகாரிகள் மற்றும் அரசியல்வாதிகளுடன் கலந்துரையாடுதல் மற்றும் அரசு நடவடிக்கைகளிலேயே தொழில் நிறுவனங்களே நேரடியாக ஈடுபடுகின்றன. அவை அரசியல் கட்சிகள் மற்றும் ஒட்டுமொத்த ஆட்சி அமைப்பு முறைக்குள்ளேயே நுழைந்து விடுகின்றன.

அரசு அமைப்பு முறைக்குள்ளேயே அவைகள் தலையிடுவதற்கான உதாரணமாக, பா.ஜ.க. ஆட்சிக்கால அனுபவம் ஒன்றை எஸ்.பி. சுக்லா உதாரணமாகக் குறிப்பிட்டுள்ளார். பா.ஜ.க. ஆட்சிக் காலத்தில் அலைபேசி சேவையை நடத்துவதற்கான அனுமதியை அளிப்பதற்கு ஏலமுறைதான் முதலில் பின்பற்றப்பட்டது. பல பெரும் தொழில் நிறுவனங்களும் ஏலத்தில் பங்கேற்று அனுமதியைப் பெற்றிருந்தன. ஆனால் அந்த ஏலத் தொகைக்கு லாபம் ஈட்ட முடியாது என்பதை அவை உணர்ந்த பிறகு, மீண்டும் அராசங்கத்துடன் பேசி லைசென்ஸ் முறைக்கு மாறுவதற்கு அரசாங்கத்தை அவை இணங்க வைத்துவிட்டன. அதனால் ஏலத் தொகையைவிட குறைந்த விலைக்கு அலைபேசி சேவையைத் தொடர அந்த நிறுவனங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டது. அரசாங்கம் என்ன செய்திருக்க வேண்டும்? ஏலத் தொகையைக் கட்ட முடியாத நிறுவனங்களுக்கு அபராதம் விதித்துவிட்டு, அவைகளின் உரிமங்களை ரத்து செய்திருக்க வேண்டும். ஏலத்தில் பங்கேற்ற பிற திறமையான நிறுவனங்களுக்கு அனுமதி அளித்திருக்க வேண்டும் அல்லது மறு ஏலம் நடத்தியிருக்க வேண்டும். ஆனால் ஏல நிபந்தனைகளை நிறைவேற்றாத தொழில் நிறுவனங்களே குறைந்த கட்டணத்தில் அலைபேசி சேவையை நடத்த அனுமதிக்கப்பட்டன.

பொருளாதார தாராளமயமாக்கலுக்கு ஆதரவாக லாவணி பாடி வந்த தொழில் நிறுவனங்கள், உலகமய, தாராளமயம் கொள்கைகள்தான் லஞ்ச லாவண்ய லைசென்ஸ் பர்மிட் ஆட்சியிலிருந்து இந்தியாவை விடுவித்து விட்டதாக பேசி வந்தன. ஆனால் கூர்ந்து கவனித்தால் தாராளமய யுகத்தில் ஊழலுக்கான பாதைகள் தான் மாறியுள்ளன என்றும், அதன் அதி தீவிரமும் அது எட்டும் தொலைவும் அதிகரித்துள்ளன என்கிறார் சுக்லா. பர்மிட் லைசென்ஸ் ஆட்சியின்போது லஞ்ச ஊழல்கள் திரை மறைவில் நடைபெற்றன. அவை வெளியில் தெரிந்தால் அவமானம் என்று அஞ்சப்பட்டது. ஆனால் இப்போது இதெல்லாம் சகஜமப்பா என்ற பார்வை அரசியல்வாதிகள் மற்றும் அதிகார வர்க்கத்தின் மத்தியில் காணப்படுகிறது. அதனை சட்டப்பூர்வமாக்குவதைத் தவிர மற்ற அனைத்தையும் அவர்கள் செய்து விட்டார்கள்.

இந்தியாவில் ஊழலை உச்சமட்ட அளவுக்கு கெண்டு சென்றது உலகமய, தாராளமயக் கொள்கைகளே என்று குறிப்பிடும் முன்னாள் மத்திய கண்காணிப்பு ஆணையர் என். விட்டல் பின்வருமாறு கூறுகிறார்:

தாராளமயக் கொள்கைகள் வியக்கத்தக்க அளவில் ஊழலுக்கு இட்டுச் சென்றுள்ளன. முந்தைய பர்மிட் - லைசென்ஸ் ஆட்சியமைப்பில் ஊழல் என்பது சில்லரை வணிகம் போல நடத்தப்பட்டது. ஏனெனில் அப்போது தனி நபர்கள் உரிமங்களைப் பெறும் முயற்சிகளில் ஈடுபட்டு வந்தனர். தாராளமயமாக்கல் கொள்கையின் அமலாக்கத்துக்குப் பிறகு பிரம்மாண்டமான ஊழல்கள் மூலம் தான் அரசியல்வாதிகளால் பணம் சம்பாதிக்க முடிகிறது. அதற்கேற்ற வகையில் கொள்கைகளை வகுப்பதன் மூலமே அது சாத்தியமாயிற்று. தாராளமயமாக்கலுக்குப் பிறகு முதலாளித்துவ சந்தையே ஆதிக்கம் செலுத்தும் நிலை ஏற்பட்டது. எனவேதான் ஹர்ஷத் மேத்தா, கேதன் பரேக் போன்றவர்களின் ஊழலை நாடு எதிர்கொண்டது. நாடும் மக்களும் எதிர் கொண்டு வரும் பல்வேறு பிரச்சினைகளுக்குக் காரணமான உலகமயக் கொள்கைகளையும் முதலாளித்துவ அரசியல் பொருளாதாரக் கொள்கைகளையும் முறியடித்து மக்கள் நலன்களை உயர்த்திப் பிடிக்கும் கொள்கைகளுக்காகப் போராடுவதே நம் முன் உள்ள ஒரே வழியாகும்.

**'பிரன்ட்லைன்' கட்டுரையிலிருந்து**

# வாரிசு சொத்துரிமை தடுப்புச் சட்டம் தேவை

**"இறை கற்பனை இலான்"**

ஒரு மனிதன், தான் நல்வாழ்வு வாழ பொருள் வேண்டும், வீடு, தொழில், பிள்ளைகளின் படிப்பு அனைத்துக்கும் பணம் வேண்டும். உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க இடம் ஆகியவை கட்டாயத் தேவையாகும். இவை நிறைவேற பணம் வேண்டும். அதற்கு வருமானம் வேண்டும். வருமானம் ஈட்ட தொழில் வேண்டும். தொழில் செய்ய இன்று பயண வசதி ஊர்தி வேண்டும். மற்ற சராசரி குடும்பத்தார் போல் மதிக்கத்தக்க வகையில் அணி, மணி வேண்டும். பிள்ளைகள் நாம் சிரமப்படுவது போல் இல்லாமல் பிற்காலத்தில் வாழ்வார்கள் என்ற நம்பிக்கையில் படிக்க வைக்க வேண்டும். அதற்கு நல்ல பள்ளியில் சேர்க்கப் பணம் வேண்டும். பணம் தேற்ற உழைப்பாளி பிழையாய் உழைத்து வேறு வழியில் பணம் சேர்க்க வேண்டும். வணிகர் மக்களை அதிகமாக ஏமாற்றி விற்க வேண்டும். பெரு வணிகர் என்றால் வங்கிக் கடன் மற்றவர்கள் பெற முடியாத நிலையில் எப்படியாவது பெற்று பொருளீட்ட வேண்டும். அரசு அலுவலர்கள் தம் பிள்ளைகளுக்கு பள்ளி, கல்லூரிகளுக்கு செலவு செய்ய இலஞ்சம் வாங்க வேண்டும். ஒப்பந்தக்காரர்கள் முறை தவறி சிறிதாகவோ, பெரிதாகவோ திருட வேண்டும். அமைச்சர்கள் அவர்களின் உதவிகரமானவர்கள், காவலர்கள் யாவரும் தவறு செய்து சரியாக இருப்பதாகக் கணக்குக்காட்டி பொருளீட்ட வேண்டும். இவைகளை சீராக்கிக் கொள்ள, வரிகளிலிருந்து தப்பிக்க மெத்தப் படித்த கணக்கர், வழக்காடிகள் ஆகியோரைப் பேணி பணம் செலவு செய்து பணம் பார்க்க வேண்டும். மருத்துவர்கள், நோய்களைக் காட்டி மக்களைச் சுரண்ட வேண்டும். பொறியாளர்கள் கபடமாக சம்பாதிக்க வேண்டும். இப்படிப் பொருளாதாரக் குற்றங்கள் பல்கிப் பெருகிவிட்டன. ஒவ்வொருவரும் தான் தன் வரைத்தான் இலஞ்சம், சுரண்டலை எதிர்க்கிறார்கள். ஆனால் ஒவ்வொருவரும் தமக்காக அந்தத் தவறையே செய்ய வேண்டிய நிலையில் உள்ளனர். என்ன தான் தீர்வு? சட்டம், பரப்புரை, நீதிக் கதைகள் எல்லாம் பயனற்றுப் போய்விட்டன.

இதற்கெல்லாம் என்ன காரணம்? பணம் பண்ண வேண்டும். எதைச் செய்தாவது சாமர்த்தியம் செய்து சம்பாதிக்க வேண்டும். எவனையாவது மொட்டை அடிக்க வேண்டும் அல்லது அரசுச் சொத்தை, பணத்தை ஏதாவது ஒரு வழியில் சூறையாட வேண்டும். இதற்கு மாற்றே இல்லையா? யார் வேண்டுமானாலும், எப்படி வேண்டுமானாலும், எவ்வளவு வேண்டுமானாலும், பணம், சொத்து சேர்க்கலாம் என்ற நிலை உள்ளது. ஏன் என்றால் எவ்வளவு வேண்டுமானாலும் பணம் சேர்த்து எப்படிப்பட்ட இன்பமும் நுகரலாம் என்ற நிலை உள்ளது. அப்படி இருக்கும்போது யார் நேர் வழியில் மட்டும் பணம் சேர்ப்பார்கள்?

தவறான வழியில் பணம் சேர்த்து அனுபவிப்பவர்களைப் பார்த்து மற்றவர்களும் ஆயத்தமாகிறார்கள். நம் மத்தியில் தவறுகள், குற்றங்கள் நடைபெறாமல் எப்படி இருக்கும்? எங்கெங்கோ நடைபெறும் தவறுகள் அவரவர் வீட்டு வாசலுக்கும் வராது என்பதற்கு என்ன உத்திரவாதம்? இதற்கு மாற்றே இல்லையா? மாற்று வேண்டாமா, இந்தக் குறைபாடுகளை ஓரளவாவது தடுக்க இளைய சமுதாயமே உனக்குப் பொறுப்பில்லையா? அறிவு,ஆற்றல் இல்லையா? இந்த சேற்றிலேயே, புதை மண்ணிலேயே ஏன் அமிழ்ந்து போகிறாய்? சிந்தனையை மாற்று இந்த மாற்றத்தை யார் மறுப்பார்கள்? இன்று இதனைச் செய்ய வேண்டிய நிலையில் இருக்கும் அதிகாரிகள் வர்க்கமும், அரசியல்வாதி வர்க்கமும் தான் தடைக்கல்லாய் நிற்கும். ஆனால் இவர்களைச் செய்ய வைக்க வேண்டும். ஆனால் எப்படி? இந்த சுய நலக் கூட்டத்தின் நுகழ்ச்சியை சம்மட்டியால் அடிக்க ஏ! இளைய சமுதாயமே நீ, நீ தான் முன் வர வேண்டும். ஓர் எண்ண ஓட்டத்தை உருவாக்குங்கள். ஒவ்வொரு மனிதனும் உழைத்து வாழ வேண்டும். எல்லோரும் உழைக்க வாய்ப்பும் தரப்பட வேண்டும். வாழும் காலத்தில் தம் குடும்பத்திற்கு, உற்றார் உறவினருக்கு உதவட்டும். அதன் பின் தனது சொத்தினை அசையாச் சொத்தினை தம் சந்ததிக்கு எழுதி வைக்கக் கூடாது. அதனை சட்டம் தடுக்க வேண்டும். அப்படி ஒரு சட்டம் கொண்டு வந்தப் பின் இந்த நாட்டின் நிலைமையை சற்று எண்ணிப் பாருங்கள். தன் பிள்ளைக்கு சொத்துக்களை வைத்துவிட்டுப் போக முடியாது என்ற நிலை வந்தால் தவறுகளைச் செய்து சொத்து சேகரிக்க வேண்டும் என்று யார் நினைப்பார்கள்? தானும், தன் மக்களும் வாழ்க்கைச் சக்கரம் ஓட்டுவதற்கு மட்டுமே பணம், சொத்து சேர்ப்பார்கள் இல்லையா? சரி உழைத்து சம்பாதித்த சொத்தினை என்ன செய்வது என்று எண்ணுகிறீர்கள் அல்லவா? விற்கலாம். வரி செலுத்தியது போக மீதம் உள்ளதை தான் அனுபவிக்கலாம். உற்றார் உறவினருக்கு கொடுத்து மகிழ்ந்து வாழலாம். ஆனால் அரசிடம் தரப்படும் பணம் அதிகாரிகளால் அரசியல்வாதிகளால் சூறையாடப்படும் என்று அச்சம் உள்ளதா? தேவையில்லை. அவர்களுக்கு தம் சந்ததிக்கு எழுதி வைத்துவிட்டுப் போக முடியாது அல்லவா? பணம் மக்கள் நலனுக்குச் செலவிடும்போது அனைவரும் அனுபவிக்கும் நிலை ஏற்பட்டுவிடும். அரசு மக்கள் அனைவரின் கல்வி, மருத்துவம் போன்ற தேவைகளுக்கு பொறுப்பேற்க வேண்டும். எனவே வாரிசு சொத்துரிமை தடுப்புச் சட்டம் தேவை என உணருங்கள். இதனைச் செய்ய முடியுமா? என்று சிந்திக்கிறீர்களா? முடியும் ஏன் முடியாது? இதனை இரண்டு சாதிகள் மட்டுமே

4 ஆம் பக்கம்

PURATCHI PERIYAR MUZHAKKAM TAMIL WEEKLY REG.NO.TN/CCN/488/09-11 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/09-11
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/7776

## கழகத் தோழர்கள் உடனடியாக களமிறங்கினர்

# தலித் மாணவர்களைத் தாக்கிய பார்ப்பன அர்ச்சகர்கள் சிறையில்

கோயிலில் வழிபட வந்த அருந்ததியர் சமூக மாணவர்கள் விபூதியைத் தொட்டதால் தாக்கிய பார்ப்பன அர்ச்சகர் ஜம்புநாதன் (49), அவரது மகன் சுகவனம் ஆகியோர் கைது செய்யப்பட்டு கோவை மத்திய சிறையில் அடைக்கப் பட்டனர். ஆனால் தீண்டாமைத் தடுப்புச் சட்டத்தின் கீழ் வழக்குகளைப் பதிவு செய்யாமல், மோசமான வார்த்தைகளால் திட்டியதாகவும் (பிரிவு 294பி), தாக்கியதாகவும் (பிரிவு 32) காவல்துறை வழக்குப் பதிவு செய்துள்ளது. மேட்டுப்பாளையம் பெரியார் திராவிடர் கழகத் தோழர்கள் மற்றும் சாதி ஒழிப்பு முன்னணித் தோழர்கள் இதில் தீவிரமாக செயல்பட்டு, குற்றவாளிகளைத் தண்டிப்பதில் முனைப்பாக செயல்பட்டுள்ளனர்.

கடந்த 28 ஆம் தேதி காலை மேட்டுப்பாளையத்தில் கூட்டுறவு காலனியில் உள்ள சக்தி விநாயகர் கோயிலில் பிளஸ் 2 படித்துள்ள வினித் (17), அவரது தங்கை சுருதி (14), உறவினர் பெண் ஜனனி (6) ஆகியோர் சாமி கும்பிடச் சென்றுள்ளனர். பிளஸ் 2 தேர்வில் வெற்றிப் பெற்ற வினித், தனது தங்கை சுருதியின் 10 ஆம் வகுப்பு தேர்வு முடிவுகள் வெளிவரும் நாளில், தங்கைக்காக சாமி கும்பிட வந்திருந்தார். அந்தக் கோயில் மேல் தட்டுப் பகுதி மக்கள் வாழும் இடத்தில் உள்ளது. கோயிலில் அர்ச்சகர் எவரும் இல்லை. சாமி கும்பிட்ட பிறகு, கைக்கு அருகே இருந்த விபூதி தட்டிலிருந்து விபூதியை எடுத்து வைத்துக் கொண்டு, தனது தங்கையின் நெற்றியில் பூசியுள்ளார்.

அப்போது அங்கு வந்த பார்ப்பன அர்ச்சகர் ஜம்புநாதன் (49) வினித்தைப் பார்த்து, ‘நீ யாரடா? எந்தப் பகுதி?’ என்று கேட்டுள்ளார். வினித் ‘நடுவூர் பகுதி’ என்று கூறியவுடன், ‘சக்கிலியப் பயலா நீ; கோயிலுக்குள் வரவே உனக்கு உரிமை கிடையாது; விபூதி தட்டிலேயே கை வைக்கிறாயா?’ என்று கூறி அடித்தார். அப்போது அங்கே சென்ற பொது மக்கள் சிலர் பார்ப்பன அர்ச்சகர் அடிப்பதைப் பார்த்து, வேதனைப்பட்டு அடிப்பதை நிறுத்துமாறு கண்டித்துள்ளனர். அப்போது, பார்ப்பன அர்ச்சகர் மகன் சுகவனமும் ஓடி வந்து, ‘சக்கிலியப் பயலே; உனக்கு அவ்வளவு திமிரா?” என்று, கன்னத்தில் மாறி மாறி அடித்துள்ளான்.

செய்தியறிந்த பெரியார் திராவிடர் கழகத் தோழர்கள் கழக நகர அமைப்பாளர் சந்திரசேகர் நாகராசு (மாவட்ட செயலாளர்), சண்முகநாதன் (மாவட்ட அமைப்பாளர்), பாபு மற்றும் சாதி ஒழிப்பு முன்னணியைச் சார்ந்த தோழர்கள் நாகேந்திரன், ராமச்சந்திரன், வழக்கறிஞர் அலெக்ஸ் என்கிற கிருட்டிணமூர்த்தி ஆகியோர் காவல் நிலையம் சென்று தாக்கிய பார்ப்பன அர்ச்சகர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தினர். வினித்தின் தந்தை கிருட்டிணன், வேலை முடிந்து வீடு திரும்பியவுடன் நடந்த சம்பவத்தைக் கேட்டு, தனது நண்பர்களுடன் நேராக காவல் நிலையம் சென்று புகார் தந்தார்.

இதற்கிடையே பார்ப்பன அர்ச்சகர்களுக்கு ஆதரவாக கோயில் நிர்வாகியாக உள்ள காங்கிரஸ் பிரமுகர் மற்றும் தி.மு.க. முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் அருண்குமார் மற்றும் கோவில் உள்ள பகுதியைச் சேர்ந்த சாதி ஆதிக்கவாதிகள் காவல்நிலையம் வந்து, பார்ப்பன அர்ச்சகர்கள் மீது வழக்குப் போடக் கூடாது என்று மிரட்டினர். தீண்டாமைக் குற்றத்தின் கீழ் நடவடிக்கை எடுக்காவிட்டால், பெரியார் திராவிடர் கழகம் போராட்டத்தில் ஈடுபடும் என்று கழகத் தோழர்கள் எச்சரித்தனர்.

இதனைத் தொடர்ந்து காவல்துறை ஆய்வாளர் சோமசுந்தரம், உதவி ஆய்வாளர் தங்கவேல், தலைமை காவலர் வேலுமணி ஆகியோர் சம்பவம் நடந்த இடத்துக்கு நேரில் சென்று விசாரணை நடத்தி, குற்றம் நடந்தது உண்மையே என்பதை உறுதி செய்து, பார்ப்பன அர்ச்சகரையும் அவரது மகனையும் கைது செய்து மேட்டுப் பாளையம் நகர நீதிமன்றத்தில் நேர் நிறுத்தினர். நீதிபதி 15 நாள் காவலில் வைக்க உத்தரவிட்டார். கோவை மத்திய சிறையில் பார்ப்பன அர்ச்சகர்கள் அடைக்கப்பட்டனர். வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் வழக்கை விசாரிக்கக் கோரி கழகத் தோழர்கள் வற்புறுத்தி வருகிறார்கள்.

## திருப்பூரில் கண்டன ஆர்ப்பாட்டம்




21.04.2011 வியாழக் கிழமை மாலை 4 மணிக்கு திருப்பூர் மாநகராட்சிக்கு முன்பு திருப்பூர் மாவட்ட கழகத்தின் சார்பாக ஈழத் தமிழர்களுக்கு துரோகம் இழைத்த இந்திய அரசை கண்டித்து, ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத் திற்கு மாவட்ட தலைவர் சு. துரைசாமி தலைமை வகித்தார். மாவட்ட செயலாளர் கருமலையப்பன் முன்னிலை வகித்தார். ஆதி தமிழர் பேரவை பொதுச் செயலாளர் நீலவேந்தன், வழக்கறிஞர் கனகசபை, வழக்கறிஞர் உமர், பிரசாந்த், தியாகு கண்டன உரையாற்றினர்.

*3 ஆம் பக்கத் தொடர்ச்சி*

தடுக்கும். ஒன்று அரசு அதிகார வர்க்கம். மற்றொன்று அரசியல்வாதி வர்க்கம். இந்தச் சட்டம் கொண்டுவர வேண்டிய இடத்தில் இருப்பதும் அவர்களே. திண்ணையில் படுத்திருப்பவன் உட்கார மற்றவர்களுக்கு இடம் கொடுக்க முனகுவான். அதைவிட கூடுதலாக இவன் குறுக்கே நிற்பான்.

எனவே இளைய சமுதாயமே நீ! நீதான் முன் வரவேண்டும். முதலில் இதனை ஒரு கருத்தாக்கமாக ஆக்குங்கள். விவாதமாக ஆக்குங்கள். குறைகள் வந்தால் திருத்திக் கொள்ளலாம். ஆனால் இதில் தான் வெற்றிகரமான மாற்றம் கிடைக்கும். மனித சமூகம் ‘வாழ வேண்டுமே’ என்று கவலை சுமந்து வாழும் நிலை மாறும். இப்போது மதத்தில், மதச் சட்டத்தில் தலையிடுகிறீர்கள் என்று சிலர் கூப்பாடு போடுவர். மனிதம் சிறந்து வாழ மதம் தன்னை மாற்றிக் கொள்ள வேண்டுமே தவிர மனிதன் மதத்திற்காக வாழ வேண்டியதில்லை. மனிதனுக்கு அனுசரணையாகத்தான் மதம் இருக்க வேண்டும் என உணர்த்துவோம். வல்லரசாக வரவேண்டும் என்பார் சிலர். யாருக்கு லாபம்? மேற்சொன்ன இரண்டு வர்க்கம் தான் மகிழ்ந்து வாழ முடியும். பெரிய நாட்டுப் பெரிய மனிதன் என்று ஒரு சிலர் வெளிநாட்டானின் மாலை, மரியாதைகளைப் பெற்றுக் கொண்டு நாட்டை ஒரு வெள்ளைக் காரனுக்குப் பதிலாக பல வெளிநாட்டானுக்கு விற்கிறார்கள். ஆனால் நல்லரசாக இருந்தால் எவனையும் நாம் ஒன்றுபட்டு எதிர்க்கலாம். நலமாக வாழலாம். எனவே உழைக்க நாமும் கொழிக்க அவர்களுமா? எனவே மாற்றிச் சிந்தியுங்கள். “வாரிசு சொத்துரிமை தடுப்புச் சட்டம் தேவை” என முழங்க முன் வாருங்கள் .

“இது ஒரு பக்கா தனி உடைமை உலகம். தகப்பனுக்கும், மகனுக்கும், புருசனுக்கும், பெண்சாதிக்கும் உள்ள சம்பந்தமே தனி உடைமையைக் குறிக்கொண்ட போட்டி வாழ்வே அல்லாமல் வேறு அன்பையும் காதலையும் அடிப்படையாகக் கொண்டதல்ல. இதற்கு உதாரணம் வேண்டுமானால் பாகம் பிரித்துக் கொண்ட பிறகும், சீவனாம்சம் பெற்றுக் கொண்ட பிறகும் இவர்களது நடவடிக்கைகளைக் கவனித்தால் விளங்கும்.”

**– பெரியார், ‘குடிஅரசு’ 17.10.1937**

## நன்கொடை

### திருப்பூர் மாவட்ட கழகத் தலைவர் சு. துரைசாமி இல்ல மணவிழா

திருப்பூர் மாவட்ட கழகத் தலைவர் சு. துரைசாமி - சுசீலா ஆகியோரின் மகள் துரை. சுபாசினி - இரா. கார்த்திகேயன் வாழ்க்கை ஒப்பந்த நிகழ்வு, கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் 29.5.2011 காலை 9 மணியளவில் திருப்பூர் இலட்சுமி திருமண மண்டபத்தில் சிறப்புடன் நடைபெற்றது. கழகப் பொதுச் செயலாளர்கள் கோவை இராமகிருட்டிணன், விடுதலை இராசேந்திரன், பேராசிரியர்கள் புரட்சிக் கொடி, சரசுவதி, ஆசிரியை சிவகாமி வாழ்த்துரை வழங்கினர். பொள்ளாச்சி கா.சு. நாகராசு நிகழ்வுகளை தொகுத்து வழங்கினார். கழக வளர்ச்சிக்கு ரூ.50,000, கழக ஏட்டுக்கு ரூ.25,000 - மணவிழா மகிழ்வாக மாவட்ட தலைவர் சு. துரைசாமி, கழகத் தலைவர் மற்றும் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரனிடம் வழங்கினார்.

### புதுவை கழகத் தோழர் அ.பாஸ்கரன் – தனலட்சுமி மணவிழா

புதுவை கழகத் தோழர் அ. பாஸ்கரன் - துரை. தனலட்சுமி வாழ்க்கைத் துணை நல ஒப்பந்த நிகழ்வு 27.3.2011 மாலை 5 மணி அளவில் அரியாங்குப்பம் தீர்க்க சுமங்கிலி திருமண மண்டபத்தில் கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் தலைமையில் நிகழ்ந்தது. மாநில கழகத் தலைவர் லோகு. அய்யப்பன், பொருளாளர் வீரமோகன், செ.சுரேசு வாழ்த்துரை வழங்கினர். மண விழா மகிழ்வாக கழக ஏட்டுக்கு ரூபாய் ஆயிரம் (நன்கொடை) வழங்கப்பட்டது.

### பா.செ. தம்பி பிரபாகரன் பிறந்த நாள் நன்கொடை

சேலம் மாவட்டம் அம்மாபேட்டை கழகத் தோழர் ல.பா. செந்தில்குமார் - கு.பாரதிதேவி ஆகியோரின் மகன் பா.செ.தம்பி பிரபாகரன் 2வது பிறந்த நாள் நினைவாக (16.5.2011) கழக ஏட்டிற்கு ரூ.1000 நன்கொடையாக வழங்கப்பட்டது. நன்கொடைகளை நன்றியுடன் பெற்றுக் கொண்டோம். (ஆர்)

### திருத்தம்

**கானா கலைஞர் புதூர் துரைக்கு ‘கானா மாமணி’ விருது**


கழகத் தலைவர் கொளத்தூர் மணியிடம் ‘கானா மாமணி’ விருது பெற்றவர் பிரபல கானா பாடல் கலைஞர் புதூர் துரை. அவரது பெயர், கடந்த இதழில் தவறாக வெளி வந்து விட்டது. தவறுக்கு வருந்துகிறோம். (ஆர்)

“புரட்சிப் பெரியார் முழக்கம்”
**ஆண்டுக்கட்டணம் ரூ.150/-**
தொடர்புக்கு: ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர், திருவான்மியூர்,
சென்னை-41. ✆ 99416 13535

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 2nd June 2011

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.



புரட்சிப்

# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2042 | ஜூன் 09, 2011 | புரட்சி 10 | முழக்கம் 21 | விலை: ரூ.2.50


# தஞ்சை மாவட்டத்தில் கழகம் வலிமையாகிறது




பெரியார் திராவிடர் கழகம் பல மாவட்டங்களில் வலிமையாக செயல்பட்டு வந்தாலும், தஞ்சை மாவட்டத்தில் அங்கொன்றும் இங்கொன்றுமாக சில தோழர்கள் மட்டுமே செயல்பட்டு வந்தனர். தற்போது தஞ்சை மாவட்டத்தில் பல புதிய இளைஞர்களும், மாற்று அமைப்பில் இருந்து விலகியவர்களும் கழகத்தை நோக்கி வந்து கொண்டிருக்கிறார்கள். பல்வேறு அமைப்புகளை சார்ந்தவர்களும் கழகப் பணிகளுக்கு ஆதரவு தெரிவிக்கின்றனர். சுமார் ஐந்து ஆண்டு களுக்கு முன்பு திராவிடர் கழகத்திலிருந்த விலகிய, பகுத்தறிவு பாவலர் பள்ளத்தூர் அ.சி. நாவலரசன், தற்போது பெரியார் திராவிடர் கழக மேடைகளில் பகுத்தறிவு இசை நிகழ்ச்சியை நடத்தி வருகிறார். தஞ்சை மாநகரில் சில மாதங்களுக்கு முன்பு கழகத்தில் இணைந்த இளைஞர்கள், கொடி மரத்து மூலையில் நடத்திய பொதுக் கூட்டம் பற்றி கடந்த வார 'புரட்சிப் பெரியார் முழக்க'த்தில் செய்தி வெளி வந்தது. அதனை தொடர்ந்து நடைபெற்ற நிகழ்வுகள்:

### பேராவூரணி

31.5.2011 செவ்வாய் கிழமை அன்று மாலை 6 மணிக்கு, பேராவூரணி அண்ணாசிலை அருகில் கழக துவக்க விழா மற்றும் போர்க் குற்றவாளி ராஜ பக்சேவை, பன்னாட்டு நீதிமன்றத்தின் விசாரணைக் குட்படுத்த வலியுறுத்தி பொதுக் கூட்டம் நடை பெற்றது. தோழர் சிற்பி இராசனின் மந்திரமா தந்திரமா நிகழ்ச்சியும், பள்ளத்தூர் நாவலரசன் குழுவினரின் பகுத்தறிவு இசை நிகழ்ச்சியும் நடைபெற்றது. பொதுக் கூட்டத்திற்கு பெரியார் பெருந்தொண்டர் ப.அ.வைத்திலிங்கம் தலைமை தாங்கினார். சித. திருவேங்கடம் வரவேற்புரை யாற்றினார். முன்னிலை வகித்த சோலை. மாரியப்பன், கு.பாரி ஆகியோரைத் தொடர்ந்து கழகத் தலைவர் கொளத்தூர் மணி, பொதுச் செயலாளர் கோவை இராமகிருட்டிணன் சிறப்புரையாற்றினர். சீனி. கண்ணன் நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார். கா. பெரியசாமி நன்றியுரையாற்றினார். விடுதலை சிறுத்தைகள் கட்சியின் மாநில பொறுப்பாளர்

4 ஆம் பக்கம்

# தூக்குத் தண்டனைக்குள்ளான சீக்கிய பேராசிரியரின் கருணை மனு நிராகரிப்பு: பெரியார் திராவிடர் கழகம் கண்டனம்

தேவேந்தர் பால்சிங் புல்லார் என்ற சீக்கிய பேராசிரியரின் கருணை மனுவை உள்துறை அமைச்சகத்தின் பரிந்துரையை ஏற்று குடியரசுத் தலைவர் நிராகரித்து விட்டார். தூக்குத் தண்டனை நிறைவேற்றத்திற்கு வழி திறக்கப்பட்டுள்ளதற்கு பெரியார் திராவிடர் கழகம் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. தூக்குத் தண்டனைக்கு எதிராக அய்.நா.வும் உலக நாடுகளும் குரல் கொடுத்து வரும் நிலையில், குடியரசுத் தலைவரின் இந்த நடவடிக்கை கடும் கண்டனத்துக்கு உரியது என்று கழகத் தலைவர் கொளத்தூர் மணி, கழக சார்பில் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

கழகத் தலைவர் கொளத்தூர் மணி விடுத்துள்ள அறிக்கை:

பஞ்சாப் பேராசிரியர் தேவேந்தர் பால்சிங் புல்லாரின் கருணை மனுவை குடியரசுத் தலைவர் கடந்த மே 25 ஆம் தேதி தள்ளுபடி செய்துள்ளதாக வெளியிட்டுள்ள அறிவிப்பு கடும் கண்டனத்துக்கு உரியது. ப. சிதம்பரம் உள்துறை அமைச்சகம் - இதற்கு பரிந்துரை வழங்கியிருக்கிறது.

பேராசிரியர் தேவேந்தர் பால்சிங் புல்லார் (47) தடா சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு கடந்த 16 ஆண்டுகளாக சிறைக்குள் அடைக்கப்பட்டுள்ளார்.

1991 ஆம் ஆண்டு சண்டிகர் நகரில் காவல்துறை அதிகாரி ஒருவர் கொல்லப்பட்ட வழக்கில் இவரையும் மற்றும் இவரது நண்பர்களையும் சந்தேகத்தின் அடிப்படையில் போலீசார் தேட ஆரம்பித்தனர். புல்லார் தலைமறைவாகிவிட்டார். இதனால் புல்லாரின் தந்தை மற்றும் அவரது மனைவியின் தந்தையான மாமனார், அவரது குடும்ப நண்பர் ஆகியோரை சட்ட விரோதமாகக் கைது செய்து காவலில் வைத்து சித்திரவதை செய்து கொன்று விட்டனர். அதற்குப் பிறகு இரண்டு ஆண்டுகள் கழித்து 1993 ஆம் ஆண்டு புதுடில்லியில் டில்லி இளைஞர் காங்கிரஸ் தலைவர் பயணம் செய்த காரில் குண்டு வெடித்தது. இதில் காங்கிரஸ் தலைவர் காயத்துடன் உயிர் தப்பினார். அவரது பாதுகாவலர்கள் கொல்லப்பட்டனர்.

சண்டிகர் வழக்கில் பேராசிரியர் புல்லாரைத் தேடி வந்த காவல்துறை, இந்த வழக்கையும் அவர் மீது போட்டு தேடத் தொடங்கியது. 1980, 1990 ஆம் ஆண்டுகளில் காலிஸ்தான் விடுதலைப் போராட்டம் தீவிரமாக இருந்த காலகட்டத்தில் காவல்துறை சீக்கிய இளைஞர்களை மூர்க்கத்தனமாக வேட்டை யாடி வந்தது. பல அப்பாவிகள் கொல்லப்பட்டனர். இந்த நிலையில் காவல்துறையின் கையில் சிக்கி விடாமல் தப்பிக்க, தேவேந்தர் பால்சிங் புல்லார் கனடா போக திட்டமிட்டார். போலிப் பெயரில் பயணம் செய்ததாக வழியில் ஜெர்மனியில் கைது செய்யப்பட்டு, அங்கு ஒரு மாத சிறைவாசத்துக்குப் பிறகு ஜெர்மன் நாட்டின் அனுமதியோடு இந்தியா வுக்கு கொண்டு வரப்பட்டார். தடா சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டு விசாரிக்கப்பட்டார். தடா சட்டத்தின் கீழ் சித்திரவதை செய்து பெறப்பட்ட ஒப்புதல் வாக்குமூலத்தை மட்டுமே சாட்சியாக ஏற்று, அவருக்குத் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது. இவரோடு குற்றம்சாட்டப்பட்ட மற்றவர்கள் விடுதலை செய்யப்பட்டனர். தொடரப் பட்டது சதி வழக்கு. ஒரே ஒருவர் மட்டுமே எப்படி சதிக் குற்றத்தில் ஈடுபட்டிருக்க முடியும்? அதுவும் வழக்கை விசாரித்த 3 உச்சநீதிமன்ற நீதிபதிகள் கொண்ட அமர்வில், தலைமை நீதிபதி எம்.பி.ஷா, பேராசிரியர் புல்லாரை விடுதலை செய்து தீர்ப்பளித்தார். ஏனைய இரண்டு நீதிபதிகள் ஒப்புதல் வாக்குமூல அடிப்படையில் தூக்குத் தண்டனை விதித்தனர்.

ஜெர்மன் நாட்டில் கைது செய்யப்பட்ட ஒருவர், அங்கிருந்து இந்தியாவுக்கு நாடு கடத்தப்பட்டுள்ள நிலையில் ஜெர்மன் நாட்டின் சட்டப்படி தூக்குத் தண்டனை விதிக்க முடியாது. சிறையில் 16 ஆண்டுகளாக 22 மணி நேரம் தனிமையாக அடைத்து வைக்கப்பட்டதால், மனநிலை பாதிப்புக்குள்ளான புல்லார், கடந்த ஜனவரி மாதத்திலிருந்து புதுடில்லி மனநல மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள் ளார். இதனால் அவரது தூக்குத் தண்டனையை ஆயுள் தண்டனையாக மாற்றக் கோரி உச்சநீதி மன்றத்திலும் வழக்குத் தொடரப்பட்டு, உச்சநீதி மன்றம் மத்திய அரசுக்கு விளக்கம் கேட்டு தாக்கீது பிறப்பித்துள்ளது. இந்த நிலையில், உள்துறை அமைச்சகம், கருணை மனுவை நிராகரிக்குமாறு குடியரசுத் தலைவருக்கு பரிந்துரை செய்துள்ளது. இது பழிவாங்கும் உள்நோக்கம் கொண்டதேயாகும். புதுடில்லியில் 3000 சீக்கியர்கள் படுகொலைக்கு காரணமான குற்றவாளிகளில் ஒருவர் கூட தண்டிக்கப்படவில்லை. குற்றம் சாட்டப்பட்டவர் களையே தங்களுக்கு எதிராக சாட்சியமாக்கிடும் தடா சட்டம் என்ற காட்டுமிராண்டி சட்டத்தின் கீழ் முறையான விசாரணைகளின்றி வழங்கப்பட்டுள்ள இந்த தூக்குத் தண்டனை நிறைவேற்றப்பட்டு விட்டால் இந்தியாவின் நீதித்துறை உலக அரங்கில் தலைகுனிந்து நிற்கும் நிலை வந்துவிடும். மனித உரிமையாளர்கள் இதற்கு எதிராக கடும் கண்டனம் தெரிவிக்க வேண்டும்.

நீண்டகாலமாக பரிசீலனையில் இருக்கும் கருணை மனுக்களை தள்ளுபடி செய்யத் தொடங்கி யிருப்பது வன்மையான கண்டனத்துக்கு உரியதாகும். முளையிலேயே இந்த முயற்சிகள முறியடிக்கப்பட வேண்டும். பெரியார் திராவிடர் கழகம் இந்த நடவடிக்கையை வன்மையாகக் கண்டிக்கிறது.

**தலையங்கம்**

# ஊழலின் ஊற்றுக்கண்

ஊழலின் ஊற்றுக்கண் எது? ஊழலின் உற்பத்தி எங்கிருந்து தொடங்குகிறது? இந்தக் கேள்விக்கு சரியாக பதில் கூற வேண்டுமானால் பார்ப்பனியமும் அது பெற்றெடுத்த இந்து மதமுமே என்று உரத்துக் கூற முடியும். உழைக்கின்ற மக்களை 'சூத்திரர்', 'பஞ்சமர்' என்று முத்திரை குத்தி, அதை கடவுளின் ஆணையாக்கி, உழைக்காத ஒரு கூட்டம், சமூகச் சுரண்டலுக்கு வழி வகுத்துக் கொண்டது. இந்த சமூக அமைப்பிலிருந்துதான் ஊழல் தொடங்குகிறது. இந்த ஊழல் பார்ப்பனிய சமூகத்தின் விளைவுகளால் அரசியல் மற்றும் பொருளாதார ஊழல்கள் அணி வகுத்தன.

"மனிதனை மனிதன் இழிவுபடுத்தி அடிமைப்படுத்தும் குணமும், மனிதன் உழைப்பை மனிதன் அபகரித்துப் பொருள் சேர்த்து உழைப்பாளியைப் பட்டினிப் போட்டுக் கொடுமைப்படுத்திய குணமும், ராமராச்சியம் முதல் தர்மத் தேவதை ராச்சியம் ஊடாக, பிரிட்டிசு ராச்சியம் வரை ஒரே மாதிரியாகத்தான் இருந்து வருகிறது" – என்றார் பெரியார்.

உழைக்கும் மக்களிடமிருந்து திருடப் பெற்ற உபரி உற்பத்தியே முதலாளித்துவத்தின் இலாபமாகக் குவிகிறது என்பதை, விஞ்ஞானபூர்வமாக நிரூபித்தார் காரல் மார்க்ஸ்.

பார்ப்பனியமும், முதலாளித்துவமும் – இவைகளின் இணைப்பால் உருத்திரட்சிப் பெற்றுள்ள 'பன்னாட்டு நிறுபனங்கள்' என்ற கொடூர அமைப்பும் – சமூக அரசியல், பொருளாதார ஊழல்களை நியாயங்களாகவும், தர்மங்களாகவும் கட்டமைத்து அரசு நிறுவனங்களின் அங்கீகார முத்திரைகளையும் பெற்றுவிட்டன.

இப்போது ஊழல் மற்றும் பதுக்கல் பணத்தை ஒழிக்க இந்தப் பார்ப்பனிய சக்திகள் இரண்டு தனி மனிதர்களைக் களம் இறக்கியிருக்கின்றன. ஒருவர் – காந்தியவாதியாக அடையாளப்படுத்திக் கொள்ளும் அன்னாஹசாரே, மற்றொருவர் காவியுடையில் வலம் வரும் பெரும் தொழிலதிபரான 'யோக குரு'வாக அடையாளப்படுத்திக் கொள்ளும் பாபா ராம்தேவ். ரூ.18 கோடி செலவிட்டு 'உண்ணாவிரத' நாடகத்தை அரங்கேற்றிய பாபா ராம்தேவ், 11 ஆயிரம் கோடி செல்வத்துக்கு உரிமையாளர் என்கிறார், மற்றொரு பார்ப்பன மடாதிபதியான பூரி சங்கராச்சாரி!

நேரடியாக களமிறங்க முடியாமல் மக்கள் செல்வாக்கு இழந்து நிற்கும் பார்ப்பன இந்துத்துவா சக்திகள் – இந்த இரண்டு 'தனிமனிதர்களை' களமிறக்கி, அவர்களை மக்களின் ஒருமித்த பிரநிதிகளாக்கிக்காட்ட முயற்சிக்கிறார்கள். பார்ப்பன ஊடகங்கள் இதற்கு கட்டுப்பாடாக ஆதரவு தருகின்றன.

அண்மைக்காலமாக தொடர்ந்து வெளிவந்துக் கொண்டிருக்கும் மேல் மட்ட அரசியல் ஊழல்களால் மக்களிடம் உருவாகியுள்ள எதிர்ப்புணர்வுகளை அரசியல் மூலதனமாக்கிக் கொண்டு, கொல்லைப்புற வழியில் களத்துக்குள் நுழையும் வாய்ப்புகளுக்காக பா.ஜ.க. – பார்ப்பன இந்துத்துவா சக்திகள் காத்திருக்கின்றன. மக்கள் உணர்வுகளை தங்களுக்கு சாதகமாக்கிக் கொண்டு, நாங்களும் ஊழல் எதிர்ப்பாளர்களே என்று காட்டிக் கொள்ள காங்கிரசும், இதைப் பயன்படுத்திக் கொள்ளத் துடித்தது. இதற்காகவே பாபா ராம்தேவிடம் சமரசம் பேச நான்கு மத்திய அமைச்சர்கள் ஓடினார்கள்.

ஊழல் ஒழிப்புக்கு – பிரதமர் மற்றும் அமைச்சர்களையும் விசாரிக்கும் அதிகாரம் படைத்த 'லோக்பால்' என்ற அமைப்பை சட்டரீதியாக உருவாக்க வேண்டும் என்கிறார்கள். மக்கள் இயக்கமாக தொடர்ச்சியாக நடத்தப்பட வேண்டிய ஒரு பிரச்சினையை சட்டப் பிரச்சினையாக குறுக்கிடும் முயற்சிதானே இது? அன்னா ஹசாரே, நரேந்திர மோடி ஆட்சியைப் புகழ்கிறார். பாபாராம்தேவுக்குப் பின்னால் அயோத்தியில் இராமன் கோயிலைக் கட்ட வேண்டும் என்று களம் அமைக்கும் அத்வானிகள், ஆர்.எஸ்.எஸ். தலைவர் இராம் மாதவ், ரவிசங்கர் போன்றவர்கள் நிற்கிறார்கள். அன்னா ஹசாரே 'உண்ணாவிரதப் பந்தலில்' காந்தியின் படம் இல்லை; மாறாக இந்துத்துவத்தின் குறியீடான 'பாரத் மாதா' படம் மாட்டப்பட்டது. ஜெயப்பிரகாஷ் நாராயணன் இப்படித்தான் இந்திரா ஆட்சிக்கு எதிராக 'முழுப் புரட்சி' இயக்கத்தைத் தொடங்கியபோது, ஆர்.எஸ்.எஸ் ஜனசங்க சக்திகள், அதைப் பயன்படுத்தி, காங்கிரஸ் ஆட்சிக்கு நெருக்கடி தந்தன. மீண்டும் அதே நாடகங்கள் புதிய நடிகர்களோடு அரங்கேற்றப்படுவதாகவே தெரிகிறது.

வெளிநாடுகளில் பதுக்கப்பட்டுள்ள திருட்டுப் பணம் ரூ.9,58,500 கோடி என்று தேவ்கர் என்ற பொருளாதார ஆய்வாளர் தலைமையிலான குழு சர்வதேச அளவில் நடத்திய ஆய்வு கூறுகிறது. இதில் ரூ.6,20,000 கோடி, 1991 ஆம் ஆண்டுக்குப் பிறகு, அதாவது 'தாராளமய' கொள்கை அமுலுக்கு வந்த பிறகுதான் 68 வெளிநாட்டு வங்கிகளில் போடப்பட்டதாக இந்த ஆய்வு கூறுகிறது. ஊழல் பாய்ச்சல் வேகம் பெற்றது – 'தாராளமயமாக்கல்' தொடங்கிய பிறகுதான். ஆனால், இந்தக் கொள்கைக்கு காங்கிரசும், பா.ஜ.க. இரண்டுமே பேராதரவு! இவர்கள்தான் ஊழல் ஒழிப்பு நாடகமாடுகிறார்கள்.

முதலில் ஊழல் என்ற கருத்தியலை எதிர்ப்பவர்கள். அதை சாதிய சுரண்டல் சமுதாய அமைப்பாக மாற்றி சுரண்டலையும், ஊழலையும் 'தெய்வீகமாக்கி'யுள்ள பாரப்பனிய – இந்துக் கருத்தியலை – தூக்கி எறிய முன் வரவேண்டும். இந்த பார்ப்பனிய எதிர்ப்பை புறந்தள்ளிவிட்டு, அதன் பாதுகாவலர்களாக செயல்படும் கூட்டங்களே 'ஊழலை' எதிர்க்க முன் வருவது நச்சு மரத்தின் வேருக்கு தண்ணீர் ஊற்றி வளர்த்துக் கொண்டு, அதன் கிளைகளை மட்டுமே வெட்டும் மோசடியாகும்.

'படையல்', 'காணிக்கை', 'தட்சணை', 'வேண்டுதல்', 'உண்டியல்' என்று கடவுள்களையே ஊழல்களோடு இணைத்து அதை சமூக வாழ்க்கை முறையாகவே மாற்றிவிட்டார்கள். அதன் தாக்கங்களாக விரிவடைந்து அரித்துக் கொண்டிருக்கும் அரசியல் பொருளாதார ஊழல்களை மட்டும் ஒழிக்கக் கிளம்புவது மக்களை ஏமாற்றும் 'மெகா ஊழல்' தான்!

மக்களைச் சுரண்டும் ஒவ்வொரு அரசியல் பொருளாதார நடவடிக்கைகளுக்கு அடித்தளமாக பார்ப்பனர்களும், பார்ப்பனியமும் நிலை பெற்று நிற்கிறது.

பார்ப்பன – இந்துத்துவ எதிர்ப்பையும் இணைத்து நடத்தப்படும் ஊழல் எதிர்ப்பு இயக்கமே உண்மையான – நாணயமான இயக்கமாக இருக்க முடியும். – இது கல்லில் செதுக்கப்பட வேண்டிய உண்மை.

### அய்ரோப்பிய நாடாளுமன்றத்தில் வைகோ

# தமிழ் ஈழம் அமைய அய்.நா. வாக்கெடுப்பு நடத்த வேண்டும்

ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்ற உறுப்பினர்களும், குறிப்பாக இடதுசாரி பசுமைக் கட்சிகளும், தமிழ் ஈழ மக்களவைகளின் அனைத்து உலகச் செயலகமும் இணைந்து ஏற்பாடு செய்த ஈழத் தமிழர்களின் தேசிய இனப் பிரச்சினை குறித்த கருத்தரங்கம், ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்றக் கட்டடத்தில், ஐரோப்பிய நாடாளுமன்றத்தின் துணைக் குழு கூடும் அரங்கில் ஜூலை 2 நடந்தது.

பிற்பகல் 2 மணி முதல் மாலை 7 மணி வரை நடந்த இந்தக் கருத்தரங்கில், ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்ற உறுப்பினர்களும், பல நாடுகளில் உள்ள மனித உரிமை ஆர்வலர்களும் கலந்து கொண்டனர். அயர்லாந்து நாட்டைச் சேர்ந்த ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்ற உறுப்பினர் பால் மர்பி தொடக்க உரை ஆற்றினார்.

இடதுசாரி பசுமை இயக்கத்தின் முக்கிய நிர்வாகியான டாஞ்சா நீமர் தலைமை தாங்கினார்.

வைகோ பேசியதாவது:

2009 மார்ச், ஏப்ரல், மே மாதங்களில் லட்சத்துக்கும் மேற்பட்ட தமிழர்கள் கொல்லப்பட்டபோது, ஐ.நா. மனித உரிமைகள் கவுன்சிலில் ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக, ஜெர்மனி கொண்டு வந்த தீர்மானத்தை, ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் ஆதரித்தன.

2010 ஜனவரியில் டப்ளின் தீர்ப்பு ஆயம் சிங்கள அரசின் போர்க் குற்றங்களை விசாரிக்க வேண்டுமென்று அறிவித்தது.

இந்த அரங்கில் ஒன்றைக் கேட்க விரும்புகின்றேன். சூடான் அதிபர் அல்பசீரை, சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றத்தில் குற்றம் சாட்டி தண்டனையும் விதித்தார்களே? நூரெம்பெர்க் நீதிமன்றத்தில் நாஜிக் தளபதிகளைத் தண்டித்தார்களே? இதோ, கடந்த வாரத்தில், செர்பிய முஸ்லிம்கள் 8000 பேரை, 95 இல் படுகொலை செய்தான் என்று, போஸ்னியாவின் தளபதி ராட்கோ மிலாடிக்கைக் கைது செய்து விட்டார்களே? ஏன், ராஜபக்சேயைக் கூண்டில் ஏற்றக் கூடாது?

அவன் சகோதரர்களையும், கொலைகாரக் கூட்டாளிகளையும் சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றத்தில் நிறுத்த வேண்டும். அதற்கு ஐ.நா.மன்றம் ஏற்பாடு செய்ய வேண்டும். ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்றம், அந்த முயற்சியில் ஈடுபட வேண்டும்.

நடேசனும், புலித்தேவனும் கொல்லப்பட்டது கொடுமை அல்லவா? இசைப்பிரியா எனும் தமிழ்த் தங்கையை, கொடூரமாகக் கற்பழித்துச் சிங்கள ராணுவத்தினர் கொன்றார்களே? அத் தங்கையின் நிர்வாண உடலைச் சுற்றி நின்று கும்மாளம் அடித்தார்களே? என்ன பாவம் செய்தார்கள்? எட்டுத் தமிழ் இளைஞர்களை, கண்களைக் கட்டி, கைகளைக் கட்டி அம்மணமாக இழுத்துக் கொண்டு வந்து, காலால் மிதித்துக் கீழே, பிடரியில் சுட்டுக் கொன்றார்களே?

சேனல் 4 தொலைக்காட்சி வெளியிட்ட இந்தக் காணொளி முற்றிலும் உண்மையானது என்றும், இது கௌரவமான போர்க் குற்றங்கள் என்றும், ஐ.நா. மன்றத்தின் உலகில் அநியாயப் படுகொலைகளை விசாரணையை ஆய்வு செய்யும் ஐ.நா.வின் அதிகாரியான கிறிஸ்டோபர் ஹெய்ன்ஸ் என்பவர், ஜெனிவாவில் மனித உரிமைகள் கவுன்சிலில் அறிக்கையாகத் தாக்கல் செய்து விட்டார்.

கிழக்குத் தைமூர் தனிநாடாக வாக்கெடுப்பு நடத்திய ஐ.நா. மன்றம், தெற்கு சூடான் தனி நாடாக வாக்கெடுப்பு நடத்திய ஐ.நா. மன்றம், கொசாவா தனிநாடாக அனுமதித்த ஐ.நா. மன்றம், தமிழ் ஈழம் சுதந்திர தேசமாவதற்கு வாக்கெடுப்பு நடத்த வேண்டாமா?

ஆம். வாக்கெடுப்பு வேண்டும். அனைத்து நாடுகளின் பார்வையாளர்களின் கண்காணிப்பில் நடத்தப்பட வேண்டும். வெளிநாடுகளில் உள்ள ஈழத் தமிழர்களும், அந்தந்த நாடுகளிலேயே பங்கேற்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

பிரஸ்ஸல்ஸ் மாநாடு அறிவிக்கும் செய்தி, ராஜபக்சே மீது போர்க் குற்ற விசாரணை, சுதந்திரத் தமிழ் ஈழத்துக்கான வெகுஜன வாக்கெடுப்பு என்பதாக இருக்க வேண்டும். ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்றத்தை நான் கேட்டுக் கொள்வதெல்லாம், இலங்கையில் தமிழர் பகுதிகளில் இருந்து ராணுவமும் காவல்துறையும் உடனடியாக அகற்றப்பட வேண்டும்.

சிங்களர் குடியேற்றங்கள் அடியோடு தடுத்து நிறுத்தப்பட வேண்டும். வீடு வாசல்களை இழந்து முகாம்களில் வைக்கப்பட்டு உள்ள தமிழர்களுக்கு மறுவாழ்வு நடவடிக்கைகள் மேற்கொள்ள அனைத்து உலகச் செஞ்சிலுவைச் சங்கமும், அனைத்து உலகத் தொண்டு நிறுவனங்களும் அனுமதிக்கப்பட வேண்டும்.

சிங்கள ராணுவத்தாலும், போலீசாலும் கைது செய்யப்பட்டு உள்ள தமிழ் இளைஞர்கள் விடுவிக்கப்பட வேண்டும் என்று வைகோ உரையாற்றினார்.


ஜெர்மனியின் டுவிஞ் சன் பல்கலைக்கழக சமுகவியல் பேராசிரியர் ஜான் பீட்டர் நீல்சன், ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்றத்தின் மனித உரிமைகள் குழுவின் தலைவர் ஹெய்டி ஹௌடாலா, இலங்கையைச் சேர்ந்த சிங்களத் தொழிற்சங்கத் தலைவர் ஸ்ராநாத் பெரைரா, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் செல்வராஜா, இலங்கை வழக்கறிஞர் சங்கச் செயற்குழு உறுப்பினர் கனகசபை சண்முக ரத்தினம் உள்ளிட்டோர் பேசினர்.


**"புரட்சிப் பெரியார் முழக்கம்"**

**ஆண்டுக்கட்டணம் ரூ.150/-**

தொடர்புக்கு: ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர், திருவான்மியூர்,
சென்னை-41. ✆ 99416 13535

# உடுமலைப்பேட்டையில் நாத்திகர் விழா





உடுமலைப்பேட்டை நகர ஒன்றிய கழகத்தின் சார்பில் 24.5.2011 செவ்வாய் அன்று குட்டைத் திடலில் நாத்திகர் விழாவாக மூடநம்பிக்கை ஒழிப்பு ஊர்வலமும், தீ குண்டம், பொதுக் கூட்டம், புதுக்கோட்டை பூபாளம் குழுவினரின் கலை நிகழ்ச்சியும் நடத்துவதென திட்டமிட்டு திருப்பூர் மாவட்டம் முழுவதும் சுவரொட்டி விளம்பரமும், உடுமலை ஒன்றிய கிராமங்களிலும் சுவரொட்டியும் துண்டறிக்கையும் கொடுத்து பரவலாக விழா செய்தி விளம்பரப்படுத்தப்பட்டது.

இந்நிலையில் காவல்துறை மூடநம்பிக்கை ஒழிப்பு ஊர்வலத்திற்கு அனுமதி மறுத்து, தீ குண்டமும், பொதுக் கூட்டமும் நடத்த அனுமதி வழங்கியது. நிகழ்ச்சிக்கு ஒரு நாள் முன்பு தீ குண்டம் நிகழ்ச்சிக்கும் அனுமதி மறுத்தது. துண்டறிக்கைகள், சுவரொட்டிகள், விள்மபரம் மூலம் நிகழ்ச்சி பரவலாக மக்களிடம் சென்று விட்டதால் நகரமெங்கும் அதே பேச்சு நிலவிய நிலையில் பொதுக் கூட்டத்தையும் ரத்து செய்வது கூடாதென தோழர்கள் முடிவு செய்து 24.5.2011 செவ்வாய் அன்று குறிப்பிட்ட அதே இடத்தில் மாலை 6 மணிக்கு நாத்திகர் விழா தொடங்கியது.

முதல் நிகழ்வாக, பல்லடம் திருமூர்த்தி, மந்திரமா தந்திரமா நிகழ்ச்சியை நடத்தினார். வெறுங் கையில் விபூதி வரவழைத்தல், லிங்கம் எடுத்தல், எலுமிச்சம் பழத்தை கையில் குத்திக் காட்டுதல் போன்று நிகழ்ச்சிகளை செய்து காட்டினார். பெண்கள் பெருமளவில் கலந்துகொண்ட கூட்டம் முதல் நிகழ்ச்சியிலேயே பரபரப்பாக கவனிக்க ஆரம்பித்தது. அதைத் தொடர்ந்து கோவை வடக்கு மாவட்ட செயலாளர் ஆ. நாகராசன், கோவை தெற்கு மாவட்டச் செயலாளர் கா.சு. நாகராசன், திருப்பூர் மாவட்டத் தலைவர் சு. துரைசாமி, திண்டுக்கல் மாவட்டத் தலைவர் துரை. சம்பத், தவைலமை செயற்குழு உறுப்பினர் இரா.மனோகரன் ஆகியோர் பேசினர். இடையில் திருப்பூர் தியாகராஜன், சென்னை நாத்திகன் ஆகியோர் பாடல்கள் பாடினர். அடுத்ததாக தலைமை செயற்குழு உறுப்பினர் வெ. ஆறுச்சாமி, மூடநம்பிக்கை ஒழிப்பு நிகழ்ச்சிகளான நாக்கில் அலகு குத்துதல், கன்னத்தில் அலகு குத்துதல், அரிவாள் மேல் நிற்றல் போன்ற நிகழ்ச்சிகளை நிகழ்த்திக் காட்டினார். ஆயிரக்கணக்கான மக்கள் திருண்டிருந்து வியப்போடு பார்த்தனர். கூட்டத்தி லிருந்து சிறுவர்கள் மேடைக்கு வந்து அரிவாள் மேல் நின்று தங்களுடைய ஆர்வத்தை வெளிப்படுத்தினர்.

தொடர்ந்து கழகப் பொதுச் செயலாளர் கு. இராமகிருட்டிணன், கழகத் தலைவர் கொளத்தூர் மணி ஆகியோர் சிறப்புரையாற்றினர். இருவருமே தங்களுடைய உரையில், "காவல் துறையால் தவறாக அனுமதி மறுக்கப்பட்ட மூட நம்பிக்கை ஒழிப்பு ஊர்வலமும், தீ குண்டமும் நீதிமன்ற அனுமதியோடு அதே இடத்தில் மிகச் சிறப்பாக நடத்துவோம்" என்று அறிவிப்பு செய்தனர். கூடியிருந்த பொது மக்கள் கையொலி எழுப்பி தங்கள் ஆதரவைத் தெரிவித்தனர்.

இறுதியாக, புதுக்கோட்டை பூபாளம் குழு வினரின் கலை நிகழ்ச்சி ஒன்றரை மணி நேரத்திற்கும் மேலாக நடைபெற்றது. நகைச்சுவையோடு பகுத்தறிவு, சமூகம், அரசியல் என பல்துறைச் செய்திகளை பூபாளம் குழுவினர் நடத்தியது மக்களிடம் நல்ல வரவேற்பைத் தந்தது.

நாத்திகர் விழா உடுமலை நகரத் தலைவர் யாழ். நடராசன் தலைமையில் நடந்தது. நகர துணைச் செயலாளர் சு.சிவசங்கர், நகரப் பொருளாளர் மு.வேல்முருகன், ரமேஷ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். நிகழ்ச்சியை திருப்பூர் மாவட்டக் கழகச் செயலாளர் கா. கருமலையப்பன் தொகுத்து வழங்கினார்.

நிகழ்ச்சியில் கோவை மாநகரத் தலைவர் வே. கோபால், மாநகர பொருளாளர் ரஞ்சித் பாபு, கோவை வடக்கு மாவட்டத் தலைவர் துராமசாமி, மாநில தகவல் தொடர்பாளர் ந. பிரகாசு, கோவை தெற்கு மாவட்டத் தலைவர் கலங்கல்வேலு, திண்டுக்கல் மாவட்ட அமைப்பாளர் நல்லதம்பி, திருப்பூர் நகர செயலாளர் முகில்ராசு, ஆனைமலை நகரத் தலைவர் அரிதாசு, முருகானந்தம், ருக்குமணி, பல்லடம் நகர அமைப்பாளர் ஜெகதீச, தாராபுரம் குமார், பல்லடம் விஜயன், கோவை வடக்கு மாவட்ட அமைப்பாளர் மதியழகன், பெரிய நாயக்கன் பாளையம் சீனிவாசன், பல்லடம் ஒன்றியம் வடிவேல், ஆறுமுகம், இலட்சுமி மில்ஸ் பொன்னுசாமி, உடுமலை ஒன்றியச் செயலாளர் கோ. விசுவநாதன், மடத்துக்குளம் ஒன்றிய துணைச் செயலாளர் மா. மோகன்குமார், காரத் தொழுவு கு. மயில்சாமி, சின்னவீரம்பட்டி தமிழ்வேந்தன், கடத்தூர் அய்யப்பன், சரவணன், பழனி மருதமூர்த்தி உள்ளிட்ட கோவை, திருப்பூர், திண்டுக்கல் மாவட்டத் தோழர்கள் கலந்து கொண்டனர். இறுதியில் உடுமலை நகரச் செயலாளர் இரா. பாக்கியநாதன் நன்றி கூறினார்.

உடுமலை நகரத் தலைவர் யாழ் நடராசன், செயலாளர் இரா. பாக்கியநாதன், துணைச் செயலாளர் சு. சிவசங்கர், ஒன்றியச் செயலாளர் கோ. விசு, மடத்துக்குளம் ஒன்றியத் துணைச் செயலாளர் மா.மோகன் குமார், காரத் தொழுவு கு. மயில்சாமி, ரமேஷ் ஆகியோர் நிகழ்ச்சி சிறப்புற கடுமையாக உழைத்திருந்தனர்.

# பாபா ராமதேவின் ஆண்டு வருமானம் 1000 கோடி ரூபாய்

***அதிகாரப்பூர்வமற்ற முறைகளில் ஆசிரமங்களும், ஆயுர்வேத மருத்துவ சாலைகளும், யோகா பீடமும் அமைத்துக் கொண்டவர்தான் ஊழலுக்கு எதிராக சத்தியாகிரகம் இருப்பதாக சொல்லும் பாபா ராம்தேவ்.***

யோகா பயிற்சியை ஒரு தொழில் சாம்ராஜ்யமாக்கிய பாபாராம்தேவின் ஆண்டு வருமானம் ரூ.1000 கோடி யாகும். யோகா பயிற்சி மட்டுமல்லா மல் ஆயுர்வேத மருந்து விற்பனையும் ராம்தேவுக்கு உண்டு. பணம் பெருகும் போது இந்தியாவுக்கு வெளியே அந்நிய நாட்டிலும் இடம் வாங்கினார். ஸ்காட்லாந்தில் ஒரு தீவே இவர் சொந்தமாக வாங்கிக் கொண்டார். ஒன்றேகால் சதுர கிலோ மீட்டர் பரப்பளவுள்ள கம்ப்ராய் தீவை 14 கோடி ரூபாய் விலையில் வாங்கினார்.

அண்மையில், இமாச்சல் பிரதேசத் தில் உள்ள ஸோலன் மாவட்டத்தில் 30 ஏக்கர் நிலத்தை 17 லட்சம் ரூபாய்க்கு அந்த மாநிலடத்தின் பா.ஜ.க. அரசு ராம்தேவுக்கு வழங்கியது சர்ச்சைக் குள்ளானது.

அரியானாவிலும் இவர் இடம் வாங்குவதற்கான முயற்சி இருந்ததாக வும் செய்தி உண்டு. யோகா பயிற்சிக்கு மிகவும் முன் வரிசையில் இருப்பவர் களிடமிருந்து 50 ஆயிரம் ரூபாயும், அடுத்து பின் வரிசையில் உள்ளவர் களிடமிருந்து 25 ஆயிரம் ரூபாயும், அதற்கடுத்து பின்னால் இருப்பவர் களிடமிருந்து 1000 ரூபாயும், பல கூட்டங்களிலும் இவர் வாங்குவாராம்.

அரியானாவில் உள் எமகேந்தகட் மாவட்டத்தைச் சேர்ந்த அலி சையத்பூர்கிராமத்தில் 1965 இல் ராமகிருஷ்ண யாதவ் என்கிற பாபா ராம்தேவ் பிறந்தார்.

ஆரம்ப கல்விக்குப் பிறகு சமஸ் கிருதமும் யோகா பயிற்சியும் கற்றார். ஆச்சாரியா பல்தேவிடமிருந்து சந் யாசம் பெற்றார். ஜிண்டு மாவட்டத் தில் உள்ள கல்பகுருவின் கீழ் யோகா பயிற்சியை முழுமைப்படுத்தினார். 2003 இல் ஆச்சாரியா பால கிருஷ்ண னுடன் திவ்யயோக மந்திர் டிரஸ்ட் ஆரம்பித்தவுடன் அவருக்கு உயர்வு ஆரம்பமானது.

2006 இல் அரித்துவாரில் பதஞ்ஜலி யோகபீடம் ஆரம்பித்தார். அரித்து வாரிலிருந்து 10 கிலோ மீட்டர் தூரம் வரை அவரது நிறுவனம் வியாபித் திருக்கிறது. குடியரசு தலைவராக இருந்த பைரோன்சிங் ஷெகாவத்து தான் இந்த நிறுவனத்தை துவக்கி வைத்தார். யோகா பயிற்சி மட்டு மல்லாமல் ஆயுர் வேத மருந்துகளும் இங்கு வழங்குவார்.

ராம்தேவ்க்கு ஆயுர்வேதத்திற்கான பயிற்சி எப்படிக் கிடைத்தது என்ற கேள்விக்கு பதில் இல்லை. மருந்து விற்பனை மூலமாக ரூ.300 கோடி ராம்தேவுக்கு ஒவ்வொரு ஆண்டும் கிடைக்கிறது. ஆயுர்வேத மருந்தில் மிருகங்களின் எலும்புகளைக் கலந்து விற்கப்படுகிறது என்ற குற்றச்சாட்டு எழுந்தது. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் அரசியல் தலைமைக் குழு உறுப்பினர் பிருந்தாகாரத் தக்க சான்றுகளுடன் இந்தக் குற்றச் சாட்டை எழுப்பியிருந்தார். அதன் பேரில் தில்லியில் உள்ள மார்க்சிஸ்ட் கட்சியின் தலைமை அலுவலகமான ஏகேஜி பவன் உள்பட தாக்கப்பட்டது.

சுகாதார நிலையம் நடத்திய பரி சோதனையில் மிருகங்களின் அம்சங்கள் மருந்தில் கலந்திருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. (ஏற்கனவே 'புரட்சிப் பெரியார் முழக்கம் இது பற்றி ஒரு கட்டுரை வெளியிட் டுள்ளது)

பதஞ்ஜலி யோகபீடம் ஆரம்பித்த கட்டத்திலேயே தொழில் பிரச்னை களும் ஆரம்பமாயின. ஆயுர்வேத மருந்து தயாரிக்கிற தொழிற்சாலையின் தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச கூலி வழங்கப்படவில்லை. தொழி லாளர்கள் 10-12 மணி நேரம் வேலை வாங்கப்பட்டனர். அதனால் அந்த நிறுவனத்திற்கு முன்னால் போராட் டமும் நடத்தப்பட்டது. போராட்டம் நடத்திய 113 தொழிலாளர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டனர். தொழி லாளர் பாதுகாப்பு நிதி எதுவும் சட்டப்படி வழங்கப்படவில்லை.

பணம் கொழுக்கும்போது கூடவே அதிகாரமும் தேவைப்படுகிறது. தொடர்ந்து அரசியல் கட்சியை உருவாக்கவும் முயற்சி ஆரம்பமானது.

ஏப்ரல் மாதம் நாக்பூரில் உள்ள ஆர்.எஸ்.எஸ். அலுவலகத்தில் வைத்து ஆர்.எஸ்.எஸ். தலைவர் மோகன் பகவத்துடன் சேர்ந்தே சத்தியாகிரகம் நடத்த முடிவு செய்யப்பட்டது. கோவிந்தாச்சாரியாத்தான் ராம்தே வின் அரசியல் ஆலோசகர்.

**நன்றி: 'தீக்கதிர்'**

PURATCHI PERIYAR MUZHAKKAM TAMIL WEEKLY REG.NO.TN/CCN/488/09-11 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/09-11
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/7776

# தூத்துக்குடியில் சமச்சீர் கல்வியை ஆதரித்து ஆர்ப்பாட்டம்

தூத்துக்குடி மாவட்ட பெரியார் திராவிடர் கழக சார்பில் சமச்சீர் கல்வித் திட்டத்தை நடைமுறைப்படுத்தவும், தனியார் பள்ளி கல்வி கட்டண கொள்ளையை கண்டித்தும் தமிழக அரசை வலியுறுத்தி 2.6.2011 வியாழன் மாலை 5 மணியளவில் தூத்துக்குடி பழைய மாநகராட்சி அலுவலகம் முன்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்திற்கு தூத்துக்குடி மாவட்ட கழகத் தலைவர் பொறிஞர் சி. அம்புரோசு தலைமை வகித்தார். உலக திருக்குறள் பேரவை பொறுப்பாளர் மோ. அன்பழகன் ஆர்ப்பாட்டத்தை துவக்கி வைத்து உரையாற்றினார். சுஜித் (பு.இ.மு.), பால்ராசு (பெ.தி.க.), தமிழ்ப் புலிகள் நெல்லை மாயா, மனித உரிமை பாதுகாப்பு மைய பொறுப்பாளர் சு. இராமசந்திரன், விடுதலை சிறுத்தைகள் கட்சி மாநகர் மாவட்ட செயலாளர் ஆறுமுக நயினார், இந்திய பொதுவுடமைக் கட்சி மாவட்ட செயலாளர் வழக்குரைஞர் ஆ. மோகன்ராசு, ஆதித் தமிழர் பேரவை மாவட்ட செயலாளர் ரா.வே.மனோகர் ஆகியோரது உரைக்குப் பின் கழக ஆட்சிக் குழு உறுப்பினர் பால். பிரபாகரன், கல்வியை வியாபாரமாக்கிடும் தனியார் பள்ளி முதலாளிகளுக்கு ஆதரவாக தமிழக அரசு செயல்படக் கூடாது என்றும், அனைவருக்கும் தரமான சமச்சீர் கல்வி வழங்கிடவும், அனைவருக்கும் கல்வியை இலவசமாக்கிடவும் வலியுறுத்தி விளக்கவுரையாற்றினார்.

நிகழ்வில் தூத்துக்குடி மாநகர செயலாளர் பால். அறிவழகன், மாநகர தலைவர் சா.த.பிரபாகரன், மாவட்ட பொருளாளர் க. மதன், மாவட்ட துணைச் செயலாளர் ச.கா. பாலசுப்பிரமணியன், நெல்லை சி.ஆ. காசிராசன், செ.செல்லத்துரை, மாநகர துணைத் தலைவர் ரவிசங்கர் மற்றும் பெரியார் திராவிடர் கழகம், ஆதித் தமிழர் பேரவை, இந்திய பொதுவுடைமை கட்சி, விடுதலைச் சிறுத்தைகள், தமிழ்ப் புலிகள், மனித உரிமை பாதுகாப்பு மையத் தோழர்கள் திரளாக கலந்து




கொண்டனர். கிறித்துவர் வாழ்வுரிமை இயக்க பொறுப்பாளர் பணி சுந்தரி மைந்தன் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்ள இயலாத நிலையில் ஆர்ப்பாட்டத்தின் நோக்கம் வெற்றியடைய தனது வாழ்த்துகளை தெரிவித்தார்.

இறுதியில் மாவட்ட செயலாளர் கோ.அ. குமார் நன்றி கூறினார். ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்ட கழக பொறுப்பாளர்கள் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர்.

*முதல் பக்கத் தொடர்ச்சி*

த. ஜேம்ஸ் பரமசிவம் கழகத் தலைவருக்கும், பொதுச் செயலாளருக்கும் சால்வை அணிவித்து கழகத்திற்கு ஆதரவு தெரிவித்தார். முனுமாக்காடு ஆ. நீலகண்டன், பட்டுக்கோட்டை ரெ.சா. இளவரசன், மணக்காடு சு. ஜெயச்சந்திரன், வடசேரி சிவசுப்ரணியன், பேரா வூரணி சு.சதீசுகுமார், கரம்பக்காடு ச.வே.காமராசு ஆகியோர் இப்பொதுக் கூட்டத்தை ஏற்பாடு செய்தனர்.

## சேதுபாவா சத்திரம்

1.6.2011 புதன் காலை 10 மணிக்கு சேதுபாவா சத்திரம் ஒன்றியத்திற்கு உட்பட்ட மரக்காவலசை கிராமத்திலும், 11 மணிக்கு அழகியநாயகிபுரம் பேருந்து நிறுத்தத்திலும் புதிதாக அமைக்கப்பட்ட கொடி கம்பங்களில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி கழகக் கொடியினை ஏற்றி வைத்தார். மரக்காவலசை பெரியசாமி, அழகியநாயகிபுரம் ப.அ. வைத்திலிங்கம், பூங்கொடி காடு சீனி கண்ணன், சிலம்ப வேளான்காடு கு. பாரி ஆகியோரது இல்லங்களுக்கு கழகத் தலைவரை அழைத்துச் சென்று, அப்பகுதியில் இருக்கும் தோழர்களையும், ஆதரவாளர்களையும் அறிமுகம் செய்து வைத்தனர்.

## நாச்சியார்கோவில்

2.6.2011 வியாழன் மாலை 6 மணிக்கு கும்பகோணம் அருகே உள்ள நாச்சியார்கோவில் வடக்கு வீதியில் ஐ.நா. அறிக்கையும், தமிழர்களின் கடமையும் விளக்கப் பொதுக் கூட்டம் நடைபெற்றது. மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் சா. வெங்கடேசன் தலைமையில் நடைபெற்ற இப்பொதுக் கூட்டத்தில் மாவட்ட அமைப்பாளர்சோலை மாரியப்பன் வரவேற்புரையாற்றினார். கழகத் தலைவர் கொளத்தூர் மணி, பொதுச் செயலாளர் கோவை இராமகிருட்டிணன், கு. பாரி, வடசேரி சிவசுப்ரமணியன், நாகை மாவட்டத் தலைவர் இரசீத்கான் ஆகியோர் உரையாற்றினர். ஒன்றிய அமைப்பாளர் மா. கரிகாலன் நன்றி கூறினார்.

## மன்னார்குடியில் வைகோ

3.6.2011 வெள்ளி அன்று மாலை 6 மணிக்கு, மன்னார்குடி பந்தலடி கீழ்புரத்தில் மன்னார்குடி மாவட்ட கழகம் சார்பாக இராஜபக்சே - போர்க்குற்றவாளி - ஐ.நா. அறிக்கை விளக்கப் பொதுக் கூட்டம் நடைபெற்றது. சுயமரியாதை சுடரொளி ஜெமினி இப்ராஹீம் பெயர் சூட்டப்பட்ட மேடையில், பகுத்தறிவு பாவலர் பள்ளத்தூர் அ.சி. நாவலரசன் கலைக்குழுவினரின் பகுத்தறிவு இசை நிகழ்ச்சியோடு துவங்கிய இப் பொதுக் கூட்டத்திற்கு மன்னார்குடி ஒன்றிய கழக அமைப்பாளர் இரா. காளிதாசு தலைமையேற்றார். ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ, கழகத் தலைவர் கொளத்தூர் மணி, ம.தி.மு.க. துணைப் பொதுச் செயலாளர் துரை. பாலகிருஷ்ணன் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

## தஞ்சை மாவட்ட கலந்துரையாடல் கூட்டம்

2.6.2011 வியாழன் மாலை 3 மணிக்கு மாவட்ட அமைப்பாளர் சோலை மாரியப்பன் இல்லத்தில் (நாச்சியார்கோவில்) தஞ்சை மாவட்ட கலந்துரையாடல் கூட்டம், கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் நடைபெற்றது. கழகப் பொதுச் செயலாளர் கோவை இராமகிருட்டிணன் முன்னிலை வகித்தார். தஞ்சை மாவட்டம் முழுவதும் பரப்புரை பயணம் நடத்துவது பற்றியும், தெருமுனைக் கூட்டங்கள் நடத்துவது பற்றியும் திட்டமிடப்பட்டது.

கீழ்க்கண்டவர்கள் பொறுப்பாளர்களாக அறிவிக்கப்பட்டனர்:

மாவட்ட அமைப்பாளர் : சோலை மாரியப்பன்; தமிழ்நாடு மாணவர் கழக மாவட்ட அமைப்பாளர்கள் : க. இராமர், அ. உதயகுமார்; தஞ்சாவூர் ஒன்றிய அமைப்பாளர் - ப. ஆனந்தகுமார்; சேதுபாவாசத்திரம் ஒன்றிய அமைப்பாளர் - கா. பெரியசாமி; பேராவூரணி ஒன்றிய அமைப்பாளர் - சித.திருவேங்கடம்; ஒரத்தநாடு ஒன்றிய அமைப்பாளர் - க.சொ. சிவசுப்ரமணியம்; பட்டுக்கோட்டை ஒன்றிய அமைப்பாளர் - ரெ. இளவரசன்; மதுக்கூர் ஒன்றிய அமைப்பாளர் - கு. பாரி; மன்னார்குடி ஒன்றிய அமைப்பாளர் - இரா. காளிதாசு; திருவிடைமருதூர் ஒன்றிய அமைப்பாளர் - மா.கரிகாலன்.

## புலவர் கலியபெருமாள் நினைவேந்தல்

16.5.2011 திங்கட் கிழமை மாலை 6 மணிக்கு கடலூர் மாவட்டம் பெண்ணாடம் வானொலி திடலில் புலவர் கு. கலியபெருமாள் நினைவேந்தல் பொதுக் கூட்டம் நடைபெற்றது. கழகத் தலைவர் கொளத்தூர் மணி இப் பொதுக் கூட்டத்திற்கு தலைமை தாங்கினார். த.ஒ.வி.இ. பொதுச்செயலாளர் நிலவன், அனைக்கரை மாறன், தமிழ் உரிமை கூட்டமைப்பு ஒருங்கிணைப்பாளர் புலவர் கி.த. பச்சையப்பன் ஆகியோர் முன்னலை வகித்தனர். மார்க்சிய பெரியாரிய பொதுவுடமை கட்சி பொதுச்செயலாளர் ஆனைமுத்து, நாம் தமிழர் கட்சி தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான், இயக்குனர் வ. கவுதமன், தமிழர்நீதிக்கட்சித் தலைவர் சுபா. இளவரசன், பா.ம.க. தலைமை நிலைய பேச்சாளர் திருமாவளவன் ஆகியோர் உரையாற்றினர். தமிழ் தேசிய விடுதலை இயக்கம் பஞ்சநாதன் நன்றி கூறினார்.

## அடுத்த இதழில்...

பத்திரிகையாளர் ராஜீவ் சர்மா என்பவர் ஆங்கிலத்தில் எழுதிய ஒரு நூலை ‘விடுதலைப் புலிகளுக்கு அப்பால்’ என்ற பெயரில் தமிழாக்கம் செய்து ‘சவுக்கு’ பதிப்பகம் வெளியிட்டுள்ளது. சென்னையில் 4.6.3011 அன்று இந்த நூலை கழகப் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன் வெளியிட, ஊடகவியலாளர் கஜேந்திரன் பெற்றுக் கொண்டார். தோழர் தியாகு, வழக்கறிஞர் புகழேந்தி, நூலாசிரியர் ராஜிவ் சர்மா, சவுக்கு சங்கர், மொழிப் பெயர்ப்பாளர் ஆனந்த் ராஜ் ஆகியோர் உரையாற்றினர். நூலின் உள்ளடக்கத்தை கடுமையாக விமர்சித்து பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் ஆற்றிய மறுப்புரை அடுத்த இதழில் வெளி வருகிறது.


## கழகத் தலைவர் கொளத்தூர் மணி சுற்றுப் பயணம்

ஜூன் 6 - சங்கராபுரம் - பொதுக் கூட்டம்
7 - குஞ்சாண்டியூர் - பொதுக் கூட்டம்
8 - கொளத்தூர் - பொதுக் கூட்டம்
9 - மேட்டூர் ஆர்.எஸ். - பொதுக் கூட்டம்
11 - இளம்பிள்ளை பொதுக் கூட்டம் - நாத்திகர் விழா
12 - பிற்பகல் - தருமபுரி - கலந்துரையாடல்
13 - காலை - கருங்குழி - திருமணம்
மாலை - கருங்குழி - பொதுக் கூட்டம்.
15 - மன்னார்குடி - திருமணம்
மாலை - திருச்சி - பொதுக் கூட்டம்.
16 - மதுரை - பொதுக் கூட்டம்.
17 - வத்திராயிருப்பு - பொதுக் கூட்டம்.
18 - போடி - பொதுக் கூட்டம்.
19 - நத்தம் - பொதுக் கூட்டம்.
20 - அரியலூர் - பொதுக் கூட்டம்.
21 - பெரம்பலூர் - பொதுக் கூட்டம்.
22 - கடலூர் - திருமணம்.
25 - கருப்பூர் - பொதுக் கூட்டம்.
26 - மாலை - புதுவை - திருமணம்
27 - வீராம்பட்டினம் - புதுவை - திருமணம்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 9th June 2011

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.



புரட்சிப்

# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2042 | ஜூன் 16, 2011 | புரட்சி 10 | முழக்கம் 22 | விலை: ரூ.2.50


## தமிழக முதல்வருக்கு கழகம் பாராட்டு

# சிவசங்கரமேனனை நீக்க வேண்டும்!



***ஈழத் தமிழர் – கச்சத் தீவு உரிமைகளுக்காக பேரவையில் தீர்மானம் கொண்டு வந்த தமிழக முதல்வரைப் பாராட்டிபெரியார் திராவிடர் கழகம் நடத்திய கருத்தரங்கில் தமிழக உணர்வுகளை அவமதிக்கும் சிவசங்கரமேனனுக்கு கண்டனம் தெரிவிக்கப்பட்டது.***

ஈழத்தில் தமிழர்களை முற்றாக ஒழிக்கும் நோக்கத்தோடு போர்க் குற்றம் புரிந்தவர்களை அய்.நா. வழியாக போர்க் குற்றவாளிகள் என்று பிரகடனப்படுத்தவேண்டும்; அங்கே வாழும் தமிழர்களுக்கு சம உரிமை வழங்கப்படும் வரை இலங்கை மீது இந்தியா பொருளாதாரத் தடையை மற்ற நாடுகளுடன் இணைந்து அறிவிக்க வேண்டும் - என்ற கருத்துடன் தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா 8.6.2011 அன்று ஒரு தீர்மானத்தை முன் மொழிய சட்டமன்றம் ஒரு மனதாக அத் தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளது. அடுத்த நாள் - கச்சத்தீவு தமிழ்நாட்டுக்கே உரிமையானது என்பதை வரலாற்றுச் சான்றுகளுடன் விளக்கி, இது தொடர்பாக 2008 ஆம் ஆண்டு உச்சநீதிமன்றத்தில் அ.தி.மு.க. சார்பில் ஏற்கனவே தொடர்ந்துள்ள வழக்கில் தமிழக அரசின் வருவாய்த் துறையும் இணைத்துக் கொள்வதற்கான ஒரு தீர்மானத்தை தமிழக முதல்வரால் சட்டமன்றத்தில் கொண்டு வந்து நிறைவேற்றப்பட்டுள்ளது. 1974 மற்றும் 1976 இல் கச்சத்தீவு இலங்கைக்கு 'தாரை' வார்க்கப்பட்ட போது நாடாளுமன்ற ஒப்புதல் பெறப்பட்டு, அரசியலமைப்பில் சட்டத் திருத்தம் செய்திருக்க வேண்டும்; அப்போதுதான் சட்டப்படி செல்லும் என்று 1960 இல் உச்சநீதிமன்றம் 'பெருபாரி' தீவு வழக்கில் தீர்ப்பளித்திருந்தது. மேற்கு வங்கத்துக்கு உரிமையான 'பெருவாரி' எனும் தீவை வங்க தேசத்துக்கு தாரை வார்த்ததை எதிர்த்து, அன்றைய மேற்கு வங்க முதல்வர் தொடர்ந்த வழக்கில் உச்சநீதிமன்றம் வழங்கியதே இந்தத் தீர்ப்பு.

வரலாற்று சிறப்பு மிக்க இத் தீர்மானங்களைக் கொண்டு வந்த தமிழக முதல்வரை பாராட்டியும், தீர்மானத்தின் கோரிக்கைகளை இந்திய அரசு ஏற்க வலியுறுத்தியும் பெரியார் திராவிடர் கழக சார்பில் 13.6.2011 அன்று சென்னை தேவநேயப் பாவாணர் அரங்கில் நிகழ்ச்சி ஒன்று குறுகிய இடைவெளியில் கழக சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. கழகத் தோழர் அன்பு தனசேகர் வரவேற்புரையாற்ற, பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் தலைமை தாங்கினார். அவர் தனது உரையில், "ஈழத் தமிழர் பிரச்சினையில் இந்தியாவின் துரோகக் கொள்கைகளை தமிழர்கள் ஏற்கவில்லை என்பதை தமிழக சட்டமன்றத்தின் இத் தீர்மானம் அறிவிப்ப தால், இதை வரலாற்று சிறப்பு மிக்க தீர்மானம் என்று கூறுகிறோம். இலங்கை அரசு இனப்படுகொலையும், போர்க் குற்றங்களையும் இழைத்திருக்கிறது என்ற குற்றச்சாட்டுக்கு உள்ளாகியுள்ள நிலையில் அங்கே மனித உரிமை மீறல்கள்கூட நடக்கவில்லை என்றே இந்திய அரசு, அய்.நா.வில் கருத்து தெரிவித்து, இலங்கை அரசுக்கு எதிரான தீர்மானத்தை தோற் கடித்தது. தமிழக முதல்வரின் தீர்மானம் இந்தியாவின் இந்த நிலையை மறுக்கிறது. இந்தியா, இலங்கைக்கு தாராளமாக ஆயுத உதவிகளை வழங்கியதோடு, நிதி உதவியையும் வழங்கி, சர்வதேச நிதி நிறுவனம், இலங்கைக்கு கடன் வழங்க மறுத்தபோதும், இந்தியா தலையிட்டு, கடன் கிடைக்க உதவியது. தமிழக முதல்வர் கொண்டு வந்துள்ள தீர்மானம், இந்த அணுகுமுறையை மறுத்து, இலங்கைக்கு எதிராக பொருளாதாரத் தடை கோருகிறது. எனவே இது சரித்திரம் படைத்த தீர்மானம் என்கிறோம். இத் தீர்மானத்தை யார் கொண்டு வந்தாலும் வரவேற்று பாராட்டுவது பெரியார் திராவிடர் கழகத்தின் கொள்கை வழிப்பட்ட கடமையாகக் கருதுகிறோம்.

கடந்த காலங்களில் ஈழத் தமிழர் மீதான இனப் படுகொலை நடத்தப்பட்டபோது, இந்திய அரசை இப்படிக் கண்டிக்கக்கூடிய ஒரே ஒரு குரலைக்கூட தமிழக சட்டமன்றத்தில் தி.மு.க. ஆட்சி உயர்த்த வில்லை. வேண்டுகோள்களும், கோரிக்கைகளும் மென்மையாக, அதுவும், தமிழ்நாட்டு மக்களை திசை திருப்பவே முன் வைக்கப்பட்டன. எனவே தான் இந்தத் தீர்மானம் ஈழத் தமிழர்களின் புண்பட்ட உள்ளத்துக்கு ஆறுதலையும் உலகத் தமிழர்களுக்கு நம்பிக்கையும் தந்திருக்கிறது" என்று விடுதலை இராசேந்திரன் கூறியதோடு. தமிழகத்தின் முதல்வராக எம்.ஜி.ஆர். இருந்த காலத்தில், தமிழ் ஈழ விடுதலைக்காக களத்தில் நின்ற விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு வழங்கிய ஆக்கப்பூர்வமான உதவிகளைப் பட்டியலிட்டுக் காட்டினார்.

தொடர்ந்து நாடு கடந்த தமிழீழ அரசு தோழமை மய்யத்தின் தமிழக அமைப்பாளர் பேராசிரியர் சரசுவதி தமது உரையில், "தேசிய சுய நிர்ணய உரிமை கொசாவாவிலும், தெற்கு சூடானிலும் அங்கீகரிக்கப் படும்போது தமிழ் ஈழத்துக்கு மட்டும் மறுப்பதில் என்ன நியாயம் இருக்க முடியும்? அய்.நா.வின் அறிக்கை வந்த பிறகும், இந்திய அரசு, இலங்கையின் மனித உரிமை மீறல்களைப் பற்றி பேசவே மறுப்பது, ஈழத் தமிழர்களை மட்டுமல்லாது, அவர்களின் தொப்புள் கொடி உறவான தாய்த்தமிழக மக்களின் உணர்வுகளையும் அவமதிப்பது அல்லவா? இந்த நிலையில்தான், தமிழக முதல்வர், தமிழக மக்களின் உணர்வுகளை வெளிப்படுத்தும் இத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார். கடந்த காலத்தில் நடந்த ஆட்சி, இப்பிரச்சினையில் துரோகமிழைத்தது உண்மை. இப்போது, தமிழக சட்டமன்றத் தீர்மானம் புதிய நம்பக்கையைத் தந்திருக்கிறது. இது தொடரவேண்டும்" என்று குறிப்பிட்டார்.

மனிதநேய மக்கள் கட்சித் தலைவரும், தமிழக சட்டமன்ற உறுப்பினருமான பேராசிரியர் ஜவாஹிருல்லாஹ் பேசுகையில் - பொருளாதாரத் தடை விதிப்பதோடு மட்டுமின்றி, இலங்கை யுடனான அரசு உறவுகளையும் துண்டிக்க வேண்டும் என்று வற்புறுத்தினார். சட்டமன்றத் தீர்மானத்தை 'ஏளனத்துக்கு உரியது' என்று சுப்ரமணியசாமி என்ற நபர் கூறியிருப்பதற்கு கடும் கண்டனம் தெரிவித்தார்.

தொடர்ந்து, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் மாநில துணைப் பொதுச் செயலாளர் கி.மகேந்திரன் பேசுகையில் - சிவசங்கரமேனனை தேசிய பாது காப்பு ஆலோசகர் பதவியிலிருந்து நீக்க வேண்டும் என்று வற்புறுத்தினார். தமிழர்கள் வாழும் பகுதி களில் 1 லட்சத்து 40 ஆயிரம் பேர் காணவில்லை என்று அய்.நா. கூறுகிறது. இலங்கை அரசும், அதை ஒப்புக் கொள்கிறது. ஆனால், இந்தியாவின் பாதுகாப்பு ஆலோசகர் என்ற பதவியிலுள்ள சிவ சங்கரமேனன் என்ற அதிகாரி 1999 ஆம் ஆண்டி லிருந்து, அங்கே மக்கள் தொகைக் கணக்கெடுப்பே நடக்கவில்லை என்று கூறி, இனப்படு கொலையை மூடி மறைக்கிறார். ஏழேகால் கோடி மக்களின் பிரதிநிதியான தமிழக இறையாண்மையின் வடிவமான தமிழக சட்டமன்றம் நிறைவேற்றிய தீர் மானத்தை அலட்சியப்படுத்துகிறார். இது பற்றி

4 ஆம் பக்கம்

# களப்பணிகளில் கழகத் தோழர்கள்

### திருப்பூரில் கண்டன ஆர்ப்பாட்டம்




திருப்பூர் அனுப்பர்பாளையம் பகுதியில் 15 வேலம்பாளையம் நகராட்சி சார்பில் தந்தை பெரியார் சிலை அமையவுள்ளதை எதிர்க்கும் மதவெறி சக்திகளை கண்டித்து கழகத்தின் சார்பில் திருப்பூர் அனுப்பர் பாளையத்தில் 5.6.2011 ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு அனுப்பர்பாளையம் கழகப் பகுதி பொறுப்பாளர் சண். முத்துக்குமார் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தில் பெரியார் சிலை அமைப்பதை எதிர்க்கும் மத வெறி சக்திகளை கண்டித்து முழக்கங்கள் எழுப்பப் பட்டன. ஆர்ப்பாட்டத்திற்கு காவல் துறை அனுமதி மறுத்தது. ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட மா நகரத் தலைவர் இரமேசு பாபு, சண். பாண்டியநாதன், விஜயகுமார், ஒன்றிய அமைப்பாளர் அவிநாசியப்பன், மாணவரணி அமைப்பாளர் கார்த்திகேயன், குணசேகரன், தினேஷ்குமார், இராயபுரம் சீனிவாசன் உட்பட, மாவட்ட, மாநகர, ஒன்றிய நிர்வாகிகள், உறுப்பினர்கள் 25 பேரை கைது செய்தனர். முன்னதாக ஆர்ப்பாட்டத்தை 15 வேலம்பாளையம் நகராட்சித் தலைவர் எஸ்.பி. மணி தொடங்கி வைத்தார். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்த செல்வராஜ், வழக்கறிஞர்கள் கனகசபை, உமர்க் கய்யான் ஆகியோர் ஆர்ப்பாட்டத்தை வாழ்த்தியும் மதவெறி சக்திகளைக் கண்டித்தும் பேசினர்.

### கிருட்டிணகிரியில் கையெழுத்து இயக்கம்

8.5.2011 ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணிக்கு கிருட்டிணகிரி மாவட்டம் காவேரிப்பட்டினத்தில் கழக மாவட்டத் தலைவர் தி.குமார் தலைமையில் கையெழுத்து இயக்கம் நடைபெற்றது. கழக மாவட்ட செயலாளர் கோ.பிரேம் குமார், மாவட்ட அமைப்பாளர் பழனிச்சாமி ஆகியோர் முன்னிலையில் கையெழுத்து இயக்கத்தை தொடங்கி வைத்து கருத்துரை வழங்கியவர் ம.தி.மு.க. மாவட்ட செயலாளர் வி.கே. இளங்கோ. கூட்டத்தில் கலந்து கொண்டோர்: ம.தி.மு.க. - மு.சந்திரன், மாதையன். நாம் தமிழர் கட்சி - மாவட்ட அமைப்பாளர் மணி கண்டன், தலைவர் முருகேசன், செயலாளர் சிவா. புரட்சிகர விடுதலை மற்றும் விவசாய தொழிலாளர் முன்னணி கோபால் மற்றும் கழகத் தோழர்கள் கலந்து கொண்டனர்.

### தூத்துக்குடி – நெல்லை மாவட்ட புதிய பொறுப்பாளர்கள் நியமனம்

1.5.2011 அன்று தூத்துக்குடி மாவட்டம் புதுக்கோட்டையில் தூத்துக்குடி மாவட்டத் தலைவர் பொறிஞர் சி. அம்புரோசு இல்லத்தில் தூத்துக்குடி - நெல்லை மாவட்ட கழக கலந்துரையாடல் கூட்டம் நடைபெற்றது. கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமை வகித்தார். பொதுச் செயலாளர் கோவை கு. இராமகிருட்டிணன் முன்னிலை வகித்தார். இரு மாவட்ட கழகத் தோழர்கள் கருத்துகளை தெரிவித்த பின்பு பொதுச் செயலாளர் கோவை இராமகிருட்டிணன் இயக்க வளர்ச்சிக் குறித்து உரையாற்றினார். நிறைவாக கழகத் தலைவர் கொளத்தூர் மணி, தோழர்கள் இயக்க வளர்ச்சிக்கு எந்தெந்த வகையில் பணியாற்ற வேண்டும் என கருத்துரை வழங்கினார். இக்கூட்டத்தில் புதிய பொறுப்பாளர்கள் நியமனம் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

- புதிய பொறுப்பாளர்கள்: தூத்துக்குடி மாவட்டம் - தலைவர் பொறிஞர் சி. அம்புரோசு, துணைத் தலைவர் வே.பால்ராசு, செயலாளர் கோ. அ. குமார், துணைச் செயலாளர் ச.கா.பால சுப்பிரமணியன், பொருளாளர் க.மதன். திருநெல்வேலி மாவட்ட அமைப்பாளர் - சி.ஆர். காசி ராசன்.
- ‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ சந்தா சேகரிப்பில் தோழர்கள் முனைப்புடன் செயல்பட்டு ஜூன் 30-க்குள் நிறைவு செய்ய வேண்டும்.
- தூத்துக்குடி, திருநெல்வேலி மாவட்டங்களில் நமது கழகக் கிளைகள் இல்லாத பகுதியில் கிளைகள் அமைத்திட பொறுப்பாளர்கள் கவனம் செலுத்த வேண்டும்.
- இரு மாவட்ட தோழர்களும் இணைந்து நெல்லை மாவட்ட பகுதியில் பரப்புரை பயணம் செய்திட தீர்மானிக்கப்படுகிறது.

கூட்டத்தை ஆட்சி மன்ற உறுப்பினர் பால். பிரபாகரன் ஒருங்கிணைத்தார். இறுதியில் தூத்துக்குடி மாவட்ட செயலாளர் கோ. அ.குமார் நன்றி கூறினார்.

### வடசேரியில் கழகக் கூட்டம்



26.5.2011 அன்று ஒரத்தநாடு வட்டம் வடசேரி பேருந்து நிலையத்தில் மாலை 6 மணி அளவில் ‘இராசபக்சே - ஒரு போர்க் குற்றவாளி - அய்நா. அறிக்கை’ விளக்கப் பொதுக் கூட்டம் நடைபெற்றது. அதில் தோழர் க.சொ. சிவசுப்பிரமணியன் தலைமையேற்க, கா.மா. கார்த்திகேயன் வரவேற்புரையாற்ற, தஞ்சை மாவட்ட அமைப்பாளர் சோலை மாரியப்பன், மன்னார்குடி நகர செயலாளர் இரா. காளிதாசு முன்னிலையேற்க, கழகப் பொதுச் செயலாளர் கோவை கு. இராமகிருட்டிணனும், மறுமலர்ச்சி தி.மு.க. மாநில வெளியீட்டுச் செயலாளர் ஆ. வந்தியதேவனும் சிறப்புரையாற்றினர். பேராவூரணி இளைஞரணி செயலாளர் சித. திருவேங்கடம் நன்றி கூறினார். பொதுக் கூட்டத்திற்கு நல்ல கூட்டமும், நல்ல வரவேற்பும் கிடைத்தது. இதேபோல் நல்ல விசயங்களுக்காக பொதுக் கூட்டங்கள் நடத்துங்கள், நாங்கள் ஆதரவு தருகிறோம் என்று பொது மக்களும், அ.தி.மு.க. தோழர்களும், ம.தி.மு.க. தோழர்களும் கூறினர்.

### செ.த. இராசேந்திரன் படத்திறப்பு

30.5.2011 திங்கட் கிழமை அன்று மாலை 6 மணிக்கு திருச்சி வண்ணாரப்பேட்டையில் (மகாத்மா காந்தி மருத்துவமனை அருகில்) முன்னாள் திருச்சி மாவட்டத் தலைவர் செ.த. இராசேந்திரன் படத்திறப்பு மற்றும் நினைவேந்தல் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்விற்கு மாவட்ட தலைவர் டாக்டர் எஸ்.எஸ். முத்து தலைமையேற்றார். கழகத் தலைவர் கொளத்தூர் மணி, செ.த. இராசேந்திரன் படத்தை திறந்து வைத்து நினைவேந்தல் உரையாற்றினார். சட்ட எரிப்பு வீரர் முத்துச் செழியன், சட்ட எரிப்பு வீரர் இளந்தாடி துரையரசன், பெரியார் தொண்டர் இருளாண்டி, மாவட்ட அமைப்பாளர் ஆரோக்கியசாமி, வே. இராசு, பூவாளூர் செகன்னாதன், மாவட்ட இணைச் செயலாளர் புதியவன், வழக்கறிஞர் கென்னடி, சென்னை தோழர் கவிதா, பெரியார் பாசறை விடுதலை அரசு மற்றும் மா.பெ.பொ.க., ஆதித் தமிழர் பேரவை, புதிய தமிழகம் கட்சி, த.ஓ.வி.த.இ. விடுதலை சிறுத்தைகள், ம.தி.மு.க., இ.கம்யூனிஸ்ட் கட்சி, மக்கள் உரிமை பேரவை, த.தே.பொ.க. நாம் தமிழர் கட்சி, ப.ம.மு.க., பாவாணர் தமிழ் இயக்கம், த.ம.ப.க. ஆகிய அமைப்புகளின் மாவட்டப் பொறுப்பாளர்கள் கலந்து கொண்டு நினைவேந்தல் உரையாற்றினர். கழக மாவட்டச் செயலாளர் கந்தவேல் நன்றி உரையாற்றினார்.

#### காட்டுமன்னார் கோவில் புரட்சிக் கவிஞர் விழா

6.5.2011 வெள்ளிக்கிழமை அன்று மாலை 6 மணிக்கு கடலூர் மாவட்டம் காட்டு மன்னார் கோவில் சீரணி அரங்க மேடையில் நீதிபதி மற்றும் கருப்பர் நிலம் திங்களிதழ்கள் சார்பாக இலக்கிய முப்பெரும் விழா நடைபெற்றது. பாவேந்தர் பாரதிதாசன் 121 ஆவது பிறந்த நாள் விழா, தமிழறிஞர் சி. இலக்குவனார் நூற்றாண்டு விழா, புலவர் புங்க னேரியார் 85 ஆவது பிறந்த நாள் விழா ஆகியவற்றின் முப்பெரும் விழாவிற்கு, காட்டுமன்னை தமிழ்ச் சங்கத் தலைவர் அரிமா கோ. சாமிதுரை தலைமை தாங்கினார். செல்வி சேகர் குழுவினரின் பண்ணிசை நிகழ்ச்சி, ஸ்ருதியாலயம் நாட்டிய பயிற்சிப் பள்ளி மாணவிகளின் “சங்கே முழங்கு” நாட்டிய நிகழ்ச்சி, சமர்பா குழுவின் குமரன் மற்றும் யோகராணி ஆகியோரின் பாடல்கள் ஆகியவைகளை தொடர்ந்து பா. பிரித்தா பாரதி, தி. துரை சித்தார்த்தன் ஆகியோர் உரையாற்றினர். கழகத் தலைவர் கொளத்தூர் மணி, வழக்கறிஞர் லூசியா, மார்க்சிய பெரியாரிய பொதுவுடைமை கட்சி தொழிற்சங்கத் தலைவர் மு. பாலகுருசாமி ஆகியோர் சிறப்புரை ஆற்றினர். இரா. நாகராசன் நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார். புங்கனேரியார் மனைவி தமிழரசி கழகத் தலைவருக்கு சால்வை அணிவித்து நன்றி தெரிவித்தார்.

### அகராதி – மனுவேல் வாழ்க்கை துணை ஒப்பந்த விழா



மதுரை மாநகர கழகப் பொறுப்பாளர் தமிழ்ப் பித்தன் - வெண்மணி மகள் அகராதி - மனுவேல் சாதி மத மறுப்பு வாழ்க்கை ஒப்பந்தம் 15.5.2011 அன்று மாலை 5 மணிக்கு மதுரையில் பறை முழக்கம் கலை நிகழ்ச்சியுடன் தொடங்கியது. தோழர்கள் முற்போக்குப் பாடல்களைப் பாடினர். அதனைத் தொடர்ந்து ‘மந்திரமா, தந்திரமா’ வேம்பன் தலைமையில் நடைபெற்றது. மு.வாசுகி வரவேற்புரையாற்றினார். இரஜினிகாந்த் (சாதி ஒழிப்பு முன்னணி) உரையாற்றினார். தியாகு (தமிழ்த் தேசிய விடுதலை இயக்கம்), சு. சந்திரபோஸ் (தியாகி இமானுவேல் பேரவை), கோவை இராமகிருட்டிணன் (பொதுச் செயலாளர்), கொளத்தூர் மணி (தலைவர்) மற்றும் பலர் மணமக்களை வாழ்த்திப் பேசினர்.

இரா. ஜவகர், பேராசிரியர் சரசுவதி திருமணத்தை நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்திப் பேசினர். வழக்கறிஞர் பானுமதி கேசவன், ஈரோடு கணகுறிஞ்சி மற்றும் கழகத்தைச் சேர்ந்த கோவை, ஈரோடு, சென்னை, தூத்துக்குடி, திண்டுக்கல், திருப்பூர் மற்றும் பல்வேறு மாவட்டங்களிலிருந்து தோழர்கள் கலந்து கொண்டனர். நிறைவாக வெண்மணி அனைவருக்கும் நன்றி தெரிவித்தார். அனைத்து தரப்பு மக்களும் இந்நிகழ்ச்சியை பார்த்துவிட்டு திருமண விழாவா! மாநாடா! என்று அவர்களுக்குள் பேசிக் கொண்டு சென்றனர்.

### ஈரோட்டில் வாழ்வுரிமை மாநாடு

27.5.2011 - வெள்ளிக் கிழமை அன்று காலை 10 மணி முதல் ஈரோடு மல்லிகை அரங்கில், தமிழகத் தொழிலாளர் முன்னணி சார்பாக, தமிழகத் தொழிலாளர்கள் வாழ்வுரிமை மாநாடு நடைபெற்றது. பேரணி, புகைப்படக் கண்காட்சி திறப்பு ஆகியவைகளை தொடர்ந்து மாநாட்டு அரங்கின் முதல் அமர்வு, சமர்பா கலைக் குழுவினரின் எழுச்சிப் பாடல்களோடு துவங்கியது. தோழர் தமிழழகன் (த.தொ.மு.) தலைமையேற்க ப. கதிர்வேல் வரவேற்புரையாற்றினார். கழகத் தலைவர் கொளத்தூர் மணி, ‘சிறு தொழில்களை சீரழித்து வரும் பன்னாட்டு நிறுவனங்கள்’ என்ற தலைப்பில் உரையாற்றினார்.

### எம்.எப். உசேன் மரணமும் ‘இந்துத்துவா’ கும்பலின் வெறியாட்டமும்

உலகப் புகழ் பெற்ற ஓவியராகத் திகழ்ந்து, சர்வதேச விருதுகளைக் குவித்த எம்.எப். உசேன் தனது 95வது வயதில் லண்டனில் ஜூன் 9 ஆம் தேதி மரணமடைந்தார். ஓவியரின் கற்பனையாற்றலில் உருவான படைப்புகளுக்கு இந்துத்துவ சக்திகள் மதச் சாயம் பூசி விலை மதிக்க முடியாத அவரது ஓவியக் கூடங்களை சிதைத்தனர். இந்து கடவுள்களை நிர்வாணமாக வரைந்தார் என்று குற்றம் சாட்டினர். கஜீரோ, கோனாரக் குகைகளில் இந்து கடவுள் சிற்பங்கள் நிர்வாணமாக செதுக்கப்பட்டிருப்பதற்கு எதிர்ப்பு தெரிவிக்காத இந்து மதவெறி சக்திகள், உசேன் மீது மட்டும் பாய்ந்தன. காரணம் - அவர் பிறப்பால், ஒரு இஸ்லாமியர் என்பதால்தான். நீதிமன்ற வழக்குகளால அலைக்கழிக்கப்பட்டு, பிடி வாரன்ட் பிறப்பிக்கப்பட்ட நிலையில் வெளி நாடுகளில் அடைக்கலம் தேடி அந்த உன்னதமான கலைஞன் ஓட வேண்டியதாயிற்று. ‘கத்தார்’ நாடு அவருக்கு குடிஉரிமை வழங்கியது. லண்டனில் தனிமனிதராக வாழ்ந்த அந்தக் கலைஞர், பிறந்த மராட்டியத்துக்கு திரும்ப முடியவில்லையே என்ற கவலையுடன் விடைபெற்றுக் கொண்டார். இந்துத்துவ சக்திகள் கருத்து சுதந்திரத்தில் மேல் நடத்திய இந்த தாக்குதல் நாட்டுக்கே தலைகுனிவை ஏற்படுத்தி விட்டது.

# ராஜீவ் கொலை: காங்கிரஸ் ஆட்சி அழித்த கோப்புகள் [ 1 ]

***ராஜீவ் சர்மாவின் ‘புலிகளுக்கு அப்பால்....’ நூலுக்கு மறுப்பு தெரிவித்து, அதன் வெளியீட்டு விழாவில் விடுதலை இராசேந்திரன் ஆற்றிய உரையின் தொகுப்பு.***

சவுக்குப் பதிப்பகத்தின் முதல் வெளியீடாக வெளி வந்திருக்கும் இந்த நூலை வெளியிடும் வாய்ப்பை எனக்கு வழங்கிய சவுக்கு பதிப்பகத்துக்கு நன்றியையும் மகிழ்ச்சியையும் தெரிவித்துக் கொள்கிறேன். 1998 ஆம் ஆண்டு ராஜிவ் சர்மா எழுதிய ‘Beyond the Tigers’ என்ற நூலை ஆனந்தராஜ், மிகச் சிறந்த நடையில் விறுவிறுப்பாக தமிழாக்கம் செய்துள்ளார். நூலின் பதிப்புரையில் குறிப்பிட்டுள்ளவாறு, “முடிவடையாத ஒரு விசாரணையின் அடிப்படையில் 7 பேர் 21 ஆண்டுகளாக சிறைக் கொட்டடியில் இருப்பது என்பது எவ்வளவு பெரிய விஷயம்?.......... சிறைக் கொட்டடியில் இருப்பவர்களின் பக்கம் மக்களின் கவனத்தைத் திருப்பினால், அதுவே இப்புத்தகத்துக்குக் கிடைத்த வெற்றி” என்று எழுதியிருப்பதுபோல் நல்ல தமிழின உணர்வோடு, நல்ல நோக்கத்தோடு தான் இந்த நூல் வெளியிடப்பட்டிருக்கிறது. சவுக்கு இணையதளத்தின் முகப்பிலேயே தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன் படம்தான் கம்பீரமாக காட்சி தரும். இந்நூலை வெளியிட்ட சவுக்கு பதிப்பகத்தின் உணர்வு - நோக்கம் மிகவும் மதிக்கத்தக்கது என்பதில் இரண்டுவித கருத்துகளுக்கு இடமில்லை.

ஆனால், என்னுடைய வருத்தமெல்லாம் - இந்த நோக்கத்துக்கு இந்த நூலின் உள்ளடக்கம் பயன்படுமா என்பது பற்றித்தான். இந்த நூலின் மய்யமான கருத்தை இப்படிக் கூறலாம். அதாவது ராஜீவ் காந்தியை கொலை செய்தது விடுதலைப் புலிகள்தான் என்று உறுதி செய்கிறது இந்த நூல். அந்தக் கொலைக்குப் பின்னால், சில சர்வதேச சக்திகள் இருந்தன. அந்த சர்வதேச சக்திகளுக்காக விடுதலைப் புலிகள் இந்தக் கொலையை செய்து முடித்துவிட்டு, அதற்கு பிரதிபலன்களாக சக்தி வாய்ந்த கப்பல்களையும் ஆயுதங்களையும் பெற்றுக் கொண்டார்கள். ராஜிவ் காந்தி கொலைக்குப் பிறகுதான் புலிகளுக்கு கப்பல்களில் சக்தி வாய்ந்த ஆயுதங்கள் வரத் தொடங்கின. ‘கூலிப் படைகள்’ என்பதுபோல் விடுதலைப் புலிகள் இதில் செயல்பட்டிருக்கிறார்கள். எனவே வழக்கை மறு விசாரணைக்கு உட்படுத்தி, இந்த சதியில் ஈடுபட்டவர்களையும் விசாரணை நடத்த வேண்டும் என்பதே இந்நூலின் மய்யக் கருத்து. எனவேதான் “விடுதலைப்புலிக.ளுக்கு அப்பால்...”; என்று தலைப்பிடப்பட்டுள்ளது. இந் நூலுக்கு ராஜீவ் கொலை நடந்தபோது மத்திய புலனாய்வுத் துறையின் இயக்குனராக இருந்த விஜய்கரன் என்ற அதிகாரியே முன்னுரை எழுதியிருப்பதை சுட்டிக் காட்ட வேண்டும். அவர் இந்த நூல் ஒரு போலீஸ் டைரியைப் போல் இருப்பதாக குறிப்பிடுகிறார். போலீஸ் டைரியைப்போல் என்பதைவிட, காவல்துறை டைரியிலிருந்தே அப்படியே பிரதி எடுக்கப்பட்டுள்ளது என்றே கூற வேண்டும். ஆக, புலனாய்வுத் துறையில் ஈடுபட்டிருந்த ஒரு அதிகாரியே இந்த நூலை உருவாக்குவதில் பெரும்பங்கு கொண்டிருப்பார் என்ற முடிவுக்கு வர வேண்டியிருக்கிறது. நூலின் பின் இணைப்புகளாக தரப்பட்டுள்ள ஆவணங்கள் புலனாய்வுத் துறை தொடர்பானவைகளாகவே உள்ளன. நூலின் முதல் 8 அத்தியாயங்கள் விடுதலைப் புலிகள் ராஜிவ் கொலைக்கு சதித் திட்டம் தீட்டியதையும், அதை நடத்தி முடித்ததையும் மிக மிக விரிவாக எழுதுகிறது.

அந்த அத்தியாயங்களில் விடுதலைப் புலிகள் மீது மிக மிக மோசமான குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகின்றன. தமிழ்நாட்டில் விடுதலைப் புலிகள் இயக்கத்தைக் கொச்சைப்படுத்துவதையே நோக்கமாகக் கொண்டு சிலர் செயல்பட்டு வருகிறார்கள். அவர்களின் நோக்கத்துக்கு இந்த நூல் வலிமையான சான்றாகிவிடும் என்ற கவலையால் நான் இதை மறுக்கவேண்டிய நிலையில் இருக்கிறேன். தமிழ் ஈழத்தின் விடுதலைக்காக மாவீரர்களை களப்பலியாக்கி, கரும்புலிகளை உருவாக்கி, உலக விடுதலை இயக்கங்களாலே மிகவும் மதிக்கப்பட்ட விடுதலைப் புலிகள் இயக்கத்தையும் தமிழ் ஈழ விடுதலையையும் ஆதரித்து நீண்டகாலமாகவே களத்தில் நின்று கடமையாற்றியவர்கள் என்ற முறையில் இதை மறுக்க வேண்டிய கடமையும் பொறுப்பும் எங்களுக்கு உண்டு.

ராஜீவ் கொலையில் அன்னிய சக்திகளின் பங்களிப்பை நாம் மறுக்கவில்லை. அவர்களின் பங்களிப்பு மூடி மறைக்கப்பட்டுவிட்டதை நாம் ஏற்கனவே சுட்டிக்காட்டி எழுதியுள்ளோம். 1998 ஆம் ஆண்டு நான் எழுதிய ‘ராஜீவ் கொலையில் மறைக்கப்பட்ட உண்மைகள்’ என்ற நூல் ‘26 தமிழர் உயிர்க் காப்பு வழக்கு நிதிக் குழு’வால் வெளியிடப்பட்டு தமிழகம் முழுதும் பல்லாயிரக்கணக்கில் பரப்பப்பட்டது. ‘தொடர்ந்து ராஜீவ் கொலையில் பதுங்கி நிற்கும் சாமிகள்’ என்ற தலைப்பில் நான் எழுதி, பெரியார் திராவிடர் கழக சார்பில் வெளியிடப்பட்ட நூலில் சுப்ரமணியசாமி, சந்திரா சாமிகளுக்கு இதிலுள்ள தொடர்புகள் அம்பலப்படுத்தப்பட்டது. அவர்கள் விசாரிக்கப்பட வேண்டியவர்கள் என்பதில் நமக்கு கருத்து வேறுபாடு கிடையாது. அதைத் தொடர்ந்து வலியுறுத்தியும் வருகிறோம்.

ராஜீவ் கொலை தொடர்பாக மூன்று விசாரணைகள் நடந்தன. ஒன்று - கார்த்திகேயன் தலைமையிலான சிறப்புப் புலனாய்வுக் குழு விசாரணை. இந்த விசாரணையின் அடிப்படையில் தான் 7 தமிழர்கள் 21 ஆண்டுகளாக சிறையில் வாடுகிறார்கள். அதில் 3 பேர் தூக்குத் தண்டனையை எதிர் நோக்கி இருக்கிறார்கள். மற்றொன்று - ராஜீவ் மரணமடைந்த 7 நாட்களில் ராஜீவுக்கு வழங்கப்பட்ட பாதுகாப்புகளில் ஏதேனும் குறைபாடுகள் இருந்ததா என்பதைக் கண்டறிய உச்சநீதிமன்ற நீதிபதி ஜே.எஸ். வர்மா தலைமையில், 1991 ஆம் ஆண்டு மே 27 ம் தேதி அமைக்கப்பட்ட விசாரணை ஆணையம், ஓராண்டு காலத்தில் இந்த விசாரணை ஆணையம் தனது பணியை முடித்து 1992 ஜூன் மாதம் அரசிடம் பரிந்துரையை தாக்கல் செய்தது.

இந்த ஆணையம் நியமிக்கப்பட்டபோது பிரதமராக இருந்தவர் சந்திரசேகர். சுப்ரமணியசாமி சட்ட அமைச்சர். அறிக்கையை தாக்கல் செய்த போது காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த நரசிம்மராவ் பிரதமர். மத்திய மாநில அரசின் புலனாய்வுப் பிரிவுகளையும், தமிழகப் போலீசாரின் பாதுகாப்பு ஏற்பாடுகளையும் இந்த ஆணையம் கடுமையாகக் .குறை கூறியது. அது மட்டுமல்ல, ராஜீவ் மரணமடைந்த திருப்பெரும்புதூர் கூட்டத்துக்கு வந்திருந்த காங்கிரசாரையும் கடுமையான வார்த்தைகளால், விமர்சனம் செய்திருந்தது. அங்கே காங்கிரசார், பொறுப்புணர்வோ, ஒழுங்கோ இல்லாதவர்களாக செயல்பட்டுள்ளனர் என்கிறது அந்த அறிக்கை. மூன்றாவதாக நியமிக்கப்பட்டதுதான் உயர்நீதிமன்ற நீதிபதி ஜெயின் ஆணையம். நீதிபதி சர்மா பாதுகாப்பு குறைபாடுகள் பற்றித் தான் தம்மால் விசாரிக்க முடியுமே தவிர, சதித் திட்டம் பற்றி தம்மால் விசாரிக்க முடியாது என்று மறுத்து விட்டார். இந்த நிலையில் ராஜீவ் கொலைக்குப் பின்னால் நடந்த சதி, பின்னணி காரணங்கள் தொடர்புள்ள தனி நபர்கள், நிறுவனங்கள் பற்றி நீதிபதி ஜெயின் ஆணையம் விசாரணை நடத்தியது. 12 முறை கால நீட்டிப்புப் பெற்று 6 ஆண்டுகாலம் விசாரணை நடத்திய இந்த ஆணையம், கடைசியில் அவசர அவசரமாக இடைக்கால அறிக்கை ஒன்றை மட்டும் சமர்ப்பித்து விட்டு ஒதுங்கிக் கொண்டது. ராஜீவ் கொலைக்கு விடுதலைப்புலிகள் மற்றும் தி.மு.க. ஆட்சியைக் குற்றம் சாட்டியதோடு, தமிழ் நாட்டு மக்களையும் குற்றவாளிகளாக அதன் அறிக்கை கூறியது - இது கடும்புயலைக் கிளப்பியது.

ராஜீவுக்கு உரிய பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்படவில்லை என்று வர்மா ஆணையம் கூறிய பிறகு, அப்படி பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்படாததற்கு யார் காரணம்? அவர்கள் மீது, ராஜீவுக்காக கண்ணீர் வடிக்கும் காங்கிரஸ் கட்சி, நடவடிக்கை எடுத்ததா என்றால், எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. அது மட்டுமல்ல, நரசிம்மராவ் பிரதமராக இருந்தபோது ராஜீவ் கொலை விசாரணை தொடர்பான மிக முக்கியமான கோப்புகள் காணாமல் போய்விட்டன. அப்படி காணாமல் போன கோப்புகளை ஆதாரங்களுடன் அப்போது ‘அவுட் லுக்’ ஏடு (24.11.1999 இதழ்) பட்டியலிட்டுக் காட்டியது.

1) 1989 நவம்பரிலிருந்து ராஜீவ் காந்தியின் பாதுகாப்பு ஏற்பாடுகள் பற்றி அதிகாரிகள் எழுதிய குறிப்புகளைக் கொண்ட கோப்பு பிரதமர் அலுவலகத்திலிருந்து 1991 ஆம் ஆண்டிலிருந்து காணாமல் போய் விட்டது. (கோப்பு எண்.8-1-WR/JSS/90/volIII) ஜெயின் ஆணையம் இந்தக் கோப்பை கேட்டபோது கோப்பைக் காணவில்லை. பிறகு பொய்யாக, ஒட்டு வேலைகள் செய்து ஒரு கோப்பை தயாரித்து, ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார்கள். இந்தக் கோப்புகளை எழுதிய அதிகாரிகளில் ஒருவர் வினோத் பாண்டே இவர் வி.பி.சிங் பிரதமராக இருந்தபோது அமைச்சரவை செயலாளராக இருந்தவர். ஜெயின் ஆணையத்தின் முன் சாட்சியமளித்த அந்த அதிகாரி, கோப்புகளைப் பார்த்து அதிர்ச்சியடைந்து, இந்தக் கோப்புகளில் தான் எழுதிய குறிப்புகள் இடம் பெறவில்லை; இவை திருத்தப்பட்டவை என்றார். அப்போது உள்துறையில் துணை அமைச்சராக இருந்தவர், இப்போது ‘இளம் தலைவர் ராஜீவ்’க்காக கண்ணீர் வடிக்கும் ப. சிதம்பரம்தான். கோப்புகள் திருத்தி, ஒட்டி, போலியாக தயாரிக்கப்பட்டதாக குற்றச்சாட்டுகள் எழுந்ததைத் தொடர்ந்து ஜெயின் ஆணையம் உள்துறை அமைச்சகததை அழைத்துக் கேட்டது. ப. சிதம்பரம் கூண்டில் ஏற்றி, ‘ஆம் கோப்புகளை புதிதாக தயாரித்தது உண்மைதான்’ என்று ஒப்புக் கொண்டார். இவர்கள் தான் ராஜீவ் மரணத்துக்கு குடம் குடமாக கண்ணீர் வடிக்கிறார்கள்.

2) நீதிபதி வர்மா மற்றும் நீதிபதி ஜெயின் விசாரணை ஆணையத்துக்கான வரம்புகளை நிர்ணயித்து பிறப்பிக்கப்பட்ட அரசாணைகள் அடங்கிய மற்றொரு கோப்பு 1995 ஆம் ஆண்டு முதல் காணாமல் போய் விட்டது. (கோப்பு எண்.1/120/14/5/911/A.S./DIII).

3) சந்திரசாமி, ஜனதா கட்சித் தலைவர் சுப்ரமணியசாமி ஆகியோருடன் வெளிநாட்டு உளவு நிறுவனங்கள் தொடர்பு கொண்டு பேசியபோது, இடைமறித்துக் கேட்கப்பட்ட உரையாடல்களைப் பதிவு செய்த கோப்பை பிரதமர் அலுவலக மூத்த அதிகாரிகளே அழித்து விட்டனர்.

4) 1987 ஆம் ஆண்டு பிரதமர் ராஜீவ் காந்திக்கும், அன்றைய குடியரசுத் தலைவர் ஜெயில்சிங்குக்கும் இடையே மோதல் உருவானது. இந்திரா சுட்டுக் கொல்லப்பட்டவுடன், அப்போது எந்தப் பொறுப்பிலும் இல்லாத ராஜீவுக்கு பிரதமராக பதவிப் பிரமாணம் செய்து வைத்து, நாட்டின் பிரதமராக்கியதே அப்போது குடியரசுத் தலைவராக இருந்த ஜெயில் சிங் தான். பதவி அதிகாரத்துக்கு வந்த ராஜீவ் - அதிகார மமதையில் குடியரசுத் தலைவர் அலுவலகத்தையே அவமதிக்கத் தொடங்கிய நிலையில் ஒரு கட்டத்தில், குடியரசுத் தலைவரே ராஜீவ் ஆட்சியைக் கவிழ்க்கும் நடவடிக்கைகளில் இறங்கினார். அப்போது குடியரசுத் தலைவர் ஜெயில் சிங்கும், சர்வதேச ஆயுதத் தரகரும், சாமியாரும், சுப்ரமணியசாமி நண்பருமான சந்திரசாமியும், மேற்கொண்ட ஆட்சிக் கவிழ்ப்பு நடவடிக்கைகள் பற்றி இந்திய உளவு நிறுவனம் (I.B.) கண்டறிந்த உண்மைகளும், பரிந்துரைகளும் கொண்ட கோப்புகளும் காணாமல் போய் விட்டன.

நரசிம்மராவின் குருவாக செயல்பட்டவர் சந்திரசாமி. பிரதமராக இருந்த சந்திரசேகரின் குருவும் சந்திரசாமிதான். அன்னியச் செலவாணி மோசடி, தொடர்பாக பல வழக்குகளில் சிக்கியவர். சர்வதேசப் புள்ளிகளுடன் நெருக்கமான உறவு கொண்டவர். இவர் ஒரு பார்ப்பனர். நேர்மையான பொது வாழ்வுக்கு இலக்கணமாகத் திகழ்ந்த சமூக நீதிக் காவலர் வி.பி.சிங்கை களங்கப்படுத்தும் நோக்கத்தோடு, வி.பி.சிங் மகனுக்கு செயின்ட் கிட்ஸ் எனும் தீவில் ரகசிய வங்கிக் கணக்கு இருப்பதாக, ஒரு போலி ஆவணத்தைத் தயாரித்து, அன்றைய பிரதமர் நரசிம்மராவிடம் வழங்கி, வி.பி.சிங் மகனை கைது செய்ய இவர் முயற்சித்தார். இதற்கு பார்ப்பனர் நரசிம்மராவும் உடந்தை. பிறகு, அது போலி ஆவணம் என்பது நீதிமன்றத்தில் நிரூபிக்கப்பட்டதால், கிரிமினல் வழக்குக்கு உள்ளானார். நீண்டகாலம்

4 ஆம் பக்கம்

PURATCHI PERIYAR MUZHAKKAM TAMIL WEEKLY REG.NO.TN/CCN/488/09-11 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/09-11
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/7776

# தமிழக இறையாண்மையை அவமதிக்கும் இந்திய அதிகாரிகள்

(முதல் பக்கத் தொடர்ச்சி)

ராஜபக்சேயிடம் பேசவே இல்லை என்கிறார். நியாயமாக தமிழக முதல்வரிடம் இது பற்றிப் பேச வேண்டியது வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணாவே தவிர, இந்த அதிகாரிகள் அல்ல. ஈழத் தமிழர் பிரச்சினைகளைக் கையாளும் உரிமைகளை மத்திய அரசு இந்த அதிகாரிகளிடம் ஒப்படைத்திருப்பது வன்மையான கண்டனத்துக்கு உரியது. சிவசங்கரமேனன் பதவியிலிருந்து நீக்கப்பட வேண்டும்.

இப்போது தமிழக சட்டமன்றம் நிறைவேற்றியுள்ள தீர்மானத்துக்கு, இந்திய அரசின் பதில் என்ன? இதை ஆதரிக்கிறார்களா? புறந்தள்ளுகிறார்களா? இதை உடனடியாக அறிவிக்க வேண்டும். இதுதான் இப்போது பிரச்சினை. இந்த கோரிக்கையை முன் வைத்து நாம், தமிழக சட்டமன்றத் தீர்மானத்தை முன்னோக்கி நகர்த்த வேண்டும். தமிழக இறையாண்மையை மத்திய அரசு ஏற்க மறுத்தால், இந்திய இறையாண்மைக்கு எதிராக கேள்வி எழுந்து விடும் என்பதை ஆட்சியாளர்கள் உணர வேண்டும்" என்று குறிப்பிட்டார்.

இறுதியாக புலவர் புலமைப் பித்தன் உரையாற்றினார். "தமிழர்களுக்கு எதிரான போரை நடத்தியதே இந்தியா தான். அந்த துரோகத்துக்கு தி.மு.க. ஆட்சியும் துணை நின்றது. இந்திய அரசு, இரகசியமாக வழங்கிய ஆயுத உதவிகளை அங்கே செய்தி சேகரிப்பவராக செயல்பட்ட ஏ.கோகலே என்பவர் நூலாக எழுதி வெளியிட்டுள்ளார்" என்று கூறி, நூலிலிருந்து பல செய்திகளை சுட்டிக் காட்டினார். தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு முதல்வர் எம்.ஜி.ஆர். செய்த உதவிகளை விவரித்த புலவர் புலமைப் பித்தன் தமிழக முதல்வர் ஜெயலலிதா எந்த ஒரு முடிவை எடுத்தாலும் அதில் உறுதியாக நிற்பார். இதை நம்பலாம் என்று உறுதி கூறினார்.

"இப்படி ஒரு நிகழ்ச்சியை நடத்த வேண்டும் என்று நான் விரும்பினேன். ஆனால், அதை பெரியார் திராவிடர் கழகம் செய்து காட்டிவிட்டது. பெரியார் திராவிடர் கழகத்தின் போராட்டங்களையும் செயல்பாடுகளையும் நான் தொடர்ந்து கவனித்து வருகிறேன். இதுதான், பெரியார் கொள்கைக்காக பாடுபடும் உண்மையான பெரியாரின் திராவிடர்கழகம். 1948 ஆம் ஆண்டு முதல் நான் கருப்புச் சட்டைக்காரன். நான் கருப்புச் சட்டைப் போடாவிட்டாலும், எப்போதும் உள்ளத்தில் கருப்புச் சட்டைக்காரன்தான். அந்த உணர்வோடு சொல்கிறேன், இந்த அமைப்புதான் சரியான திசையில் செயல்படுகிறது. இப்போது பெரியார் இருந்திருந்தால் என்ன செய்திருப்பாரோ அதை பெரியார் திராவிடர் கழகம் செய்கிறது" என்று பாராட்டினார்.

தமிழக சட்டமன்றத் தீர்மானத்தைப் பாராட்டியும், ராஜபக்சேவை சந்தித்த இந்தியத் தூதுக் குழுவைக் கண்டித்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. தென்சென்னை மாவட்ட கழகத் தலைவர் தபசி. குமரன் நன்றி கூற, 9.15 மணியளவில் நிகழ்ச்சி முடிவுற்றது.

## தோள் கொடுத்து துணை நிற்போம்!

*ஈழத் தமிழர் – கச்சத் தீவு உரிமைகளுக்காக தமிழக சட்ட மன்றத்தில் வரலாற்று சிறப்பு மிக்க தீர்மானத்தை நிறைவேற்றிய தமிழக முதல்வரைப் பாராட்டி 13.6.2011 அன்று பெரியார் திராவிடர் கழகம் நடத்திய கருத்தரங்கில் அனைவரின் கரவொலிக்கிடையே நிறைவேற்றப்பட்ட தீர்மானம்:*

ஈழத் தமிழர்கள் மீது இலங்கை அரசு நடத்திய இனப்படுகொலையில் நடந்த போர்க் குற்றங்களுக்கு எதிராகவும், ஈழத் தமிழர் மற்றும் கச்சத்தீவு உரிமைகளை வலியுறுத்தியும், இந்தியா - இலங்கை மீது பொருளாதார தடை கோரியும், தமிழக முதல்வர் 8.6.2011 அன்று சட்டமன்றத்தில் தீர்மானம் கொண்டு வந்து, ஈழத்தமிழர் போராட்ட வரலாற்றில் பெருமை சேர்த்துள்ளார். தாய்த் தமிழகத்து ஆட்சியின் ஆதரவு கிடைக்காதா என்று ஏங்கித் தவித்த - ஈழத் தமிழர்களின் கண்ணீரைத் துடைத்து, தமிழக மக்களுக்கும் உலகம் முழுதும் வாழும் தமிழர்களுக்கும் ஆறுதலையும், நம்பிக்கையையும் இத் தீர்மானத்தின் வழியாக வெளிப்படுத்திய தமிழக முதல்வர் அவர்களை உளம் திறந்து பாராட்டுவதில் உவகை அடைகிறோம்.

தமிழ்நாட்டில், மக்கள் செல்வாக்கோடு நடைபோடும், இந்த ஆட்சி, ஈழத் தமிழர்களின் உரிமைக்காக எடுக்கும் அனைத்து நடவடிக்கைகளுக்கும் தோள் கொடுத்து துணை நிற்போம் என்று உறுதி கூறுகிறோம்.

2) இலங்கை அதிபர் ராஜபக்சேயை சந்தித்த பாதுகாப்பு ஆலோசகர் சிவசங்கரன் தலைமையிலான இந்திய அதிகாரிகள் குழு, தமிழக சட்டமன்றத் தீர்மானத்தையோ, ராஜபக்சேவின் மனித உரிமை மீறல்களையோ ராஜபக்சேயிடம் வலியுறுத்தவில்லை என்று வெளிப்படையாகவே அறிவித்திருக்கிறது. இது, தமிழக முதல்வரையும் ஒரு மனதாக நிறைவேற்றப்பட்டுள்ள சட்டமன்றத் தீர்மானத்தின் உணர்வுகளையும், தமிழக மக்களையும் அவமதிக்கும் செயல் என்று கருதி, இந்த அவை இந்திய அரசுக்கு வன்மையான கண்டனத்தை தெரிவிப்பதோடு சிவசங்கரமேனனை பதவி நீக்கம் செய்ய வேண்டும் என்று வற்புறுத்துகிறது.

### கழகத் தலைவர் ஆறுதல்

பெரியார் பெருந்தொண்டரும், மந்திரமா தந்திரமா நிகழ்ச்சியாளர்களின் முன்னோடியுமான டாக்டர் புரபசர் கே.ஆர். குமார், 19.2.2011 அன்று இயற்கையெய்தினார். 2.6.2011 அன்று கழகத் தலைவர் கொளத்தூர் மணி, பொதுச் செயலாளர் கோவை இராமகிருட்டிணன், கும்பகோணம் ஒன்றியம் திருவஞ்சுழியில் உள்ள அவரது இல்லத்திற்குச் சென்று இரங்கல் தெரிவித்தனர்.

பெரியார் பெருந்தொண்டர் பட்டுக்கோட்டை நா. இராமாமிர்தம் 24.5.2011 அன்று இயற்கையெய்தினார். 1.6.2011 அன்று சீனிவாசபுரத்தில் உள்ள அவரது இல்லத்திற்கு சென்று கழகத் தலைவர் கொளத்தூர் மணி இரங்கல் தெரிவித்தார்.

*3 ஆம் பக்கத் தொடர்ச்சி*

டெல்லி திகார் சிறையில் அடைபட்டிருந்த இந்த சந்திராசாமி, அண்மையில் தான் மரணமடைந்தார். ராஜீவ் கொலை தொடர்பாக - ஜெயின் ஆணையம், இந்த சந்திராசாமி, சுப்ரமணிய சாமிகளை விசாரணை நடத்தியது. ஆனால் இவர்களின் சதிச் செயல்களுக்கு ஆதாரமான பல அரசுக் கோப்புகள், நரசிம்மராவ் ஆட்சியில் அழிக்கப்பட்டு விட்டன. இந்த செய்தி களையெல்லாம் 'அவுட்லுக்' பத்திரிகை ஆதாரங் களை முன் வைத்து எழுதியதை நான் எழுதிய "ராஜீவ் படுகொலையில் மறைக்கப்பட்ட உண்மைகள்" நூலில் 1998 ஆம் ஆண்டில் பதிவு செய்துள்ளேன்.

ராஜீவ் சர்மாவின் இந்த நூல் பிரபாகரனை ஈழத்துக்குள் சென்று ஏன் பிடித்து வந்து விசாரிக்கவில்லை என்ற கேள்வியை எழுப்பி, "இந்தியாவின் ஒற்றுமைக்கும், ஒருமைப் பாட்டுக்கும் மிரட்டல்விடுக்கும் தீவிரவாத இயக்கத் தலைவர் பிரபாகரனைப் பிடிக்க, ஏன் புதுடில்லி தைரியமான வெளிப்படையான தாக்குதலைத் தொடங்கக் கூடாது?" (பக்.319) என்று கடும் கோபத்துடன் கேள்வி எழுப்புகிறது. ராஜீவ் கொலையில் நடந்த அன்னிய சதியை பிரபாகரனே மறைப்பதாகவும், எனவே செயற்கைக் கோள் வசதியைப் பயன்படுத்தி பிரபாகரனைப் பிடித்து வர வேண்டும் என்றும் இந்த நூல் வலியுறுத்துகிறது.

'எனது இந்தியா உயர்வானது' என்று முழக்கத்தைத் தந்து நாட்டுக்கே கவுரவத்தைத் தந்த தலைவர் ராஜீவ் மரணத்தால் இந்தியாவின் கவுரவமே அந்தரத்தில் ஊசலாடுவதை (பக்.318) எப்படி பொறுத்துக் கொண்டிருக்க முடியும் என்று ஆவேசமாக 'தேச பக்தி' பேசுகிறது.

ராஜீவ் கொலையில் அன்னிய சக்திகளின் தலையீடு இருந்தது என்பது வேறு; அன்னிய சக்திகளின் கூலிப் படையாக விடுதலைப் புலிகள் செயல்பட்டார்கள் என்பது வேறு. இந்த நூல் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மீது, அப்படி ஒரு இழிவான பழியை வெளிப்படையாகவே சுமத்துகிறது. இந்திய உளவுத் துறையும், ஊடகங்களும் விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு எதிராக பரப்பிவரும் ஆதாரமற்ற அவதூறுகள் அத்தனையும் இந்த நூலில் இடம் பிடித்துள்ளன. இந்த அவதூறுகளையும் குற்றச்சாட்டுகளையும் உரிய ஆதாரங்களோடு நம்மால் மறுக்க முடியும்.

**– தொடரும்**

**இளம்பிள்ளையில் நடந்த நாத்திகர் விழா – அடுத்த இதழில்**



## 'வாசகர் வட்டம்' மாணிக்க. சண்முகம் முடிவெய்தினார்

'பெரியார் நூலக வாசகர் வட்ட' மாணிக்க. சண்முகம் (84) அவர்கள், 9.5.2011 அன்று சென்னையில் முடிவெய்தினார். மத்திய தணிக்கைத் துறையில் தலைமை கணக்காளராகப் பணியாற்றியவர். தமது பணிக் காலத்திலேயே பெரியார் அண்ணா கொள்கைகளைப் பரப்புவதில் தீவிரமாக செயல்பட்டவர். நகர இளைஞர் கழகம், நண்பர்கள் கழகம், சுய சிந்தனையாளர் பேரவை போன்ற அமைப்புகள் வழியாக பகுத்தறிவு - திராவிடர் இயக்கக் கொள்கைகளைப் பரப்பிய அவர், 1976 இல் உருவாக்கிய பெரியார் நூலக வாசகர் வட்டத்தின் செயலாளராக 10 ஆண்டுகள் தொடர்ந்து பணியாற்றி, ஒவ்வொரு வியாழக்கிழமையும் விடாது, பெரியார் திடலில் கூட்டங்களை நடத்தி சாதனை புரிந்தவர். பெரியார் திராவிடர் கழகத்தின் மீது மிகுந்த ஈடுபாடு கொண்டு, கழக ஏடான புரட்சிப் பெரியார் முழக்கத்தை விடாமல் படித்து, அவ்வப்போது கருத்துகளைப் பகிர்ந்து வந்தவர். இறுதிக் காலம் வரை கொள்கை அடையாளத்தோடு வாழ்ந்து காட்டிய பெருமை அவருக்கு உண்டு. கழக சார்பில் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், கழகப் பொறுப்பாளர்கள் தபசி. குமரன், கேசவன், அன்பு தனசேகரன், அண்ணாமலை மற்றும் எம்.ஜி.ஆர். நகர் பகுதி தோழர்கள், பேராசிரியர் சரசுவதி (நாடு கடந்த தமிழீழ அரசு தோழமை மய்யம்) அவருக்கு இறுதி மரியாதை செலுத்தினர்.

**"புரட்சிப் பெரியார் முழக்கம்"**

**ஆண்டுக்கட்டணம் ரூ.150/-**


தொடர்புக்கு: ஆசிரியர், 29, பத்திரிகையாளர் குடியிருப்பு, திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை-41. ✆ 99416 13535

Tamil Weekly

Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 16th June 2011

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.



புரட்சிப் பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2042 | ஜுன் 23, 2011 | புரட்சி 10 | முழக்கம் 23 | விலை: ரூ.2.50


## அன்னூர் ஒன்றியத்தில் பொதுக் குழாயில் தலித் மக்கள் தண்ணீர் எடுக்க தடையை எதிர்த்து

# 1000 குடங்களில் தண்ணீர் எடுக்கும் போராட்டம்

## தமிழகம் முழுதுமிருந்தும் தோழர்கள் திரளுகிறார்கள்

***கோவை மாவட்டம் அன்னூர் ஒன்றியத்தில் தலைவிரித்தாடும் சாதி தீண்டாமை ஒடுக்கு முறைகளுக்கு எதிராக 1000 குடங்களில் தண்ணீர் பிடிக்கும் போராட்டத்தை பெரியார் திராவிடர் கழகம் வரும் 27 ஆம் தேதி நடத்துகிறது. செய்தி விவரம்:***

கோவை மாவட்டம் அன்னூர் ஒன்றியத்தில் தீண்டாமை பல்வேறு வடிவங்களில் தலைவிரித்தாடு கிறது. அரசு பொதுக் குளங்களில் தண்ணீர் எடுக்க முடியாது; தேனீர்க் கடைகளில் இரட்டைக் குவளை; தலித் மக்கள் இரு சக்கர வாகனங்களில் பயணம் செய்ய முடியாது; இப்படி பல்வேறு வடிவங்களில் நிலவி வரும் தீண்டாமையைக் கண்டித்து, கடந்த மாதம் 21.5.2004 அன்று அன்னூரில் பொதுச் செய லாளர் கோவை இராமகிருட்டிணன் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடந்தது. தீண்டாமை கொடுமை நிலவும் கிராமங்களின் பட்டியலையும், தீண்டாமை வடிவங்களும் அதில் குறிப்பிடப்பட்டிருந்தன. குறுக்கிளையான் பாளையம் கிராமத்தில் பொதுக் குழாய்களில் தலித் மக்கள் தண்ணீர் எடுக்க முடியாத நிலையும் சுட்டிக் காட்டப்பட்டிருந்தது. ஆனால் காவல்துறை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இதனைத் தொடர்ந்து கடந்த 12.6.2011 அன்று மாலை 5 மணியளவில் குறுக்கிளையான் பாளையம் கிராமத்தில் பொதுக் குழாயில் தண்ணீர் பிடிக்க, நல்லிசெட்டிப் பாளையத்தைச் சேர்ந்த வசந்தகுமார் என்ற தலித் சிறுவன் சென்றபோது, அப்பகுதியைச் சார்ந்த ஆதிக்கசாதியைச் சார்ந்த மூன்று பெண்கள், தண்ணீர் பிடிப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். பொதுக் குழாயில்தானே தண்ணீர் பிடிக்க வந்தேன் என்று அச்சிறுவன் கேட்டதற்கு, அப் பெண்களுடன் தாமோதரன் செட்டியார் என்பவரும் சேர்ந்து கொண்டு, தலித் சிறுவனைத் தாக்கியுள்ளனர். மாலை 5 மணிக்கு இப்படி ஒரு சம்பவம் நடந்ததை அறிந்த கழகத் தோழர்கள் உடனடியாக அன்னூரில் குற்ற வாளிகள் மீது வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்குமாறு அடுத்த இரண்டு மணி நேரத்தில் இரவு 7 மணியளவில் அன்னூரில் சாலை மறியலில் இறங்கினர். அன்னூர் ஒன்றிய செயலாளர் ஈசுவரன், ஒன்றிய அமைப்பாளர் ஜோதிராம், ஒன்றிய பொருளாளர் ராமன், வழக்கறிஞர் பன்னீர்செல்வம், மாவட்ட செயலாளர் வெள்ளமடை நாகராசு, வழக்கறிஞர் அலெக்சு, மேட்டுப்பாளையம் நகர செயலாளர் சந்திரசேகர் உள்ளிட்ட பல கழகத் தோழர்கள் சாலை மறியலில் ஈடுபட்டனர். சுமார் 2 மணி நேர சாலை மறியலுக்குப் பிறகு காவல்துறை கழகத்தோழர்களை கைது செய்து வேன்களில் ஏற்றியது. கைது செய்த தோழர்களை காவல் நிலையம் கொண்டு போய் அங்கிருந்து கலைந்து செல்லுமாறு காவல்துறை யினர் சமாதானம் பேசினர். வழக்கு பதிவு செய்யாத வரை, போக மாட்டோம் என்று தோழர்கள் உறுதியாக தெரிவித்த நிலையில், நள்ளிரவு ஒன்றரை மணியளவில் காவல்துறை வழக்குப் பதிவு செய்தது. ஆனால் கடுமையான பிரிவுகளின் கீழ் வழக்கு தொடரவில்லை.

அடுத்த நாள் கழக மாவட்ட செயலாளர் நாகராசு தலைமையில் கழகத் தோழர்கள், மாவட்ட ஆட்சித் தலைவரை சந்தித்து புகார் மனு ஒன்றை அளித்தனர். புகார் மனுவில் நடந்த சம்பவங்களை விளக்கி, குற்றவாளிகளை வன்கொடுமை தடுப்புச் சட்டத்தில் கைது செய்யக் கோரியிருந்தனர். இந்த மனுவில் அடங்கியுள்ள செய்தியை நாளேடுகள் வெளி யிட்டன. ‘டைம்ஸ் ஆப் இந்தியா’ நாளேட்டின் செய்தியாளர் சுப்புராஜ் என்பவரை பாதிக்கப்பட்ட தலித் சிறுவன் வசந்த்குமாரை சந்திக்க வைத்து விரிவான பேட்டிக்கும் தோழர்கள் ஏற்பாடு செய்தனர். ‘டைம்ஸ் ஆப் இந்தியா’ நாளேடு அந்த செய்தியை கடந்த 14 ஆம் தேதி விரிவாக வெளி யிட்டது. செய்தியைப் பார்த்த தேசிய மனித உரிமை ஆணையம் தாமாகவே முன் வந்து - இதை புகாராக ஏற்றுக் கொண்டு, தமிழக அரசிடம் விளக்கம் கேட்டுள்ளது:

“கோவை மாவட்டத்தில் குறுக்கிளையான் பாளையம் உள்ளிட்ட பகுதிகளில் தீண்டாமை கொடுமைகள் நிலவுவதாக செய்திகள் வெளியாகி யுள்ளன. அப்பகுதியில் கடுமையான தண்ணீர் பற்றாக் குறை நிலவுவதாகவும் தெரிய வந்துள்ளது. அப்பகுதி யில் தலித் மக்கள் முடிவெட்டும் நிலையங்களில் முடிவெட்ட முடியாது என்றும், குடிசைகளுக்கு வெளியே செல்பேசிகளைப் பயன்படுத்தவும் தடை இருப்பதாகவும் செய்திகள் வந்துள்ளன. இது பற்றி தமிழக அரசு விசாரணை நடத்தி நான்கு வாரங்களுக் குள் தேசிய மனித உரிமை ஆணையத்துக்கு அறிக்கை அனுப்பவேண்டும்” என்று ஆணையிட்டுள்ளது.

இந்த நிலையில் குறுக்கிளையான் பாளையத்தில் தலித் மக்கள் தண்ணீர் எடுக்க தடைவிதிக்கும் தீண்டாமைக்கு எதிராக வரும் 27.6.2011 அன்று ஆயிரம் குடங்களில் தண்ணீர் எடுக்கும் போராட் டத்தை கழகம் அறிவித்துள்ளது. கழகத் தலைவர் தோழர் கொளத்தூர் மணி தலைமையில், பொதுச் செயலாளர்கள் கோவை இராமகிருட்டிணன், விடுதலை இராசேந்திரன் முன்னிலையில் நடக்கும் போராட்டத்தில் வழக்கறிஞர் பாப்பா மோகன், பேராசிரியர் சரசுவதி உள்ளிட்ட மனித உரிமை யாளர்களும் தமிழகம் முழுதுமிருந்தும் கழகத் தோழர்களும் பங்கேற்கிறார்கள்.

# இந்திய அரசில் மலையாளிகள் ஆதிக்கம்

இந்தியாவின் ஆட்சி அதிகாரத் தில் பார்ப்பனர்களும், மலையாளி களும் கொடிகட்டிப் பறக்கிறார்கள். ஈழத்தில் தமிழின அழிப்புக்கான திட்டங் களைத் தீட்டி, சோனியாவின் தலைமையின் கீழ், ரகசியமாக அமுல் படுத்தியது, மலையாள அதிகாரிகள் குழுதான். பார்ப்பனர்களைப் போலவே மலையாளிகளும் எப் போதும் தமிழினத்தைப் பகையாகக் கருதுவோரே! எனவேதான் சோனியா, மலையாளிகளிடம் இந்தப் படு கொலைத் திட்டத்தை ஒப்படைத்தார்.

மத்திய அரசினை சூழ்ந்து நிற்கும் மலையாள அதிகாரவர்க்கத்தின் ஆதிக்கம் அதிர்ச்சி தருவதாக உள்ளது. இதோ, இந்தப் பட்டியலைப் பாருங்கள்:

என். பெர்னான்டஸ் (ஜனாதிபதி யின் செயலாளர்)

வி.கே. தாஸ் (ஜனாதிபதியின் தனிச் செயலாளர்)

டி.கே.ஏ. நாயர் (பிரதமரின் முதன்மைச் செயலாளர்)

என்.நாராயணன் (பிரதமரின் பிரதான ஆலோசகர்)

பி. ஸ்ரீதரன் (நாடாளுமன்ற சபா நாயகரின் தனிச் செயலாளர்)

கே.எம். சந்திரசேகர் (அமைச் சரவைச் செயலாளர்)

ருத்ர கங்காதரன் (விவசாயத் துறைச் செயலாளர்)

மாதவன் நம்பியார் (விமானப் போக்குவரத்துத் துறைச் செயலாளர்)

நிருபமா மேனன் ராவ் (வெளி யுறவுத் துறைச் செயலாளர்)

சத்திய நாராயணன் தாஸ் (கனரகத் தொழில் துறைச் செயலாளர்)

ஜி.கே. பிள்ளை (உள்துறைச் செய லாளர்)

சுந்தரேசன் (பெட்ரோலியத் துறைச் செயலாளர்)

கே. மோகன்தாஸ் (கப்பல் துறைச் செயலாளர்)

பி.ஜே. தாமஸ் (மத்திய கண் காணிப்பு ஆணையத்தின் தலைவர்)

சிவசங்கர மேனன் (தேசிய பாதுகாப்பு ஆலோசகர்)

சுதா பிள்ளை (திட்டக் கமிஷன் செயலாளர்)

வி.கே. சங்கம்மா (வடகிழக்கு மாநிலங்களின் கவுன்சில் செயலாளர்)

ஆர். கோபாலன் (நிதிப் பணிகள் துறை இயக்குநர்)

கே.பி.வி. நாயகர் (செலவீனங்கள் துறைச் செயலாளர்)

கே. ஜோஸ் சிரியாக் (வருவாய்த் துறைச் செயலாளர்)

ஆர். தாமஸ் (வருமான வரித் துறைச் செயலாளர்)

வி. ஸ்ரீதர் (சுங்கத் துறைச் செய லாளர்)

பி.கே.தாஸ் (அமலாக்கப் பிரிவு சிறப்பு இயக்குநர்)

ஏ.சி. ஜோஸ் (கதர் வாரியம்)

சி.வி. வேணுகோபால் (பஞ்சாயத்து ராஜ் அமைச்சக செயலாளர்)

ஸ்ரீகுமார் (இயக்குநர், மத்திய கண்காணிப்பு ஆணையகம்)

பிரதமரின் அலுவலகத்தில் இவருக்கு அடுத்தபடியாக செயல் படும் மூத்த அதிகாரி கோபால கிருஷ்ணன். இவரும் கேரளாவை சேர்ந்தவர்.

கே.எம். சந்திரசேகர் (அமைச்சர வைச் செயலாளர்)

சி.கே. பிள்ளை (உள்துறைச் செய லாளர்)

நந்தகுமார் (கூட்டுறவுத் துறைச் செயலாளர்)

பி.கே.தாமஸ் (தகவல் தொழில் நுட்பத் துறைச் செயலர்)

ரகுமேனன் (செய்தி ஒலிபரப்புத் துறை செயலர்)

2 ஆம் பக்கம்

**தலையங்கம்**

## சமச்சீர் கல்வித் திட்டத்தில் பார்ப்பன அணுகுமுறையா?

மக்கள் பேராதரவுடன் ஆட்சிக்கு வந்த தமிழக முதல்வர் ஜெயலலிதாவின் புதிய அறிவிப்புகளுக்கு மக்கள் பேராதரவை வழங்கி வரும் நிலையில் சமச்சீர் கல்வித் திட்டத்தில் முதல்வர் எடுத்த முடிவு கடும் விமர்சனங்களுக்கும், கண்டனங்களுக்கும் உள்ளாகி வருகிறது.

அனைத்து திட்டங்களிலும் 'சுய பெருமைகளை' திணித்துக் கொண்டிருப்பவர் கலைஞர் கருணாநிதி. தமிழ்நாடு என்றாலே அது காலம் முழுமைக்கும் கலைஞர் கருணாநிதி அதிகாரத்தின் கீழ் தான் என்று கருதியே அதிகாரத்தை முறைகேடாகப் பயன்படுத்தினார். சமச்சீர் கல்விக்கான பாடத் திட்டத்திலும் தன்னை புகுத்திக் கொண்டார். அதில் ஜெயலலிதா ஆட்சிக்கு மாறுபாடு இருந்தால் அதை நீக்கி விடலாம். அதற்காக சமச்சீர் கல்வித் திட்டத்தையே நிறுத்தப் போய், அது மக்களிடையே கடும் அதிருப்தியையும் எதிர்ப்பையும் உருவாக்கிவிட்டது. உயர்நீதிமன்றம், உச்சநீதிமன்றத்திலும், அ.தி.மு.க. ஆட்சி கடும் விமர்சனத்துக்கு உள்ளாகியுள்ளது.

சமச்சீர் கல்வியை ஒழிப்பதற்குப் பின்னால் பார்ப்பனர்கள் வரிந்து கட்டிக்கொண்டு நிற்கிறார்கள். இதற்கு முதல்வர் ஜெயலலிதாவும் துணை போவது பார்ப்பனியத்துக்கு உயிரூட்டுவதேயாகும். உச்சநீதிமன்ற ஆணைப்படி தமிழக முதல்வர் ஜெயலலிதா நியமித்துள்ள குழுவில் 9 பேரில் 6 பேர் பார்ப்பனர்கள். தேவேந்திரநாத் சாரங்கி (தலைமை செயலாளர் - பார்ப்பனர்), ஜி.பாலசுப்பிரமணியன் (முன்னாள் கல்வி இயக்குனர் - பார்ப்பனர்), விஜயலட்சுமி சீனிவாசன் (முன்னாள் முதல்வர் - லேடி ஆண்டாள் மெட்ரிகுலேஷன் பள்ளி - பார்ப்பனர்), ஜி. ஜெயதேவ் (நிறுவனர்-டி.ஏ.வி. பள்ளிகள் குழுமம் - பார்ப்பனர்), திருமதி ஒய்.ஜி. பார்த்தசாரதி (இயக்குனர் - பத்மா சேஷாத்திரி பால பவன் பள்ளிகள் குழுமம் - பார்ப்பனர்), பேராசிரியர் தி.கே. திரிபாதி (பார்ப்பனர்), பேராசிரியர் அனில் சேத்தி, பேராசிரியர் டி. சபீதா (பள்ளிக்கல்வித் துறை செயலாளர்), வசுந்தரா தேவி (பள்ளிக் கல்வி இயக்குனர்).

கல்வியாளர் என்ற பட்டியலில் இடம் பெற்றுள்ள சி. ஜெயதேவ், திருமதி ஒய்.ஜி.பார்த்தசாரதி - இருவருமே கல்வியாளர்கள் அல்ல. கல்வி வியாபாரம் நடத்துகிறவர்கள். இவர்கள் எப்படி கல்வியாளர்கள் பட்டியலில் இடம் பெற முடிந்தது?

அண்மையில் லயோலா கல்லூரி மாணவர்கள் எடுத்துள்ள கருத்துக் கணிப்பில் ஈழத் தமிழர் பிரச்சினையில் முதல்வர் ஜெயலலிதா எடுத்துள்ள முடிவுகளுக்கு அமோக வரவேற்பும், சமச்சீர் கல்வித் திட்டத்தில் எடுத்துள்ள முடிவுக்கு கடும் எதிர்ப்பும் வெளிப்பட்டுள்ளதை தமிழக முதல்வர் கவனத்தில் கொள்ள வேண்டியது அவசியமாகும்.

சமச்சீர் கல்விப் பிரச்சினையில் பார்ப்பனர்களின் ஆலோசனைகளை முதல்வர் ஜெயலலிதா பின்பற்றத் தொடங்கினால் அது கடும் எதிர்ப்புகளையே கொண்டு வந்து சேர்க்கும் என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

'துக்ளக்', 'தினமலர்' போன்ற பார்ப்பன நாளேடுகள், சமச்சீர்கல்விக்காக நஞ்சை கக்கி எழுதி வருகின்றன. பார்ப்பனர்கள் 'தகுதி திறமை' என்று கூப்பாடு போடுவது ஒரு பெரிய மோசடி! 'தரமான' பாடத் திட்டம் என்பதற்கு இவர்களிடம் உள்ள விளக்கம், மாணவர்களின் சிந்தனை சக்திக்கு மீறிய கடுமையான பாடங்களை சுமக்க வைப்பதுதான். இது, சுய திறமை, ஆற்றல் திறன், சிந்திக்கும் தன்மையை வளர்த்துவிடாது. பார்ப்பன மேட்டுக்குடி சூழலில் வாழும் மாணவர்களுக்கு வேண்டுமானால் வசதியாக இருக்கலாம். ஆனால், பெரும்பான்மையான ஏழை நடுத்தர குடும்பங்களிலிருந்து படிக்க வரும் மாணவர்களுக்கு இது சுமையாகி வளர்ச்சியைத் தடைப்படுத்திவிடும்.

இலவச அரிசி, இலவச மிக்சி, திருமண கடன் உதவி என்று ஏழை எளிய மக்களை முன்னிறுத்தி திட்டம் போடும் ஆட்சி, கல்விக் கொள்கையிலும் அதே சமூகப் பார்வையில் திட்டங்கள் தீட்ட வேண்டுமே தவிர, 'தகுதி, திறமை, தரம்' என்ற பார்ப்பன 'மந்திரத்தை' ஓதிக் கொண்டிருப்பது சமூக நீதிக்கு இழைக்கும் துரோகமேயாகும்.

பெரியார் திராவிடர் கழகம் - கொள்கைகளுக்காக போராடும் இயக்கம், ஈழப் பிரச்சினை, அரசு ஆடம்பர விழாக்கள் நிறுத்தம், ஏழை எளிய மக்களின் துயர் துடைப்பு திட்டங்களில் இந்த ஆட்சியை உறுதியாக ஆதரிக்கும் நாம், சமச்சீர் கல்வித் திட்டத்தில் இந்த ஆட்சியின் செயல்பாடுகளை உறுதியாகவே எதிர்க்கிறோம். ஆளும் கட்சியின் கூட்டணி கட்சிகளான இடதுசாரி கட்சிகளே சமச்சீர் கல்வித் திட்டத்தில் இந்த ஆட்சியின் நிலையை எதிர்த்து வருவதை தமிழக முதல்வர் கவனத்தில் கொண்டு, தமது முடிவை மறுபரிசீலனை செய்யக் கோருகிறோம்.

# கவுந்தப்பாடியில் ஆர்ப்பாட்டம்




போர் குற்றவாளி ராசபக்சேவுக்கு சர்வதேச நீதிமன்றம் தண்டனை வழங்கக் கோரியும், துணை போன ஆளுகின்ற இந்திய காங்கிரசு அரசைக் கண்டித்தும் கவுந்தபாடி தமிழின உணர்வாளர்கள் சார்பாக 11.5.2011 புதன் மாலை 4 மணியளவில் கவுந்தபாடி நான்கு சாலை சந்திப்பில் ஆர்ப்பாட்டம் நடந்தது.

இந்த ஆர்ப்பாட்டத்திற்கு ஈரோடு மாவட்ட கழக செயலாளர் இராம. இளங்கோவன் தலைமையேற்று கண்டன உரை நிகழ்த்த, நாம் தமிழர் இயக்க சீதாலட்சுமி, திராவிடர் கழக பாலன், தி.மு.க. இராசேந்திரன், கொங்கு நாடு நண்பர்கள் சங்க வீரக்குமார், புதிய நீதிக்கட்சி அருள்ஜோதி, பாட்டாளி மக்கள் கட்சி பொறுப்பாளர் ஆகியோர் உரை நிகழ்த்த, அண்ணாதுரை நன்றி கூறினார். இவ்வார்ப்பாட்டத்தில் பெரியார் திராவிடர் கழகம், நாம் தமிழர், புதிய நீதி கட்சி, பாட்டாளி மக்கள் கட்சி, மறுமலர்ச்சி திராவிட முன்னேற்ற கழகம், கொங்கு நாடு நண்பர்கள் சங்கம், திராவிடர் கழகம், திராவிட முன்னேற்றக் கழகம் ஆகிய அமைப்புகளைச் சேர்ந்த தோழர்கள் கலந்து கொண்டனர். ஆர்ப்பாட்டத்திற்கான ஏற்பாடுகளை மதியழகன், அண்ணாதுரை ஆகியோர் செய்தனர்.

## சென்னையில் 7 நாள் தொடர் கூட்டங்கள்

ஜூன் 22 முதல் 28 வரை சென்னையில் கழகப் பிரச்சார தொடர் கூட்டங்கள் நடைபெறுகின்றன.

அனைத்துக் கூட்டங்களிலும் சிற்பி இராசன் 'மந்திரமா தந்திரமா' நிகழ்ச்சி நடத்துகிறார்.


**"புரட்சிப் பெரியார் முழக்கம்"**

**ஆண்டுக்கட்டணம் ரூ.150/-**

தொடர்புக்கு:
ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர், திருவான்மியூர்,
சென்னை-41. ✆ 99416 13535


## கரூர் பூ.அர. குப்புசாமி படத்திறப்பு

27.5.2011 வெள்ளி மாலை 6.30 மணிக்கு ப. வேலூர் (நாமக்கல் மாவட்டம்) அண்ணா சாலை, வ.உ.சி. திடலில் பாவேந்தர் பாரதிதாசன் பேரவை சார்பாக, கரூர் பூ.அர. குப்புசாமி படத்திறப்பு பொதுக் கூட்டம் நடைபெற்றது.

கவிஞர் முத்து. சரவணன் தலைமையேற்றார். க.ப. இளங்கோ வரவேற்புப் பேசினார். திருப்பூர் தமிழ்ச் செல்வி, 'நமது குரல்' ஆசிரியர் மு. முத்துமாணிக்கம், வி.பி. இராசமாணிக்கம், கா. நாச்சிமுத்து, ப. ஜீவானந்தம், ஏ.பி. காமராசன் ஆகியோர் உரையை தொடர்ந்து இறுதியாக கழகத் தலைவர் கொளத்தூர் மணி, பி.ஆர்.கே. படத்தை திறந்து வைத்து சிறப்புரையாற்றினார். இளம் கார்க்கி நன்றியுரையாற்றினார்.

# சோனியா இல்லத்திலும் மலையாளிகளே!

*முதல் பக்கத் தொடர்ச்சி*

ராமச்சந்திரன் (நகர்ப்புற வளர்ச்சித் துறைச் செயலாளர்)

ரீட்டா மேனன் (ஜவுளித் துறைச் செயலாளர்)

கங்காதரன் (கால்நடை பராமரிப்புத் துறைச் செயலாளர்)

சாந்தா ஷீலா நாயர் (குடிநீர் வழங்கல் துறைச் செயலாளர்)

விசுவநாதன் (சட்டத் துறை செயலாளர்)

மாதவன் நாயகர் (இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தின் தலைவர்).

நாடாளுமன்றத்தின் மொத்த உறுப்பினர்களான 543 பேரில் 20 பேர்தான் கேரளாவிலிருந்து தேர்ந்தெடுக்கப்படுகிறவர்கள். அதிலும் காங்கிரஸ் மற்றும் கூட்டணிக் கட்சி எம்.பி.க்கள் 15 பேர்தான். ஆனால் இவர்களில் அமைச்சர்களாக இருப்பவர்கள் ஐந்து பேர்.

ராணுவ அமைச்சர் ஏ.கே. அந்தோணி

வெளி விவகாரத் துறை அமைச்சர் வயலார் ரவி

விவசாயத் துறை இணையமைச்சர் கே.வி.தாமஸ்

உள்துறை இணையமைச்சர் முல்லப்பள்ளி ராமச்சந்திரன்

ரயில்வேத் துறை இணையமைச்சர் அகமது.

வெளி விவகாரத் துறை இணையமைச்சராக இருந்து பதவி விலகிய சசி தரூரையும் சேர்த்தால் ஆறு பேர்.

சோனியா வீட்டிலும் ஆட்டிப் படைப்பவர்கள் மலையாளிகள்தான். சோனியாவின் ஓட்டுனர் ரவீந்திரன், சமையல்காரர் அங்கம்மா அங்கணங் குட்டி, தோட்டக்காரர் தாமஸ், சந்தைக்குப் போய் வருபவர்கள், சமையல் உதவியாளர்கள், தோட்டப் பராமரிப்பு உதவியாளர்கள் என்று எல்லோருமே மலையாளிகள்தான். அதேபோல, சோனியா காந்தி வீட்டைச் சுற்றிலும் பாதுகாப்புக்காக தில்லிக் காவல்துறையினர் அறுபது பேர் இருக்கிறார்கள்.

அவர்களில் ஐம்பது பேர் கேரளாக்காரர்கள். இப்படி நாட்டின் கேந்திரமான நிர்வாகப் பகுதிகளை கேரளக்காரர்கள் ஆக்கிரமித்திருக்கிறார்கள். நாட்டின் 30 பெரிய மாநிலங்களில் மிகச் சிறிய மாநிலம் கேரளா. ஆனால் மத்திய அரசுத் துறை செயலாளர்கள் 53 பேரில் 19 பேர் அதாவது 33 விழுக்காட்டிற்கு மேலானவர்கள் கேரளாவைச் சேர்ந்த அதிகாரிகள்.

இவர்களில் பெரும்பாலானோர் கேரள மாநிலத்தில் பணியாற்றி, பின்னர் மத்திய அரசு பணிக்கு மாற்றப்பட்டவர்கள். இதர சிலர் வேறு மாநிலங்களில் பணியாற்றி மத்திய அரசு பணிக்கு வந்தவர்கள்.

இத்தகைய நிலையில் இன்றைக்கு இந்தியாவை ஆண்டு கொண்டிருப்பது எந்த மாநிலம்? என்ற சந்தேகமே தேவையில்லை. இந்த அசாதாரணமான நிலைமையினால்தான் இன்றைக்கு கேரளாவுக்கு சாதகமாக காரியங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. தமிழர்களின் நலன் புறக்கணிக்கப்படுகிறது! +

# மாவீரன் கிட்டு வந்த கப்பல்: காட்டிக் கொடுத்தது யார்? [2]

ராஜீவ் சர்மாவின் 'புலிகளுக்கு அப்பால்' என்ற இந்த நூல், உளவுத் துறையின் குரலை அப்படியே பிரதிபலிக்கிறது. விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மீது உளவுத் துறை பரப்பிய 'அவதூறு' பழிகளை அப்படியே நியாயப்படுத்துகிறது. அதே நேரத்தில், உளவுத் துறை மீது எந்த ஒரு 'தூசும்' விழாமல் நியாயப்படுத்துவதிலிருந்தே, இந்த நூலின் பின்னணியை புரிந்து கொள்ள முடியும்.

ஈழத் தமிழர் பிரச்சினையில் குழப்பங்கள், படுகொலைகளை உருவாக்கி திட்டமிட்டு, அரங்கேற்றிய சதிக் கும்பலே, உளவு நிறுவனங்கள்தான் என்ற உண்மையை முற்றாக ஒதுக்கிவிட்டு, உளவுத் துறையின் ஒலி குழலாகவே ஒலிக்கிறது இந்த நூல்.

1983 ஆம் ஆண்டிலிருந்து இந்தியாவில் போராளிகளுக்குப் பயிற்சி தந்த காலத்திலிருந்தே 'ரா' உளவு நிறுவனங்களின் பிரித்தாளும் சூழ்ச்சிகள் தொடங்கிவிட்டன. இந்திய உளவு நிறுவனத்தோடு நெருக்கமாக இருந்தவரும், உளவு நிறுவனங்கள் போற்றிப் பாராட்டுகிற நூலை எழுதியவருமான எம்.ஆர். நாராயணசாமி, தனது 'இலங்கையின் புலிகள்' (Tigers of Lanka) என்ற நூலில் - அவரே, இந்த உண்மையை ஒப்புக் கொண்டிருக்கிறார். விடுதலைப் புலிகள் என்ற அமைப்பு மட்டும் உளவு நிறுவனத்தின் பிடிக்குள் சிக்குவதற்கு தயாராக இல்லை. நாட்டின் விடுதலையில் மட்டுமே அவர்கள் உறுதியாக இருந்தார்கள். அதுதான் அவர்களின் "குற்றம்"; ஆனால் ஈழத்தில் தொடங்கிய தமிழ் ஈழ விடுதலைப் போராட்டத்தின் வழியாக இலங்கை அரசுக்கு நெருக்கடி தந்து, இந்தியாவின் கட்டுப்பாட்டுக்குள் ஈழப் போராளிகளைக் கொண்டு வருவதுதான் இந்தியாவின் திட்டம். அதை செயல்படுத்துவதே உளவு நிறுவனங்களின் வேலை.

முதலில் 'டெலோ' என்ற அமைப்பை உளவு நிறுவனம் தனது 'கைப்பாவை'யாக்கியது. அந்த அமைப்பு செயலிழந்தவுடன் ஈ.பி.ஆர்.எல்.எப். என்ற அமைப்பை தங்களது பிடிக்குள் கொண்டு வந்தார்கள். பிறகு பல்வேறு போராளிகள் குழுக்களில் ஏற்பட்ட பிளவுகளைப் பயன்படுத்தி விலகி வந்தவர்களை எல்லாம் இணைத்து 'ஈழ தேசிய ஜனநாயக விடுதலை முன்னணி' (ஈ.என்.டி.எல்.எப்.) என்ற அமைப்பை உளவு நிறுவனம் உருவாக்கியது. இந்திய உளவுத் துறைக்கு ஆதரவாக 'இந்து' பார்ப்பன நாளேட்டில் எழுதி வந்த டி.பி.எஸ். ஜெயராஜ் போன்ற பத்திரிகையாளர்களே, இந்த உண்மைகளை ஒப்புக் கொண்டு எழுதியிருக்கிறார்கள். உளவுத் துறை உருவாக்கிய, இந்த குழுக்களை விடுதலைப்புலிகள் இயக்கத்துக்கு எதிராகவும், தேவைப்படும்போது இலங்கை ஆட்சிக்கு எதிராகவும் உளவு நிறுவனங்கள் பயன்படுத்தி வந்தன.

கடைசியாக உளவு நிறுவனம் தனது ஏவல் படையாக பிடித்து வைத்த 'ஈ.என்.டி.எல்.எப்.' அமைப்புக்கு தலைவராக சென்னையில் கொலை, கடத்தல் வழக்குகளில் குற்றம்சாட்டப்பட்டு, 1989 ஆம் ஆண்டில் தேசிய பாதுகாப்பு சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு, ஓராண்டு சிறையில் அடைக்கப்பட்ட டக்ளஸ் தேவானந்தாவை தனது கைப்பிடிக்குள் உளவுத் துறையினர் கொண்டு வந்தனர். தேசியப் பாதுகாப்பு சட்டத்தின் கீழ் சிறையிலிருந்தவரை விடுதுலை செய்து வெளியே கொண்டு வர முயற்சித்தவர்களே, 'ரா' உளவுத் துறையினர் தான். பிறகு உளவுத் துறையினரே, இந்திய ராணுவ விமானத்தை ஏற்பாடு செய்து, டக்ளஸ் தேவானந்தாவை - அந்த ராணுவ விமானத்தில் ஏற்றி யாழ்ப்பாணம் கொண்டு போய் துரோகம் - குழி பறிப்பு வேலைகளுக்காக இறக்கிவிட்டார்கள். இந்த உண்மையை 'டெகல்கா வார' ஏடு (ஜூலை 1, 2006) வெளிக்கொண்டு வந்தது.

ராஜீவ் காந்தி - ஜெயவர்த்தனாவுடன் ஒரு ஒப்பந்தத்தைப் போட்டுக் கொண்டு, அதை தமிழர்கள் மீது ஆயுத முனையில் திணித்தார். இந்தியாவின் 'கைப்பாவைக் குழுக்கள்' கண்களை மூடிக் கொண்டு ஒப்பந்தத்தை ஆதரித்தன. உண்மையான விடுதலைப் போராட்டத்தை நடத்திய விடுதலைப் புலிகள் மட்டும் ஏற்க மறுத்தனர். ஆனாலும் இந்திய அதிகார வர்க்கம், விடுதலைப் புலிகள் இயக்கத்தை மிரட்டி பணிய வைத்தனர். 'இந்தியாவை பகைத்துக் கொள்ள விரும்பவில்லை; தமிழ் மக்களை இந்தியா பாதுகாக்கும் என்று நம்பி, ஆயுதங்களை ஒப்படைக்கிறோம்' என்று, விடுதலைப் புலிகள் தங்கள் ஆயுதங்களை ஒப்படைத்தனர். விடுதலைபுலிகள் ஆயுதங்களை ஒப்படைத்துக் கொண்டிருந்த காலகட்டத்தில் சில போட்டிக் குழுக்களுக்கு உளவுத் துறை ஆயுதங்களை வழங்கி வந்தது. விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரன், இதை வீடியோ படங்களுடன் ஆதாரத்தோடு அமைதிப் படை தளபதி ஹர்கிரத் சிங்கிடம் எடுத்துக் கூறினார். ஹர்கிரத் சிங்கும் உண்மையே என்று ஒப்புக் கொண்டார். இப்படி செய்வது தவறு, என்று இந்திய ராணுவத் தளபதியாக இருந்த கே.சுந்தர்ஜியிடம் சிங் புகார் கூறினார். சுந்தர்ஜியோ, 'இது உயர்மட்டத்தின் முடிவு' என்ற கூறிவிட்டார். இவையெல்லாம் ஹர்கிரத்சிங்கே வெளிப்படுத்திய உண்மைகள், மறுக்க முடியாது. அப்போதெல்லாம் ஹர்கிரத் சிங்கை பிரபாகரன் நேரில் சந்தித்துப் பேசி வந்தார்.

> **ராஜீவ் சர்மாவின் 'புலிகளுக்கு அப்பால்....' நூலுக்கு மறுப்பு தெரிவித்து, சென்னை (ஜூன் 4) வெளியீட்டு விழாவில் விடுதலை இராசேந்திரன் ஆற்றிய உரையின் தொகுப்பு.**

ஒரு கட்டத்தில் நேரில் பேசுவதற்கு பிரபாகரன் வரும்போது பிரபாகரனை சுட்டுவிடுமாறு ராஜிவின் ஆலோசனைக் குழு இலங்கைத் தூதுவரக இருந்த ஜெ.என். தீட்சத் வழியாக உத்தரவிட்டது. ஆனால், நேர்மையான அதிகாரியாக இருந்த ஹர்கிரத்சிங் இந்த படுபாதகத்தை தன்னால் செய்ய முடியாது என்று மறுத்துவிட்டார். பிரபாகரன் தலைமையிலான விடுதலைப்புலிகள் என்ற அமைப்பை, அதன் போராட்டத்தைத் தொடரவிட்டால், அவர்கள் தமிழ் ஈழப் போராட்டத்தை விரைவுபடுத்தி விடுவார்கள் என்பதோடு, இந்தியாவின் ஏவல் படையாக எந்த காலத்திலும் மாறமாட்டார்கள் என்பதை உறுதியாக புரிந்து கொண்ட இராஜீவ் காந்தியும், அவரது ஆலோசனை குழுவும், உளவு நிறுவனமும், விடுதலைப்புலிகளின் தலைமையை தீர்த்துக் கட்டுவதற்கு திட்டங்கள் தீட்டின. விடுதலைப் புலிகள் இயக்கத்திலிருந்தே ஆட்களைப் பிடித்தார்கள். பிரபாகரனின் நம்பிக்கைக்கு உரிய தளபதியாக செயல்பட்ட மாத்தையா அந்த சதிவலையில் வீழ்ந்தார். விடுதலைப்புலிகள் இயக்கத்தில் இருந்து கொண்டே இந்திய உளவு நிறுவனத்துக்காக ரகசியமாக செயல்பட்டு வந்தார். இதையெல்லாம் ஏன் கூறுகிறேன் என்றால், இந்தப் பின்னணியில்தான் ஈழத்தில் நடந்த ஒவ்வொரு செயல்பாடுகளையும் பார்க்க வேண்டும். ராஜீவ் சர்மாவின் இந்த நூல் உளவு நிறுவனங்களின் இந்த சதியை சூழ்ச்சிகளைப் பற்றி எதையும் குறிப்பிடவில்லை. ஆனால் விடுதலைப் புலிகள் மீது இந்த சதிகார நிறுவனங்கள் தமிழினப் பகைவர்கள் சுமத்திய களங்கத்தையும், வீண் பழிகளையும் அப்படியே நியாயப்படுத்துகிறது.

ஒரு உதாரணத்தை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ராஜீவ் மரணத்தைத் தொடர்ந்து விடுதலைப் புலிகளின் முக்கிய தளபதிகளில் ஒருவரான கிட்டு வந்த கப்பல் ஒன்றை இந்திய கப்பல் படைவழி மறித்தது. இந்த நிகழ்வை இந்த நூல் உண்மைக்கு மாறான பொய்யான தகவல்களை தந்து நியாயப்படுத்துகிறது. ராஜீவ் கொலையை நடத்தி முடித்ததற்காகவே அதன் 'வெகுமதியாக' விடுதலைப் புலிகள் நவீன ஆயுதங்களையும், நவீன கப்பல்களையும் வெளிநாட்டு சக்திகளிடமிருந்து பெறத் தொடங்கினர் என்று இந்த நூல் குற்றம் சாட்டுகிறது. அப்படி ராஜீவ் கொலைக்காக கிடைத்த நவீன ஆயுதங்களை வெளிநாட்டு சக்திகளிடமிருந்து பெற்று கப்பலில் கொண்டு வரும்போது தான் கிட்டு பிடிபட்டார் என்று அபாண்டமாக பழி சுமத்துகிறது, இந்த நூல். உளவுத் துறையின் அவதூறுகளையும், பழியையும் நியாயப்படுத்துவதற்காக திட்டமிட்டு உண்மைகளையே மறைத்து எழுதியிருக்கிறார் நூலாசிரியர்.

"1993 ஜனவரி 13 ஆம் தேதி சென்னை துறைமுகத்திலிருந்து 700 கி.மீட்டர் தொலைவில் இக்கப்பல் இடைமறிக்கப்பட்டது" என்கிறார் நூலாசிரியர். இந்திய எல்லைக்கு அப்பால் சர்வதேச கடல் பகுதியில் பயணம் செய்து கொண்டிருந்த ஒரு கப்பலை, இந்திய கப்பல் படை சட்ட விரோதமாக சென்று வழி மறித்ததை இந்த நூல் குறிப்பிடாமல், அப்படியே மூடிமறைக்க விரும்புகிறது. '700 மைலுக்கு அப்பால் சென்ற கப்பல்' என்ற வார்த்தையோடு நிறுத்தி விடுகிறார்கள். சர்வதேச கடற்பரப்பில் கப்பலை மடக்கி, இந்திய கடல் எல்லைக்குள் கொண்டு வரப்பட்ட உண்மையை மறைத்துவிட்டு, சென்னை துறைமுகத்திலிருந்து 10 கி.மீ. தொலைவில் இருக்கும்போது, அதாவது இந்திய கடற்பரப்பில் இருக்கும்போது அக்கப்பல் கிட்டுவால் வெடிக்கச் செய்யப்பட்டது என்று குற்றம் சாட்டுகிறார்கள்.

உண்மையில் என்ன நடந்தது? கிட்டுவின் கப்பல் - சர்வதேச கடல்பரப்பில் 440 கடல் மைலுக்கு அப்பால் வந்து கொண்டிருந்தபோது, உளவுத் துறைக்கு மாத்தையா வழியாக அத்தகவல் கிடைக்கப் பெற்றது. கப்பலை வழி மறிக்க இந்திய கப்பல் படை சென்றது. கப்பலை இந்திய கடல் எல்லைக்குள் கொண்டு வருமாறு கப்பல் படையினர் மிரட்டினர். அதற்கு கிட்டு ஒத்துழைக்காத நிலையில், அதிரடிப் படையினர் ஹெலிகாப்டர் துணையுடன் கப்பலுக்குள் குதித்தனர். அப்போது கிட்டுவும், உடன் வந்த போராளிகளும் தங்களைத் தாங்களே அழித்துக் கொண்டு வீரச் சாவைத் தழுவினர்.

கிட்டு என்ற மாவீரன் தனது இரு கால்களையும் இழந்த பிறகும் உள்ள உறுதியோடு விடுதலைக்காக களத்தில் நின்ற போராளி. இந்தியாவின் துரோகத்தினால் தன்னைத் தானே தீயிட்டுக் கொண்டு, வீரமரணத்தை தழுவினார்.

கப்பலில் உயிருடன் பிடிபட்ட 9 போராளிகள் மீது இந்திய அரசு வழக்கு தொடர்ந்தது. அந்த வழக்கு ஆந்திர உயர்நீதிமன்றத்தில் நடந்தது. சம்பவம் நடந்த இடம் ஆந்திர மாநிலத்துக்கு உட்பட்டது. இந்திய கப்பல் படை சர்வதேச பரப்பில் அத்துமீறி நுழைந்து, மேற்கொண்ட இந்த நடவடிக்கை சட்ட விரோதமானது என்று அறிவித்த ஆந்திர உயர்நீதிமன்றம், 9 புலிகளையும் விடுதலை செய்தது மட்டுமல்ல, கப்பல் புறப்பட்ட இடமான மத்திய அமெரிக்காவுக்கு அவர்களை அரசாங்கமே சொந்த செலவில் திருப்பி அனுப்ப வேண்டும் என்று கன்னத்தில் அறைந்ததுபோல் தீர்ப்பளித்தது. ஈழ விடுதலையில் இந்தியாவின் சதிக்கும், கீழறுப்பு நடவடிக்கைகளுக்கும், இந்திய நீதிமன்றமே தந்த செருப்படிதான் இந்த தீர்ப்பு. இந்த உண்மைகளை எல்லாம் மறைத்துவிட்ட இந்த நூல், இந்த வழக்கு தமிழ்நாடு நீதிமன்றத்தில் நடந்ததாக ஒரு பொய்யான தகவலைத் தருவதோடு, இந்த விசாரணைக்காக அரசு 10 கோடி ரூபாய்க்கு மேல் செலவிட்டும் பலன் கிடைக்காமல் போய் விட்டதே என்று கவலைப்பட்டு வருந்துகிறது.

இந்தக் கப்பல் பிடிபட்டதற்கு, புலிகள் இயக்கத்திற்குள்ளே நடந்த துரோகம் பற்றி இந்த நூல் மவுனம் சாதிக்கிறது. பிரபாகரனின் நம்பிக்கைக்கு உரிய தளபதியாக செயல்பட்ட மாத்தையா தான். இந்த கப்பல் வரும் சேதியை 'ரா' உளவு நிறுவனத்துக்கு தந்தார் ஆதாரங்களோடுதான், கூறுகிறோம்.

**– தொடரும்**

## தருமபுரி – கிருட்டிணகிரி மாவட்ட கலந்துரையாடல் கூட்டம்

தருமபுரி, கிருட்டிணகிரி மாவட்ட பெரியார் திராவிடர் கழகத்தின் கலந்துரையாடல் கூட்டம் கிருட்டிணகிரிமாவட்டம் செலமங்கலத்தில் 12.06.2011 மாலை 4 மணியளவில் நடைபெற்றது.

கழகத் தலைவர் கொளத்தூர் மணி கூட்டத்திற்கு தலைமையேற்றார். கூட்டத்தில் கருநாடக மாநில தலைவர் இராவணன், செயலாளர் பழனி, தருமபுரி மாவட்ட அமைப்பாளர் வேடியப்பன், கிருட்டிண கிரி மாவட்ட தலைவர் குமார், அமைப்பாளர் பழனிச்சாமி, தருமபுரி மாவட்ட கழகத்தின் சார்பில் நெ.த. அறுவடைநம்பி, இராசுகுமார், இளம்பரிதி, நஞ்சப்பன் ஆகியோர் கலந்து கொண்டனர். கழகத்தின் செயல்பாடுகள், நோக்கம், எதிர்கொள்ளும் சிக்கல்கள் மற்றும் வளர்ச்சிக்கான பணிகள் குறித்து கழகத் தலைவர் கொளத்தூர் மணி உரையாற்றினார்.

கூட்டத்தில் கலந்து கொண்டவர்களில் பெரும் பகுதியினர் தெலுங்கு மற்றும் கன்னட மொழியை பேசுபவர்கள் என்பதால் கர்நாடக மாநில பொறுப்பாளர்கள் கன்னட, தெலுங்கு மொழியில் பெரியார் பற்றிய தகவல்களையும், பெரியார் தி.க. குறித்தும் உரையாற்றினர். கழக வளர்ச்சிக்கு செயல்படுவது குறித்து இரவு 9 மணி வரை கூட்டத்தில் விவாதிக்கப் பட்டது. இறுதியாக கிருட்டிணகிரி மாவட்ட செயலாளர் பிரேம் குமார் நன்றி கூறினார்.

PURATCHI PERIYAR MUZHAKKAM TAMIL WEEKLY REG.NO.TN/CCN/488/09-11 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/09-11
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/7776


## பெண்கள் தீச்சட்டி ஏந்தினர்; மழலைகள் பகுத்தறிவு முழக்கம்; முரசு ஒலி கேட்டு ஓடிவந்த மக்கள்

# இளம் பிள்ளையை குலுக்கிய நாத்திகர் பேரணி











*11.6.2011 சனிக்கிழமை அன்று 4 மணி முதல், சேலம் மாவட்டம் இளம்பிள்ளையில், கழகம் சார்பாக நாத்திகர் விழா நடைபெற்றது. இவ்விழாவில் மூட நம்பிக்கை ஒழிப்புப் பேரணி, பொதுக் கூட்டம், கொடியேற்று விழா, படிப்பக திறப்பு விழா ஆகிய நிகழ்வுகள் நடைபெற்றன.*

மாலை 4 மணிக்கு சந்தைபேட்டையிலிருந்து கோவை ஆறுச்சாமி தலைமையில் துவங்கிய ஊர்வலம், சாந்தி ஸ்டுடியோ, காடையாம்பட்டி பிரிவு, கே.வி.பி. திரையரங்கம், சுமங்கலி சில்க்ஸ் வழியாக பேருந்து நிலையம் அருகே அமைக்கப்பட்ட பொதுக் கூட்ட மேடையை வந்தடைந்தது. இந்த ஊர்வலத்தில், பல்லடத்திலிருந்து வந்திருந்த தோழர்கள் முரசு அடித்து எழுப்பிய ஒலியால், வீடுகளிலிருந்த பொது மக்கள் ஒவ்வொரு வீதிகளிலும் கூட்டம் கூட்டமாக திரண்டு நின்று, ஊர்வலத்தைப் பார்க்க காத்திருந்தனர். கழகத்தைச் சார்ந்த குழந்தைகள், பகுத்தறிவு வாசகங்கள் அடங்கிய தட்டிகளை தாங்கி அணி வகுத்தனர். பெண்கள் கைகளில் தீச்சட்டிகளை ஏந்தி நடந்தனர். அதனைத் தொடர்ந்து தோழர்கள் முதுகில் அலகு குத்தி கார்களை இழுத்து வந்தனர். சிலர் கன்னத்தில் அலகு குத்தியும், சிலர் உடல் முழுவதும் ஊசிகளை குத்தி எலுமிச்சை பழங்களை தொங்க விட்டும் வந்தனர். சிறுவர்கள் கத்தி (அருவால்) மீது நின்று காண்பித்துக் கொண்டே வந்தனர். இரண்டு தோழர்கள் முதுகில் அலகு குத்தி (பறைக் காவடி அலகு) உயரத்தில் தொங்கி வருவதைப் பார்த்து பொது மக்கள் வியந்தனர். தூத்துக்குடி பால். பிரபாகரன், குமாரபாளையம் சாமிநாதன், திண்டுக்கல் இராவணன், சேலம் பாலு உள்ளிட்ட சில தோழர்கள், பக்தர்களும், பொது மக்களும் சிந்திக்கும் வகையில் ஒலி முழக்கங்களை எழுப்ப, பேரணியில் அணி வகுத்த தோழர்கள் அதை மிகுந்த சத்தத்தோடு விண்ணதிர முழக்கமிட்டனர். பொள்ளாச்சி பிரகாசு, கோவை மாநகர பொறுப்பாளர் கோபால் உள்ளிட்ட குழுவினர், தோழர்களுக்கு அலகு குத்தி, பேரணியை வழி நடத்தினர். ஈரோடு, கோபி, குமாரபாளையம், திருச்செங்கோடு, சேலம் நகரம், மேட்டூர், கொளத்தூர் ஓமலூர் ஆகிய பகுதிகளில் இருந்தும் தோழர்கள் வந்திருந்தனர்.

மாலை 6 மணிக்கு தோழர் சிற்பிராசன், சாமியார்களின் மோசடிகளை விளக்கி, மந்திரமா, தந்திரமா? நிகழ்ச்சியை நடத்திக் காட்டியதைத் தொடர்ந்து, நடைபெற்றப் பொதுக் கூட்டத்திற்கு, மாவட்ட இளைஞரணித் தலைவர் கோகுல கண்ணன் தலைமையேற்றார். சவுந்திரராசன் வரவேற்புரையாற்றினார். மூடநம்பிக்கை ஒழிப்பின் அவசியம் என்ற தலைப்பில், கழகப் பொதுச் செயலாளர் கோவை இராமகிருட்டிணன், பெரியாரின் கடவுள் மறுப்பு என்ற தலைப்பில் கழகத் தலைவர் கொளத்தூர் மணியும் உரையாற்றியதைத் தொடர்ந்து, இறுதியாக நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் இயக்குநர் சீமான், கடவுள் - மூட நம்பிக்கை என்ற தலைப்பில் உரை யாற்றினார்.

இரவு 10 மணிக்கு பேருந்து நிலையம் அருகே புதிதாக கல்வெட்டுடன் அமைக்கப்பட்ட கொடிக் கம்பத்தில் பொதுச் செயலாளர் கோவை இராமகிருட்டிணன் கழகக் கொடியினை ஏற்றி வைத்தார். பெரியார் படிப்பகத்தை கழகத் தலைவர் கொளத்தூர் மணி திறந்து வைத்தார். அ. முத்துமாணிக்கம், ச. தமிழ் மணி, வெ. பிரபாகரன், சு. சவுந்திர ராசன் (குட்டி), அ. சந்திரசேகரன், இராஜகோபால், குப்புசாமி, மணிமாறன், ரமேசு, கார்த்திக், திருநாவுக்கரசு, செந்தில், கிருஷ்ணராஜ், பார்த்திபன், கிருஷ்ணமூர்த்தி, தங்கராஜ் உள்ளிட்ட தோழர்கள் நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தனர்.

## நன்கொடை

ஈரோடு பம்பிங் ஸ்டேசன் சாலை ப.கோகிலா - ஈரோடு கருமாண்டாம் பாளையம் த. சிவக்குமார் ஆகியோரது திருமணம் 6.6.2011 அன்று காலை 11.30 மணிக்கு மேட்டூர் பெரியார் படிப்பகத்தில், கொளத்தூர் ஒன்றிய செயலாளர் ஈசுவரன் தலைமையில் நடைபெற்றது. மணவிழா மகிழ்வாக கழக ஏட்டிற்கு ரூ.3000 நன்கொடை வழங்கினர்.

மேட்டூர் கழகத் தோழர் சவுதி பாபு என்கின்ற முகமது அலி சகோதரி மகளும், கழக ஆதரவாளருமான ஆ. மெகதாஜ்பர்வீன், தமது மணவிழா மகிழ்வாக கழக ஏட்டிற்கு ரூ.5000 நன்கொடை வழங்கினார்.

தருமபுரி மாவட்டம் அரூர் அருகேயுள்ள சங்கிலிவாடி கிராமத்தைச் சேர்ந்தவரும் கழக ஆதரவாளருமான மொ. பிரதாப் - ச. சங்கீதா ஆகியோரது வாழ்க்கை துணையேற்பு விழா 5.6.2011 அன்று கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் நடைபெற்றது. இளைஞர் இயக்கத்தின் நிறுவனர் மருத்துவர் எழிலன் முன்னிலையில் உறுதிமொழி வாசித்து, பேராசிரியர் சரசுவதி வாழ்க்கை துணையேற்பு நிகழ்வை நடத்தி வைத்தார். வாழ்க்கை துணையேற்ற இணையர் கழக ஏடான புரட்சிப் பெரியார் முழக்கம் வளர்ச்சி நிதியாக ரூ.1000 கழக தலைவர் கொளத்தூர் மணியிடம் வழங்கினர்.

மயிலாடுதுறை பேராசிரியர் முனைவர் சு. தமிழ்வேலு, தமது புதிய இல்லத் திறப்பு விழா மகிழ்வாக கழக ஏட்டுக்கு ரூ.500 நன்கொடை அனுப்பியுள்ளார்.

(நன்றியுடன் பெற்றுக் கொண்டோம் - ஆர்)

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 23rd June 2011

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.

புரட்சிப்
பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com
ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2042 | ஜூன் 30, 2011 | புரட்சி 10 | முழக்கம் 24 | விலை: ரூ.2.50

# அன்னூரில் உணர்ச்சி எரிமலை



*சாதி – தீண்டாமைக் கொடுமைகளை சட்டத்தின் பிடியிலிருந்து மறைக்க முயலும் மனித உரிமைப் பிரிவு மற்றும் காவல்துறையினருக்கு கழக சார்பில் கடும் எச்சரிக்கை விடுக்கப்பட்டது. தீண்டாமைக் குற்றங்கள் மீது நடவடிக்கை எடுக்கத் தவறிய காவல்துறையினரும் தண்டிக்கப்படுவதற்கு சட்டத்தில் இடமிருப்பதை மறந்துவிட வேண்டாம் என்று ஆயிரக்கணக்கில் மக்கள் திரண்ட ஆர்ப்பாட்டத்தில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி எச்சரித்தார்.*

கோவை மாவட்டம் அன்னூர் பகுதி முழுதும் பல்வேறு வடிவங்களில் சாதி வெறியின் கோர முகமான தீண்டாமை தலைவிரித்தாடுவதை எதிர்த்து பெரியார் திராவிடர் கழகம் தொடர்ந்து போராடி வருகிறது. குறுக்கிளையாம்பாளையம் எனும் கிராமத்தில் வசந்தகுமார் என்ற அருந்ததியர் சமூகத்தின் பள்ளிச் சிறுவன், பொதுக் குழாயில் தண்ணீர் எடுத்தபோது ஆதிக்கசாதியைச் சார்ந்த பெண்களும், ஆண்களும் சிறுவனைத் தாக்கியதைத் தொடர்ந்து பெரியார் திராவிடர் கழகம் களத்தில் இறங்கியது. சாலை மறியல், போராட்டம் நடத்தி, அடுத்த நாள் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் புகார் மனுவும் தரப்பட்டது.

தீண்டாமைக்கு எதிராக 1000 குடங்களுடன் ‘சாதித் தடை செய்யப்பட்ட’ பொதுக் குழாயில் தண்ணீர் பிடிக்கும் போராட்டத்தை ஜூன் 27 ஆம் தேதி கழகம் அறிவித்தது. புதுடில்லியிலுள்ள தேசிய மனித உரிமை ஆணையமும், ஆங்கில நாளேட்டில் வெளிவந்த இந்த ‘தீண்டாமை’ச் செய்தியைப் படித்து தன்னிச்சையாக நடவடிக்கை எடுக்க முன் வந்தது.

அதற்குப் பிறகு பதறிப் போன காவல்துறையும் மாவட்ட ஆட்சி நிர்வாகமும் அவசர நடவடிக்கை களை மேற்கொண்டன. கழகப் போராட்டம் நடப்பதற்கு முன், ஏதேனும் ஒரு முடிவை எட்ட வேண்டும் என்று திட்டமிட்டு, சமரசக் கூட்டம் ஒன்றுக்கு ஏற்பாடு செய்தனர். கோட்டாட்சியர் தலைமையில் காவல்துறையினர் பெரியார்திராவிடர் கழகப் பொறுப்பாளர்கள் மற்றும் ஆதிக்கசாதியினர் கூட்டத்துக்கு அழைக்கப்பட்டனர். ஆதிக்க சாதியினர், தண்ணீர் பற்றாக்குறை காரணமாகவே தண்ணீரை எடுக்க தடுத்ததாக பொய்யான சமா தானங்களைக் கூறி தலித் மக்கள் தண்ணீர் பிடிப்பதை எதிர்க்க மாட்டோம் என்று உறுதி கூறினர். இரு தரப்பினருக்கும் சமாதானம் ஏற்பட்டு விட்டதாக மாவட்ட நிர்வாகம் பத்திரிகைகளுக்கு செய்தி வெளியிட்டது.

தண்ணீர் பிரச்சினையில் பின்பற்றப்படும் ‘தீண்டாமை’ மட்டுமல்லாது, முடிவெட்டுவதில், மோட்டார் சைக்கிளில் பயணிப்பதில், செல்போன் பேசுவதில் அருந்ததி சமூக மக்கள் மீது சாதி வெறியர்கள் திணிக்கும் தீண்டாமையை முடிவுக்குக் கொண்டு வரும்வரை கழகம் போராடும் என்று கழக சார்பில் எச்சரிக்கை விடப்பட்டுள்ளது.

தண்ணீர் பிடிக்கும் பிரச்சினையில் சாதி ஆதிக்க வாதிகள் தீண்டாமையைப் பின்பற்ற மாட்டோம் என்று அறிவித்ததைத் தொடர்ந்து குறுக்கிளையாம் பாளையத்தில் தண்ணீர் எடுக்கும் போராட்டம் நிறுத்தப்பட்டு, அன்னூரில் ஓதிமலைப்பாதையில் மற்ற தீண்டாமை வடிவங்களை நிறுத்தி விடுமாறு வலியுறுத்தும் எச்சரிக்கை ஆர்ப்பாட்டத்தை பெரியார் திராவிடர் கழகம் ஜூன் 27 அன்று நடத்தியது. ஆயிரத்துக்கும் மேற்பட்ட கழகத் தோழர்கள் போராட்டத்துக்கு திரண்டிருந்தனர். தீண்டாமைக் கொடுமைக்குள்ளான அன்னூர் பகுதி தலித் மக்களும் ஆண்களும் பெண்களும் காலி குடங்களுடன் திரண்டு வந்திருந்தனர். கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் ஆர்ப்பாட்டம் நடந்தது. உணர்ச்சி எரிமலையாய் திரண்டிருந்த கூட்டம், சாதி வெறியர்களுக்கும் காவல்துறைக்கும் கடும் எச்சரிக்கை செய்தது. கழகப் பொதுச் செயலாளர் கோவை இராமகிருட்டிணன், விடுதலை இராசேந்திரன், பேராசிரியர் சரசுவதி, செங் கோட்டையன் (தலித் விடுதலைக் கட்சி), சி. கலை யரசன் (விடுதலை சிறுத்தைகள்), வழக்கறிஞர் அலெக்சு, வெண்மணி (தமிழர் விடுதலை இயக்கம்), கார்க்கி (சமத்துவ முன்னணி), மகேந்திரன் (அண்ணல் அம்பேத்கர் துப்புரவு பணியாளர் சங்கம்), மாணிக்கம் (ஆதித் தமிழர் பேரவை), பன்னீர் செல்வம் (தமிழ் நாடு மாணவர் கழகம்), ஈசுவரன் (கழக அன்னூர் ஒன்றிய செயலாளர்) ஆகியோர் கண்டன உரை நிகழ்த்தினர். தண்ணீர் பிடித்ததற்காக தாக்கப்பட்ட பள்ளி மாணவன் வசந்தகுமார், நடந்த சம்பவத்தை விளக்கினார். மாவட்ட செயலாளர் ஆ. நாகராசன் தொகுத்து வழங்கினார்.

சேலம், திருச்சி, பழனி, ஈரோடு, கடத்தூர், மேட்டூர், காவாக்குடி, திருப்பூர், பல்லடம், பொள்ளாச்சி, சூலூர், பழனி பகுதியிலிருந்து கழகத்

2 ஆம் பக்கம்

**– புரட்சிப் பெரியார் முழக்கம் 30.06.2011**

# சாதி – தீண்டாமை குற்றங்களை மறைக்கும் மனித உரிமை அமைப்பு – காவல்துறைக்கு கழகத் தலைவர் கடும் எச்சரிக்கை




*முதல் பக்கத் தொடர்ச்சி*

தோழர்கள் தனி வேன்களிலும், பேருந்துகளிலும் திரண்டு வந்திருந்தனர். கழகத் தோழர்கள் கோவை பன்னீர்செல்வம், புளியம்பாடி இராசேந்திரன், அரியலூர் சதீஷ், திண்டுக்கல் இராவணன், திருமலையம் பாளையம் சிலம்பரசன், அன்னூர் ஜோதிராம், பல்லடம் விஜயன், வேடசந்தூர் காளிமுத்து ஆகியோர் 3 நாட்கள் அன்னூர் பகுதி முழுதும் கிராமம் கிராமமாகச் சென்று போராட்டத்தை விளக்கி மக்களை அணி திரட்டினர். அன்னூரில் அனல் கக்கிய வெயிலில் பகல் 11.30 மணிக்கு தொடங்கி 2 மணி நேரம் ஆர்ப்பாட்டம் உணர்ச்சிப் பெருக்கோடு நடைபெற்றது. ஆர்ப்பாட்ட இறுதியில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி ஆற்றிய உரை:

அன்னூர் பகுதியில் நடந்து வரும் தீண்டாமை கொடுமை அவ்வப்போது அதற்கு வருகிற எதிர்ப்புகளையெல்லாம் மீறி, மீண்டும் தொடர்ந்து கொண்டிருப்பதை நாம் காண்கிறோம். சில மாதங்களுக்கு முன்னால் அங்கிருக்கிற ஒரு கல்வெட்டு சுவரின் மீது சட்டையோடு அமர்ந்திருந்தார்கள் என்பதற்காக சிலர் தாக்கப்பட்டுள்ளனர். முடிதிருத்த மறுக்கிறார்கள். தேனீர் கடைகளில் இரட்டை குவளை. இந்த கொடுமைகள் எல்லாம் நீடிக்கிறது என்பதை சுட்டிக்காட்டுவதற்கு, வழக்குகள் தொடுக்கப்பட்டன. போராட்டங்கள் நடத்தப்பட்டன.

கடந்த மே மாதம் 21 ஆம் நாள் பொதுச் செயலாளர் கோவை இராமகிருட்டிணன் தலைமையில் ஆர்ப்பாட்டம் இங்கு நடந்தது. எந்தெந்த பகுதிகளில் என்னென்ன வடிவங்களில் தீண்டாமை இருக்கிறது என்பதை, அந்த போராட்ட துண்டறிக்கையில் மிகத் தெளிவாக குறிப்பிட்டிருந்தார்கள். குறிப்பாக குறுக்கிளையம்பாளையம் கோவிந்தன் தேனீர் கடையில் இரட்டைக் குவளை இருக்கிறது. பொதுக் குழாயில் தண்ணீர் பிடிக்கத் தடை இருக்கிறது. நல்லிசெட்டிப்பாளையத்தில் ஊர் கவுண்டர் தேனீர் கடையில், பழனிச்சாமி தேனீர் கடையில் இரட்டைக் குவளை இருக்கிறது. அக்கரை செங்கப்பள்ளி சேகர் கடையில் தாழ்த்தப்பட்டோருக்கு முடிதிருத்த மறுக்கப்படுகிறது. அழகர்பாளையம் ராமசாமி கடையில் தனிக்குவளை இருக்கிறது. இவைகளுக்கெல்லாம் தீர்வு காண வேண்டும் என்பதற்காக கடந்த மாதம் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

காவல்துறையோ, அரசு அதிகாரிகளோ உரிய நடவடிக்கை எடுக்காததன் விளைவாகத்தான், இந்தப் போராட்டத்தின் தேவை ஏற்பட்டிருக்கிறது. தண்ணீர் பிடிக்கத் தடை இருக்கிறது என்பதை சுட்டிக்காட்டி ஆயிரக்கணக்கான துண்டறிக்கை வினியோகித்திருக்கிறார்கள். ஆர்ப்பாட்டத்தில் உரையாற்றிருக்கிறார்கள். பூசி மெழுகும் அதிகாரிகளின் அலட்சியப் போக்குதான், இப்படிப்பட்ட தீண்டாமை நிலவுவதற்கு காரணமாயிருக்கிறது. இரண்டாண்டுகளுக்கு முன்பு கழகம் இரட்டைக் குவளைகளுக்கு எதிராக போராட்டம் எடுத்தபோது, சமூகநீதி மற்றும் மனித உரிமை பிரிவு ஐ.ஜி. சொன்னார்... "தமிழ்நாட்டில் தீண்டாமையே இல்லை, அரசியலில் ஆதாயம் தேடும் சிலர் இப்படி சொல்கிறார்கள்"... என்று, இவர்தான் சமத்துவ தேனீர் விருந்து வைப்பதற்காக என்று, எழுபத்து இரண்டு லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கிக் கொண்டார். அதே நிலையைதான் இப்போது பார்க்கிறோம்.

இரண்டு நாட்களுக்கு முன்னால், கோட்டாட்சியர் அலுவலகத்தில் அமைதி பேச்சுவார்த்தை நடந்திருக்கிறது. அங்கு தீண்டாமை கொடுமைகள் சுட்டிக்காட்டப்பட்டிருக்கின்றன. இந்தப் பகுதியின் மனித உரிமைப் பிரிவு உதவி ஆய்வாளர் தீண்டாமை இல்லை என்ற சொல்லியதாக கோட்டாட்சியரே பதிவு செய்திருக்கிறார். இதைப் படித்துக் காட்டினால் தான் இந்த அதிகாரிகளின் யோக்கியதை தெரியும் (படிக்கிறார்)...

"அன்னூர் காவல் ஆய்வாளர் மற்றும் சமூகநீதி மற்றும் மனித உரிமை பிரிவு உதவி ஆய்வாளர், அன்னூர் உள் வட்டத்தில் இரட்டை குவளை மற்றும் முடிதிருத்த நிலையங்களில் தீண்டாமை போன்ற நிகழ்ச்சிகள் ஏதும் நடைபெறுவதில்லை என்றும், இது தொடர்பாக தனிபட்ட நபர்கள் மீது எந்தவித புகார்களும் வரவில்லை என்றும், அன்னூர் ஒன்றியத்திற்கு உட்பட்ட கிராமங்களில் அடிக்கடி தாழ்த்தப்பட்ட நபர்கள் உரிமை பிரச்சினை தொடர்பாக, தணிக்கை செய்யப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது". இது கோட்டாட்சியர் எழுதிக் கொடுத்த அறிக்கை. இவர்கள் பணியாற்றும் லட்சணம் எப்படி என்பதை தெரிந்து கொள்ளுங்கள். அந்த காவல்துறை நண்பரை நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

## வெற்றி! 'தலித்' வசந்தகுமார் தண்ணீர் பிடித்தார்!



***அன்னூரில் ஆர்ப்பாட்டம் முடிந்தவுடன் தண்ணீர் பிடிக்க மறுக்கப்பட்ட அதே குறுக்கிளையாம்பாளையம் பொதுக் குழாயில் அன்று மாலை (அப்போதுதான் தண்ணீர் வரும்) தாக்கப்பட்ட மாணவன் வசந்தகுமார், தனது தாயாருடன் சேர்ந்து தண்ணீர் பிடித்தார். தலித் மக்களும் கியூ வரிசையில் நின்று தண்ணீர் பிடித்தனர். வசந்தகுமார் தண்ணீர் பிடிக்கும் படம்.***

உண்மையிலேயே தணிக்கை செய்தீர்களா? அல்லது அறையில் உட்கார்ந்து கொண்டு அறிக்கை எழுதினீர்களா? என்பதுதான் எங்களுக்கு தெரியவில்லை. நீங்கள் நடவடிக்கை எடுத்துத் தொலையாவிட்டாலும் பரவாயில்லை. இல்லை என்று ஏன் மறுக்கிறீர்கள்? பொய்யை கூறுகிறீர்கள்?

கடந்த ஏப்ரல் மாதம் 19 ஆம் தேதி, உச்சநீதிமன்றம் தெளிவாக ஒரு தீர்ப்பை சொல்லியிருக்கிறது. ஆறுமுக சேர்வை என்பவர் ஜல்லிக்கட்டில் கலந்து கொண்ட ஒருவரைப் பார்த்து சாதிப் பெயரை சொல்லியதாக வழக்கு. தண்டனைப் பெற்ற ஆதிக்கச்சாதிகாரன் உச்சநீதிமன்றம் வரை சென்றான். அங்கு தண்டனையை உறுதி செய்ததோடு நீதிபதி நிற்கவில்லை. தமிழ்நாட்டில் பல கிராமங்களில் இரட்டை குவளை இருப்பதை அறிந்து நாங்கள் வருந்துகிறோம். இப்படிப்பட்ட கொடுமைகள் நடந்தும் நடவடிக்கை எடுக்காத பட்சத்தில், மாவட்ட ஆட்சியரையும், மாவட்ட காவல் கண்காணிப்பாளரையும் முதலில் பணியிடை நீக்கம் செய்யுங்கள், நீதிமன்றத்தில் நடவடிக்கை எடுங்கள், துறைசார் நடவடிக்கை எடுங்கள் என்று தமிழக அரசுக்கும், மற்ற மாநில அரசுகளுக்கும் உச்சநீதிமன்ற நீதிபதிகளே, அந்தத் தீர்ப்பை அனுப்பி வைத்திருக்கிறார்கள்.

நாம் அனைத்து கழக மாவட்ட பொறுப்பாளர்களிடமும், தீர்ப்பு நகலை கொடுத்திருக்கிறோம். புகார் கொடுக்கும்போது இதையும் இணைத்துக் கொடுங்கள். இப்படிப்பட்ட தீண்டாமை குற்றங்களே நடக்கவில்லை என்று பொய் அறிக்கை தரும் உதவி ஆய்வாளர் போன்ற தறுதலை அதிகாரிகளால், மாவட்ட ஆட்சியரும், மாவட்ட காவல் கண்காணிப்பாளரும்தான் பாதிக்கப்படுவார்கள். காவல்துறை அதிகாரிகளே! உங்களுடைய போக்கை மாற்றிக் கொள்ளுங்கள். நீங்கள் நடவடிக்கை எடுக்காவிட்டாலும் இருப்பதை சொல்லித் தொலைத்தால் மற்ற அதிகாரிகளாவது நடவடிக்கை எடுப்பார்கள் அல்லவா? ஏன் மறைக்கிறீர்கள்? தீண்டாமை கொடுமைகளை தடுக்காமல் இருப்பதைவிட இல்லை என்று சொல்வது மிகக் கேவலமான போக்கு என்பதை தெரிந்துக் கொள்ளுங்கள்.

1926 ஆம் ஆண்டு பின்னாளில் பொதுவுடைமை கட்சியை நடத்திய ஜீவா அவர்கள் நடத்திய சிராவயல் ஆசிரமத்தில் காந்தி வாசக சாலையை திறந்து வைப்பதற்காக பெரியாரை அழைக்கிறார்கள். அங்கு தாழ்த்தப்பட்டவர்களுக்காக காந்தி கிணறு என்று வெட்டப்பட்டிருக்கிறது. "நீங்க பொது கிணற்றில் நீர் எடுக்கப் போராடுங்கள் அல்லது தாகத்தோடு செத்துப் போங்கள், ஆனால் தனிக் கிணற்றில் நீர் எடுக்காதீர்கள்" என்று தாழ்த்தப்பட்டவர்களைப் பார்த்து பெரியார் சொன்னார். இப்பொழுது நடைபெற்ற அமைதி பேச்சு வார்த்தையில், உங்களுக்கு தனிக் குழாய் அமைத்து தருகிறோம் என்று கோட்டாட்சியர் சொல்லியிருக்கிறார். அட, பைத்தியக்காரா! இது குடிநீர் சிக்கல் அல்ல; தீண்டாமை சிக்கல் என்று நமது தோழர்கள் தெளிவாக விளக்கியிருக்கிறார்கள். தோழர்கள் சுட்டிக் காட்டியதைப்போல் அம்பேத்கர் தொண்ணூறு ஆண்டுகளுக்கு முன்னால் போராடினார். குளத்தில் தண்ணீர் எடுக்கக் கூடாது என்று நகராட்சியில் தீர்மானம் நிறைவேற்றிய பின்னாலும் போராடினார். அதைத் தான் நாம் இப்போதும் செய்து கொண்டிருக்கிறோம்.

ஆயிரம் சட்டங்கள் வந்துவிட்டன. தீண்டாமை கொடுமைகளை செய்கிறவர்கள் மீது மட்டுமல்லாது, கடமையை சரிவர செய்யாத அரசு அதிகாரிகளின் மீது வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் 4 ஆவது பிரிவின்படி தண்டனை உண்டு என்பது பற்றியாவது காவல்துறையினரே நீங்கள் அறிவீர்களா? வழக்கு தொடுத்து முப்பது நாட்களுக்குள் புலன் விசாரணையை முடிக்க வேண்டும் என்று சட்டம் சொல்கிறது. இப்பொழுது பதினைந்து நாட்கள் ஆகிவிட்டன. இன்னும் பதினைந்து நாட்கள் என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறார்கள் என்பதை பார்ப்போம். எங்கோ இருக்கிற மனித உரிமை ஆணையத்திற்கு செய்தித் தாளைப் பார்த்து அறிந்து கொள்ள முடிகிறது. ஆனால் இங்கு இருக்கிற சமூகநீதி மற்றும் மனித உரிமை பிரிவுக்கு அறிந்து கொள்ள முடியவில்லை. அவர்களை பார்த்தப் பின்னாலும் நடவடிக்கை எடுக்கவில்லை. எங்களை கைது செய்வதாக இருந்தால் நள்ளிரவு பன்னிரண்டு மணி. ஒரு மணிக்குக் கூட வருகிறீர்கள். ஆனால் இவை எவ்வளவு பெரிய குற்றங்கள்.

இவை மனித சமுதாயத்தின் சமத்துவத்திற்கு எதிரான குற்றங்கள். இவைகள் மீது நடவடிக்கை

*4 ஆம் பக்கம்*

# ராஜீவ் கொலை வழக்கில் மாத்தையாவை சேர்க்காதது ஏன்? [ 3 ]

**ராஜீவ் சர்மாவின் ‘புலிகளுக்கு அப்பால்....’ நூலுக்கு மறுப்பு தெரிவித்து, சென்னை (ஜூன் 4) வெளியீட்டு விழாவில் விடுதலை இராசேந்திரன் ஆற்றிய உரையின் தொகுப்பு.**

இந்திய உளவு நிறுவனம் விரித்த வலையில் மாத்தையா வீழ்ந்தார் என்று விடுதலைப் புலிகள் இயக்கம் உறுதியான முடிவுக்கு வந்தது. அதற்கு அழுத்தமான காரணங்கள், சூழ்நிலை சந்தர்ப்பங்களின் அடிப்படையிலான சான்றுகள் ஏராளம் இருக்கின்றன. ராஜீவ் சர்மாவின் இந்த நூல் மாத்தையா மீது எந்தக் குற்றமும் இல்லாதது போலவும், பிரபாகரன், அவரை சித்திரவதை செய்து கொன்றார் என்றும் அபாண்டமாக குற்றம் சாட்டுகிறது. நூலாசிரியர் இவ்வாறு எழுதுகிறார்:

“பிரகாகரன் ஆயுதமேந்திய சகப் போராளிகளுடன் கூட இரக்கமற்ற முறையில் நடந்து கொள்வார். 1980-க்கும் 1990-க்கும் இடைபட்ட காலத்தில் சக தமிழ் இயக்கங்களைச் சார்ந்த 300 போராளிகளை மற்றும் எல்.டி.டி.ஈ. இயக்கத்திற்குள்ளேயே அவருக்கு எதிர்ப்பு தெரிவித்த பல முக்கிய தலைவர்களைக் கொன்றார். இது சம்பந்தமாக நடந்த மிக அதிர்ச்சிகரமான சம்பவம் மாத்தையாவின் கொலையாகும். பிரபாகரன் மாத்தையாவை இரட்டை வேடம் ஆடுகிறார் என நினைத்தார். மாத்தையா கொடுத்த தகவலின் பேரிலேயே எச்.வி. அகத் கப்பல் (கிட்டு வந்த கப்பல்) அழிக்கப்பட்டது என்ற தகவல் பரவியது. ஏராளமான வெடிமருந்துகள் மற்றும் ஆயுதங்களை ஏற்றி வந்த அக்கப்பல் அழிக்கப்பட்டதால் எல்.டி.டி.ஈ.க்கு கோடிக்கணக்கில் இழப்பு ஏற்பட்டது. மாத்தையா துரோகி என குற்றம் சாட்டப்பட்டு கைது செய்யப்பட்டார்; தனிச் சிறையில் அடைக்கப்பட்டார்” (பக்.174) என்றெல்லாம் எழுதுகிறார் நூலாசிரியர்.

மாத்தையா மீது சந்தேகத்தின் அடிப்படையில் ஒரு வீண் பழியை சுமத்தியது போலவும், கிட்டு வந்த கப்பலை மாத்தையா காட்டிக் கொடுத்தார் என்று, ஆதாரம் ஏதுமின்றி தகவல்களைப் பரப்பினார் என்றும் இந்த நூல் பதிவு செய்கிறது. மாத்தையா ஒரு வருட காலம் விசாரணைக் கைதியாக இருந்த போதும் சரி, பிறகு அவருக்கு மரண தண்டனை வழங்கப்பட்டபோதும் சரி, மாத்தையாவை பிரபாகரன் சந்திக்கவே இல்லை என்றும் நூல் குற்றம் சாட்டுகிறது. இதையெல்லாம்விட மாத்தையாவுக்கு மரண தண்டனை வழங்கியதற்கு பிரபாகரனுக்கு ‘உள்நோக்கம்’ உண்டு என்ற முடிவுக்கும் நூலாசிரியர் வருகிறார். இவ்வாறு எழுதுகிறார்:

“மாத்தையாவின் கதை முடிந்து விட்டது. ஆனால், மாத்தையா உண்மையிலேயே இரட்டை வேடம் ஆடினாரா அல்லது அவர் மிகப் பலம் பொருந்தியவராக உருவானதால் பிரபாகரன் அவரை அழித்தாரா என்பது யாருக்கும் தெரியாது” என்று ‘யாருக்கும் தெரியாத’ ஒரு உண்மையை தனக்கும் தெரியாத ஒன்றை, பிரபாகரனை களங்கப்படுத்த வேண்டும் என்ற ஒரே நோக்கத்தோடு நஞ்சை கக்குகிறார், இந்நூலாசிரியர். பிரபாகரனை இழிவுபடுத்தி, அவரது மாண்பையும் கவுரவத்தையும் நேர்மையையும் களங்கப்படுத்தும் உளவுத் துறையின் எண்ணத்தை அப்படியே பிரதிபலிக்கிறார் நூலாசிரியர்.

மாத்தையாவுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டதைத் தொடர்ந்து ‘இந்தியா டுடே’ வெளியிட்ட சிறப்புக் கட்டுரை ஒன்றை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இத்தனைக்கும் ‘இந்தியா டுடே’ புலிகளின் ஆதரவு பத்திரிகை அல்ல; மாத்தையா இந்தியாவின் வலையில் வீழ்ந்தார் என்பதை, இந்த செய்தி உறுதிப்படுத்துகிறது. 1994 ஆம் ஆண்டு ‘இந்தியா டுடே’ இதழில் (மார்ச் 16) அதன் செய்தியாளர்கள் எழுதிய விரிவான கட்டுரையிலிருந்து ஒரு முக்கிய பகுதி இது.

> “1993 ஆம் ஆண்டு ஜனவரி 16 ஆம் தேதி - சர்வதேசக் கடலில் சென்று கொண்டிருந்த விடுதலைப்புலிகளின் ‘எம்.வி. அகத்’ கப்பலை - இந்தியாவின் கடலோரப் பாதுகாப்புப் படை சுற்றி வளைத்தபோது, கப்பலில் இருந்த, விடுதலைப் புலிகளின் முக்கிய தளபதி கிட்டு, கப்பலுக்குத் தீ வைத்துக் கொண்டு, தன்னைத் தானே அழித்துக் கொண்டார். கிட்டு கப்பலில் வரும் தகவலை இந்திய உளவு நிறுவனத்துக்கு முன்கூட்டியே தந்தது மாத்தையாவும், யோகி யோகரத்தினமும் தான் என்று பிரபாகரன் குற்றம் சாட்டினார். 1989 - 90 இலங்கை அரசுடன் நடத்திய பேச்சு வார்த்தையில் அரசியல் தீர்வுக்கு மாத்தையா உடன்பட வேண்டும் என்று கூறியதை, பிரபாகரன் ஏற்கவில்லை. இந்தக் கருத்து வேறுபாடு, மேலும் தீவிரமடைந்தது தொடர்ந்து 1991-ல் நடந்த ஆணையிரவு தாக்குதலில் கிடைக்க வேண்டிய வெற்றி, கடும் பின்னடைவை சந்தித்தது. இதற்குக் காரணம் மாத்தையாவே என்று குற்றம் சாட்டினார் பிரபாகரன். தொடர்ந்து 1992 மே மாதத்தில் மாத்தையாவுக்கு தரப்பட்ட பொறுப்புகளிலிருந்து அவர் விடுவிக்கப்பட்டார். தொடர்ந்து நவம்பரில் யாழ்ப்பாண மருத்துவமனைக்கு அருகே பிரபாகரன் தங்கியிருந்த மறைவிடம், குண்டுவீச்சுக்கு உள்ளானது. புலிகளின் உளவுப் பிரிவுத் தலைவர் பொட்டு அம்மான் மீது தாக்குதல் நடத்தப்பட்டதில், அவரது உதவியாளர் 1993 ஜன.7-ல் கொல்லப்பட்டார். அடுத்த பத்து நாட்களில் ஜனவரி 16-ல் கிட்டு வந்த கப்பல் இந்திய கப்பல் படையால் சுற்றி வளைக்கப்பட்டது. மாத்தையாவும், அவரது பழைய நண்பரான என்ஜினியர் என்று அறியப்பட்ட மாணிக்கவாசகம் என்பவரும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர். மாத்தையாவின் ஆதரவாளர்கள் 120 பேர் கைது செய்யப்பட்டனர். விடுதலைப்புலிகளின் ராணுவ நீதிமன்றம் - 1993 டிசம்பர் 19 ஆம் தேதி வழங்கிய தீர்ப்பில் கிட்டுவின் மரணத்துக்குக் காரணமானவர் மாத்தையா தான் என்றும், ‘ரா’ (RAW) உளவு நிறுவனத்தோடு சேர்ந்து பிரபாகரனை கொல்வதற்கு மாத்தையா சதித் திட்டம் தீட்டினார் என்றும், ‘ரா’வின் முகவராக மாத்தையா செயல்பட்டார் என்றும் புலிகளின் நீதிமன்றம் உறுதிப்படுத்தியது”.

இதிலிருந்து என்ன தெரிகிறது?

1992 ஆம் ஆண்டில் மாத்தையா புலிகள் இயக்கப் பொறுப்பிலிருந்து விடுவிக்கப்பட்டு விடுகிறார். 1989 ஆம் ஆண்டிலிருந்தே புலிகள் இயக்கத்தில் மாத்தையாவின் தலைமையில் அவரது ஆதரவாளர்கள் குழு ஒன்று இந்தியாவின் உளவு நிறுவனத்துடன் ரகசிய தொடர்பில் செயல்படத் தொடங்கிவிட்டது.

1991 ஆம் ஆண்டு ஆனையிரவில் நடந்த முதல் தாக்குதலில் புலிகள் கடும் பின்னடைவைச் சந்திக்க நேர்ந்தது. 123 பெண் புலிகள் உட்பட 573 புலிகள் இந்தப் போரில்தான் உயிர் பலியானார்கள். இயக்கத்துக்குள்ளே மாத்தையா நடத்திய சதிதான் இதற்குக் காரணம் என்ற தகவல் புலிகளின் உளவுப் பிரிவு கண்டறிந்து பிரபாகரனுக்கு தெரிவித்தது. பொறுப்புகளிலிருந்து மாத்தையா விடுவிக்கப்பட்டவுடன், யாழ்ப்பாண மருத்துவமனைக்கு அருகே பிரபாகரன் தங்கியிருந்த ரகசியமான மறைவிடம் குண்டுவீச்சுக்கு உள்ளானதோடு பொட்டு அம்மான் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டதில் அவரது உதவியாளர் பலியாகியுள்ளார். மாத்தையாவிடம் நடத்திய விசாரணையில் பல்வேறு உண்மைகள் வெளிச்சத்துக்கு வந்தன. 1993 ஜனவரியில் கிட்டுவின் உயிர்த் தியாகத்தை தொடர்ந்து மாத்தையா தலைமையிலான விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணி என்ற புலிகளின் அரசியல் பிரிவு கலைக்கப்படுவதோடு துணைத் தலைவர் என்ற 2 ஆம் நிலையிலிருந்து மாத்தையா நீக்கப்பட்டவுடன் பிரபாகரனுக்கு எதிராக வெளிப்படையாகவே போர்க்கொடி உயர்த்தினார் மாத்தையா. அப்போது கொக்குவில் என்ற பகுதியில் விடுதலைப் புலி ஆலோசகர் பாலசிங்கம் தங்கியிருந்தார். அவரது வீட்டுக்குப் போன மாத்தையா, அங்கே தாம் பிரபாகரனை எதிர்த்து உண்ணாவிரதப் போராட்டம் தொடங்கப் போவதாக அறிவித்தார். இதை அடேல் பாலசிங்கம் தனது நூலில் சுட்டிக்காட்டியுள்ளார்.

பிரபாகரனின் மெய்க்காப்பாளராக இருந்த ஒரு விடுதலைப்புலி தமிழ்நாட்டில் கைது செய்யப்பட்டு, வேலூர் சிறையில் அடைக்கப்பட்டிருந்தார். அவர் வேலூர் சிறையிலிருந்து உளவுத் துறை உதவியுடன் ரகசியமாக விடுவிக்கப்பட்டார். பிரபாகரனை கொல்வதற்கு வேலூர் சிறையிலே திட்டங்கள் தயாரிக்கப்பட்டு, அதனடிப்படையிலேதான் விடுதலை செய்யப்பட்டார் என்ற அதிர்ச்சியான தகவல் மாத்தையாவிடம் நடத்திய விசாரணையிலிருந்து தெரிய வந்தது. மாத்தையாவின் கொழும்புப் பயணங்களும் இந்திய உளவுத் துறை அதிகாரிகளுடன் அவருக்கிருந்த தொடர்புகளும் விசாரணையில் வெளி வந்தது.

இங்கே நான் எடுத்துக்காட்டிய ‘இந்தியா டுடே’ கட்டுரையில் கடைசியாக கூறப்பட்ட, இரண்டு வாக்கியங்கள் மிகவும் முக்கியமானதாகும். “பிரபாகரன் இனிமேல் தான் மிகக் கடுமையான சோதனைகளை எதிர்க்கொள்ளப் போகிறார் என்ற கருத்தில் உளவு நிறுவனம் மிகவும் திருப்தியடைந்திருந்தது” (Indian intelligent agencies are convinced, he (Prabhakaran) is facing his toughest test yet); அதாவது மாத்தையாவின் துரோக நடவடிக்கைகள் தொடங்கியதற்குப் பிறகு, அவரது கீழறுப்பு நடவடிக்கைகள் வெற்றி பெற்றுவிடும் என்ற நம்பிக்கையில் உளவுத் துறை திளைத்திருந்தது என்று எழுதியிருப்பதிலிருந்தே உளவுத் துறையுடன் மாத்தையாவுக்கு உள்ள தொடர்பு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. கடைசியாக, ‘ரா’ உளவு நிறுவனத்துக்கு “மாத்தையா சிறந்த சொத்துதான் என்றால், மாத்தையாவின் மர்மமான நடவடிக்கைகள் மேலும் அதிகமாகலாம்! - (But if Mahathya was indeed a ‘RAW’ asset, there might be more to Mahathya mystery” - India Today) - இந்தியா டுடே கட்டுரையின் இந்த இறுதி வாசகம் மாத்தையா ‘ரா’ உளவு நிறுவனத்தின் வலையில் சிக்கியதை உறுதிப்படுத்துகிறது.

இவை எல்லாவற்றையும்விட மற்றொரு முக்கிய செய்தியை சுட்டிக்காட்ட வேண்டும். 1991 ஆம் ஆண்டு ராஜீவ் கொலை நடக்கிறது. அப்போது பிரபாகரனுக்கு அடுத்த இரண்டாம் நிலை தலைவர் மாத்தையா; 1992 ஆம் ஆண்டு, இந்திய உளவுத் துறை குற்றப் பத்திரிகை தாக்கல் செய்கிறது. அதில் பிரபாகரன் முதல் குற்றவாளியாக சேர்க்கப்பட்டார். உளவுப் பிரிவுத் தலைவர் பொட்டு அம்மன் குற்றவாளியாக சேர்க்கப்பட்டார். ஆனால் இரண்டாம் நிலை தலைவராக இருந்த மாத்தையாவின் பெயர் குற்றப் பத்திரிகையில் இடம் பெறவில்லை. இந்திய உளவுத் துறை அவர் பெயரை மட்டும் விட்டு விடுகிறது; ஏன்? 1989 ஆம் ஆண்டில் மாத்தையா பிரபாகரனை சுட்டுக் கொன்றுவிட்டார் என்ற செய்தியை உளவுத் துறை வெளியிட்டு, அதை ஊடகங்கள் பரப்பியதையும், 1994 ஆம் ஆண்டு வெளிவந்த ‘இந்தியா டுடே’ கட்டுரையையும் ராஜீவ் கொலை வழக்கில் மாத்தையாவின் பெயர் சேர்க்கப்படாததையும் இணைத்துப் பார்த்தால் மாத்தையா இந்திய உளவுத் துறையின் சதியில் வீழ்ந்து விட்டார் என்ற முடிவுக்கே வர முடியும். இவ்வளவு பின்னணிகளையும் மறைத்து ராஜீவ் சர்மாவின் இந்த நூல், மாத்தையா தன்னைவிட செல்வாக்குள்ள தலைவராக வளருகிறார் என்ற காரணத்தால், பிரபாகரன் மாத்தையாவுக்கு மரண தண்டனை விதித்திருக்கலாம் என்ற சந்தேகத்தைக் கிளப்புவது, என்ன நியாயம்? என்ன நேர்மை? பிரபாகரனை தீர்த்துக் கட்டுவதற்கு இந்திய உளவுத் துறையால் உருவாக்கப்பட்டவரே மாத்தையா என்ற உண்மையை மறைத்து பிரபாகரன் மீதே குற்றம் சாட்டும் இந்த நூலாசிரியர், கண்மூடித்தனமாக ஈழத்தில் நடந்த கொலைகள் எல்லாவற்றையும் விடுதலைப் புலிகள் தான் செய்தனர் என்று எந்த ஆதாரமும் இன்றி குற்றக் கூண்டில் ஏற்றி விடுகிறார்.

இலங்கை அதிபர் பிரேமதாசா, தமிழ் அய்க்கிய விடுதலை கூட்டணித் தலைவர் அமிர்தலிங்கம், புளோட் இயக்கத் தலைவர் முகுந்தன், இலங்கையின் ராணுவ அமைச்சர் ரஞ்சன் விஜயரத்னே என்று இவர்கள் அனைவரையும் விடுதலைப் புலிகள் கொலை செய்தார்கள் என்று இந்த நூல் திரும்ப திரும்ப குற்றம்சாட்டுகிறது. விடுதலைப் புலிகள்தான் இந்தக் கொலைகளை செய்தார்கள் என்பதற்கு எந்த ஒரு சான்றையும் முன் வைக்கவில்லை. உளவுத் துறை கட்டவிழ்த்துவிட்ட பொய்யுரைகளை அப்படியே திரும்பவும் ‘கிளிப்பிள்ளை’ போல மீண்டும் மீண்டும் கூறுகிறார், நூலாசிரியர். இந்த வீண்பழிகளை நம்மால் ஆதாரங்களுடன் மறுக்க முடியும்.

முதலில் பிரேமதாசா பிரச்சினைக்கு வருவோம்; பிரேமதாசா பதவிக்கு வந்த காலம் - சூழ்நிலை எத்தகையது? இதை நாம் பார்க்க வேண்டும்.

**– தொடரும்**

**திருத்தம்**

16.6.2011 இதழில் ராஜீவ் சர்மா நூல் மறுப்புரையில் சந்திரசாமி மரணமடைந்து விட்டதாக வந்த செய்தி தவறு. தவறுக்கு வருந்துகிறோம்.

PURATCHI PERIYAR MUZHAKKAM TAMIL WEEKLY REG.NO.TN/CCN/488/09-11 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/09-11
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/7776

# அதிகாரிகளே! நீங்கள் மக்களின் வேலைக்காரர்கள்தான்!

*2 ஆம் பக்கத் தொடர்ச்சி*

எடுக்காத போக்குதான் இருந்து கொண்டிருக்கிறது. இப்படி தனித்தனி நிகழ்ச்சிகளாக போராட வேண்டியிருக்கிறது. இன்னொரு பக்கம் தத்துவ ரீதியாக இப்படிப்பட்ட தீண்டாமை அதைத் தாங்கி பிடித்துக் கொண்டிருக்கிற சாதிகள், அதை தாங்கி பிடித்துக் கொண்டிருக்கிற இந்து மதம், வேதங்கள், சாஸ்திரங்கள் இவைகள் எல்லாம் அடியோடு ஒழிக்கப்பட வேண்டும் என்பதுதான் பெரியாரும் அம்பேத்கரும் இந்த சமுதாயத்திற்கு விட்டுச் சென்ற கருத்துகள். அதை நோக்கி ஒரு பக்கம் தத்துவ தளத்தில் நகருகிறபோது, சமுதாயத்தில் நடக்கிற இப்படிப் பட்ட தீண்டாமை கொடுமைகளுக்கு எதிராக நாம் அவ்வப்போது, உடனே எதிர் வினை ஆற்றியாக வேண்டும். நான் மீண்டும் மீண்டும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். மனித உரிமை பிரிவு செய்கிற தவறுகளால், மாவட்ட ஆட்சியரும், மாவட்ட காவல் கண்காணிப்பாளரும், பதவி இழக்கப் போகிறார்கள் என்பதுதான் எங்களுக்கு வருத்தமாக இருக்கிறது. குட்டி நாய் குலைத்து பெரிய நாய்க்கு ஆபத்து என்று சொல்வார்கள். அதுபோல இவர்கள் செய்கிற தவறுகளால் மேலதிகாரிகளுக்கு ஆபத்து என்பதை அவர்களும் புரிந்து கொள்ள வேண்டும்.

**நீங்கள் வேலைக்காரர்கள்**

அதிகாரிகள் என்பவர்கள், எங்களுடைய வரிப் பணத்தில் சம்பளம் பெறுகிற வேலைக்காரர்கள், பணக்காரர்களைப் போல் எங்களால் தனித்தனியாக கூர்க்கா - செக்யூரிட்டி வைத்துக் கொள்ள முடியாது என்பதால் அரசாங்கத்தின் மூலம் உங்களை ஏற்பாடு செய்திருக்கிறோம். எங்களுடைய வேலைக்காரர்களாகிய நீங்கள் வேலையை சரியாக செய்யவில்லை என்றால், உங்கள் மீது நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் எஜமானர்களாகிய எங்களுக்கு உண்டு. எந்த வன்கொடுமை நிகழ்ந்தாலும் 3(1)(10) பிரிவைத்தான் போடுவீர்கள்? அந்தப் பிரிவு வழக்கில் உச்சநீதிமன்றம் ஆறுமுகம் சேர்வைக்கு, தண்டனையை உறுதிச் செய்திருக்கிறது. ஏன் நீர் உரிமையை மறுத்ததற்காக 3(1)(5) பிரிவையும் சேர்த்துப் போட மாட்டீர்களா? எங்களுக்கு எந்த தனிப்பட்ட அதிகாரி மீதோ, குறிப்பிட்ட நபர் மீதோ கோபம் இல்லை. இதை செய்கிற யாராக இருந்தாலும் கோபம் வராமல் இருக்கப் போவதும் இல்லை, இது, பொதுக் குழாயில் நீர் எடுப்பதற்கு மட்டுமான போராட்டம் அல்ல. செல்போனில் பேச கூடாது. பைக்கில் போகக் கூடாது என்கிற கொடுமை பற்றி, “டைம்ஸ் ஆப் இந்தியா” பத்திரிகையில் செய்தி வருகிறது. எங்கோ இருக்கிற மனித உரிமை ஆணையத்திற்கு செய்தித்தாளைப் பார்த்து அறிந்து கொள்ள முடிகிறது. ஆனால் இங்கு இருக்கும் காவல்துறை புகார் ஏதும் வரவில்லை என்கிறார்கள்.

புகார் கொடுக்க வருபவர்களை அங்கும் இங்கும் அலைக்கழித்துக் கொண்டு தானே இருக்கிறீர்கள்? எப்படி புகார் கொடுப்பார்கள்? தீண்டாமை இருப்பது பற்றி தெரிந்த பின்னாலாவது இது குறித்து பிரச்சாரம் செய்ய வேண்டும், காவல் துறையை வருவாய் துறையை அழைத்துச் சென்று, தீண்டாமை நிலவும் பகுதிகளை காட்ட வேண்டும், அதை தடுத்து நிறுத்த வேண்டும் என்று எல்லாம் சட்டத்தில் இருக்கிறது. இந்த சமுதாயத்தின் கால் பகுதியாக இருக்கிற மக்களை, பிடித்திருக்கிற கொடுமைகளுக்கு நாம் தீர்வு காண்போம். தீர்வு காண்பதற்கான முயற்சியில் ஒன்றுதான் இந்தப் போராட்டம். அந்தச் சிறுவனை அடிக்கிறபோது ஒலிப்பதிவு செய்திருக்கிறார்கள். அதை எங்களுடைய பொதுச் செயலாளர் கோவை இராம கிருட்டிணன் பத்திரிகையாளர்களிடம் வெளியிட்டுள்ளார். ‘நக்கீரன்’ இதழ் பேட்டியில், பாதிப்புக்குள்ளான சிறுவன் வசந்தகுமார், தன்னைத் தாக்கியதில் கலாமணி என்ற பெண்ணின் பெயரைக் குறிப்பிட்டிருக்கிறார். மற்ற இரண்டு பெண்கள் யார் என்பதை விசாரித்தறிய வேண்டும். இவைகளை வைத்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். அதோடு இப்படிப்பட்ட கொடுமைகள் தடுத்து நிறுத்தப்பட வேண்டும். இனி இப்படிப்பட்ட கொடுமைகள் நிகழக் கூடாது என்பதை எதிர்பார்த்துதான் இந்தப் போராட்டம். இதை கேட்டுக் கொண்டிருக்கிற உளவுத் துறை உரிய அதிகாரிகளுக்கு சரியான செய்தியை சொல்லுங்கள். அதிகாரிகள் தீண்டாமைகளை நிகழாமல் தடுக்க வேண்டும் என்று எச்சரித்தார். தோழர்கள் அனைவருக்கும் ஆர்ப்பாட்ட இறுதியில் மாட்டிறைச்சி பிரியாணி கழக சார்பில் வழங்கப்பட்டது.

## ‘இரட்டைக் குவளை’ப் போல ‘இரட்டைப் பேருந்து!’

இரட்டைக் குவளை, இரட்டை சுடுகாடு என்பதுபோல் அரசுப் பேருந்திலும் இரட்டைப் பேருந்து வந்துவிட்டது. இந்த அவலத்தை அன்னூர் ஆர்ப்பாட்டத்தில் கழகப் பொதுச் செயலாளர் கோவைஇராமகிருட்டிணன் தனது உரையில் குறிப்பிட்டார். “தொண்டாமுத்தூர் ஒன்றியத்தில் கேம்பனூர் எனும் கிராமத்தில், ஆதிக்க சாதியினர் வாழ்கிறார்கள். அதே ஒன்றியத்தில் அண்ணா நகர் பகுதியில் தலித் மக்கள் வாழ்கிறார்கள். அண்ணா நகர் பகுதியிலிருந்து பேருந்து வசதிகள் ஏதும் இல்லை. சட்டசபை தேர்தலின்போது தங்கள் தொகுதியில் போட்டியிட்ட அ.தி.மு.க. வேட்பாளர் எஸ்.பி. வேலுமணியிடம் தங்கள் பகுதியிலிருந்து பேருந்து வசதி செய்ய வேண்டும் என்று கோரிக்கை வைத்தனர். எஸ்.பி. வேலுமணி, வெற்றிப் பெற்று அமைச்சராகிவிட்டார். அமைச்சரானவுடன், அண்ணா நகர் பகுதி மக்களுக்கு தாம் அளித்த உறுதிமொழியை நிறைவேற்றினார். அண்ணா நகர் பகுதியிலிருந்து அரசு பேருந்துகள் விட ஏற்பாடு செய்யப்பட்டது. பேருந்து கேம்பனூர் வரும்போது இருக்கைகள் நிரம்பிவிடும். அருந்ததி மக்கள், புறப்படும் இடமான அண்ணா நகரில் ஏறி இருக்கைகளைப் பிடித்து விடுவார்கள். அருந்ததியினர் பேருந்தில் உட்கார்ந்து கொண்டு, நாங்கள் ‘மேல்சாதி’க்காரர்கள் நின்று கொண்டு வருவதா என்று, கேம்பனூர் ஆதிக்கசாதியினர் போராட்டம் நடத்தினர். உடனே கேம்பனூரிலிருந்து புறப்படுவதற்கு தனிப் பேருந்துகள் ஏற்பாடு செய்யப்படும் என்று அமைச்சர் வேலுமணி அறிவித்து, இப்போது, அண்ணா நகரிலிருந்து புறப்படும் பேருந்து; கேம்பனூரிலிருந்து புறப்படும் பேருந்து என்று இரட்டைப் பேருந்துகள் ஓடத் தொடங்கியுள்ளன. ‘தீண்டாமை’ பேருந்துக்குள்ளும் வந்துவிட்டது” என்று கோவை இராமகிருட்டிணன் குறிப்பிட்டார்.

## இனப் படுகொலை: மதுரை போடியில் விளக்கக் கூட்டங்கள்

போர்க் குற்றவாளி ராஜபக்சே மீது நடவடிக்கை எடுக்க இந்தியா அய்.நா.வை வலியுறுத்த வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்து 18.6.2011 அன்று மாலை போடி நாயக்கனூர் வ.உ.சி. சிலை அருகில் கழகப் பொதுக் கூட்டம் ராசு தலைமையில் நடந்தது. சமர்பா குழுவினர் எழுச்சி இசை நிகழ்ச்சியும், அதைத் தொடர்ந்து சிற்பி ராசன் மந்திரமா தந்திரமா நிகழ்ச்சியும் சிறப்புடன் நடந்தது. தொடர்ந்து சுந்தர வஞ்சியத்தேவன் (நாம் தமிழர் கட்சி), ஆதி. நாகராசு (தமிழ்ப் புலிகள் இயக்கம்), கழகப் பேச்சாளர் தூத்துக்குடி பால். பிரபாகரன் உரையாற்றி யதைத் தொடர்ந்து, கழகத் தலைவர் கொளத்தூர் மணி உரையாற்றினார். சி.கா. இராமச்சந்திரன் வரவேற்புரை நிகழ்த்தினார். மாவட்ட காங்கிரஸ் அமைப்பாளர் மாரி இனிப்பக உரிமையாளர் எஸ்.எம்.எஸ். அரிகரன், தமது இல்லத்தில் கழகத்தினருக்கு இரவு உணவு வழங்கினார். கழகத் தோழர் ஞான. சரவணன், கூட்டத்துக்கான ஏற்பாடுகளை செய்திருந்தார். போடி நாயக்கனூர் பகுதியில் பெரியார் திராவிடர் கழகம் வளரத் தொடங்கியுள்ளது. காவல்துறை கெடுபிடிகள் இருந்தாலும் பொது மக்கள் ஏராளமாக திரண்டு வந்து, இறுதி வரை கருத்துகளைக் கேட்டனர்.

போர்க் குற்றவாளி ராஜபக்சே மீது நடவடிக்கை எடுக்க அய்.நா.வில் இந்தியா வலியுறுத்தக் கோரி கழக சார்பில் 16.6.2011 அன்று மாலை மதுரை கோரிபாளையம் பள்ளி வாசல் தெருவில் பொதுக் கூட்டம், வழக்கறிஞர் அ. பெரியசாமி தலைமையில் (மாநகர மாவட்ட தலைவர்) நடந்தது. மாவட்ட செயலாளர் விடுதலை சேகர் வரவேற்புரையாற்றினார். வழக்கறிஞர்கள் பகத்சிங், பெரியார் வேந்தன், கழகத் தோழர்கள் தமிழ்ப்பித்தன், ஸ்டாலின் ஆகியோர் உரையாற்றினர். சிற்பி ராசன் ‘மந்திரமா, தந்திரமா’ நிகழ்ச்சியை நடத்தினார். நிறைவாக கழகப் பொதுச் செயலாளர் கோவை இராமகிருட்டிணன், தலைவர் கொளத்தூர் மணி சிறப்புரையாற்றினர்.

## நன்கொடை

மேட்டூர் கழகத் தோழர் பாபு (எ) முகமது அலி சகோதரியும், கழக ஆதரவாளருமான அப்ரோஸ் - காதர் இணையர் புதிதாக கட்டிய இல்லத் திறப்பு விழா 19.5.2011 மகிழ்வாக கழக ஏட்டிற்கு ரூ.1000 (ஆயிரம் ரூபாய்) வழங்கினர். நன்றியுடன் பெற்றுக் கொண்டோம் (ஆர்)

## ஈரோட்டில் கழக சார்பில் மருத்துவ முகாம்: பகுத்தறிவு பிரச்சார பொதுக் கூட்டம்

கழகத்தின் பகுத்தறிவுப் பிரச்சார பொதுக் கூட்டம் 28.5.2011 சனிக்கிழமை அன்று ஈரோடு பெரியார் நகரில் நடந்தது. பொதுக் கூட்டத்தில் பகுத்தறிவாளர் பேரவை சார்பாக இலவச மருத்துவ பரிசோதனை வழிகாட்டும் முகாம் நடைபெற்றது. இந்நிகழ்வினை சத்தியமூர்த்தி துவக்கி வைக்க பகுத்தறிவு பேரவையின் தோழர்கள் மருத்துவர் சக்திவேல் மற்றும் மருத்துவர் இராவணன் ஆகியோர் முகாமில் கலந்து கொண்டு பொது மக்களுக்கு மருத்துவ ஆலோசனைகளை வழங்கினர்.

பொதுக் கூட்டத்திற்கு பகுத்தறிவாளர் பேரவை காளிமுத்து தலைமையேற்க சிற்பி இராசன், மந்திரமா தந்திரமா நிகழ்ச்சி நடைபெற்றது. கழகத்திற்கு எதிராக இந்து முன்னணி சார்பாக கண்டன துண்டறிக்கை போட்டு இருந்தார்கள். துண்டறிக்கையில் கேட்கப்பட்டு இருந்த கேள்விகளுக்கு சிற்பி இராசன் இந்து மதத்தில் புரையோடிக் கிடக்கும் புராண குப்பைகளின் கதைகளை வைத்து தெளிவான பதிலை நெத்தியில் அடித்தாற்போல் கூறினார். அதன் பின்னர் இராம. இளங்கோவன், வேலுச்சாமி ஆகியோர் சிறப்புரையாற்றினர். மோகன்தாஸ் நன்றியுரை வழங்கினார். நிகழ்வில் பெருமளவில் பொது மக்களும், கழகத் தோழர்களும், பகுத்தறிவாளர் பேரவை தோழர்களும் பெருந்திரளாகக் கலந்து கொண்டனர். விழாவிற்கான ஏற்பாடுகளை பகுத்தறிவாளர் பேரவை தோழர்கள் சிவக்குமார், மோகன்ராசு, சுரேஷ், சசி மற்றும் கழகத் தோழர் இரத்தினசாமி ஆகியோர் ஏற்பாடு செய்திருந்தனர்.

“புரட்சிப் பெரியார் முழக்கம்”
ஆண்டுக்கட்டணம் ரூ.150/-
தொடர்புக்கு:
ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர், திருவான்மியூர்,
சென்னை-41. ✆ 99416 13535

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 30th June 2011

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.